# சுயம்பு

## சிறப்புமலர் - 1



கலாசாரப் பேரவை
மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகம்
பட்டிப்பளை
- 2012 -

# நூல் விபரம்

| | |
|---|---|
| பெயர் | : சுயம்பு |
| வெளியீடு | : கலாசாரப் பேரவை மண்முனை தென்மேற்கு, பட்டிப்பளை. |
| அட்டைப்படம் | : செல்வன். நல்லதம்பி சிவதர்சன் அம்பிளாந்துறை |
| பக்கங்கள் | : 96 + 06 (படங்கள்) |
| அச்சுப்பதிப்பு | : மாருதி அச்சகம் - களுதாவளை |


## *SUYAMBU - I*

**SPECIAL PUBLICATION TO EXPRESS CULTURAL DAY - 2012.**

Conducted by Cultural Association,
Divisional Secretariat ,
Manmunai South West, Paddipalai.


**Editorial Board:**

Mr.V.Selvarajah
Miss.N.Valarmathy
Mr.P.Nethydevan
Mr.A.L.M.Fouzan
Miss.P.Thevaki
Mr.S.Kuhan
Mr.S.Leanard Lorenzo
Mr.A.Puwaneshwaran
Mr.V.Jegatheeshan
Mrs. P. Seetharalingam
Mr.T.Jeevanathan

Advisor

**Mrs. Shivapiriya Vilvaratnam,**
Divisional Secretary,
Manmunai South West,
Paddipalai.



**Published by :** Divisional Secretariat,
Manmunai South West, Paddippalai.

**பொருளடக்கம்:**


ஆசிச்செய்திகள் iii

வாழ்த்துச் செய்திகள் v

அணிந்துரை viii

கலாசார கீதம் ix

கலாசார பேரவை உறுப்பினர்கள் x

01. சுயம்பு ....01

02. பட்டிப்பளை பிரதேசத்தில் மருவிச் செல்லும் நாட்டாரியலுடனான விவசாயச் செய்கை ....02

03. மண்முனை தென் மேற்கின் முற்றம் ....11

04. மண்முனை தென்மேற்கு பிரதேச இடப்பெயர்களின் ஊடாக வெளிப்படும் சமூக வரலாற்று செய்திகள் ....13

05. சும்மாதான் நானிருக்கன் ....23

06. படுவான்கரை மண்ணை விட்டு மருவிச் செல்லும் நாட்டார் பாடல்கள் ....25

07. பட்டிப்பளை பிரதேசத்தில் விஷக்கடி வைத்தியம் ....31

08. மக்கள் வாழ்க்கையோடு இணைந்த கொக்கட்டிச்சோலை திருத்தான்தோன்றீச்சரம் ....36

09. அழகிய தேசம் எங்கள் பிரதேசம் ....40

10. மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் காணப்படும் கலையும் கலை ஆர்வமும் ....41

11. செம்மொழியில் தமிழ் மொழி ....45

12. உலகநாச்சி வருகைக்கு முந்திய பழம்பதி அம்பிலாந்துறை ....47

13. மாற்றங்கள் வந்ததேனோ ....55

14. எழில் மிக்க மண்முனை தென்மேற்கு ....57

15. மட்டக்களப்பு படுவான்கரை சமூகத்தினரின் மரபுவழியான திருமணச் சடங்குகளும் வழமைகளும் ....58

16. எமது பிரதேச முதியோர்களும் அவர்களின் வளங்களும் ....60

17. பட்டிப்பளை பிரதேசத்தில் கூத்து பற்றிய ஒரு நோக்கு ....63

18. விளைமண் ....68

19. மண்முனை தென்மேற்கு பிரதேசத்தின் ஆலய சிறப்புக்களும் கிராமிய வழிபாட்டு முறைகளும் ....69

20. படுவான் குயில் ....73

21. அழகியல் அம்சங்கள் ....74

22. போட்டி முடிவுகள் ....76

23. கலைஞர் கௌரவிப்பு ....79

24. பேரவைச் சின்னத்தின் விளக்கம் ....85

25. நன்றி நவிலல் ....86


" ஆக்கங்களில் இடம்பெறும் கருத்துக்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாகும்."

# ஆசியுரை :



ஈழத் திருநாட்டின், மட்டக்களப்புத் தமிழகத்தின் தென்மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள பட்டிப்பளைப் பிரதேசம் பாரம்பரிய பண்பாட்டு மரபுகளும், சுவடுகளும் பதிந்துள்ள முதிர்ந்த பிரதேசமாகும். இப் பட்டிப்பளைப் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால், இவ் வருடம் ஜீலை மாத ஆரம்பப்பகுதியில் கலாசார விழாவும், அதனையொட்டி முதல் தடவையாக "சுயம்பு"எனும் சிறப்பு மலர் வெளியீடும் இடம் பெறுவது பாராட்டுதலுக்குரியதாகும்.

ஒரு சமுதாயத்தின் பெருமையை எடுத்துக் கூறும் முக்கிய அடையாளங்களாக விளங்குவது அச்சமுதாயத்தின் கலாசார விழுமியங்களாகும். சமயம், அரசியல், கலைகள், புராண இதிகாசங்கள், இலக்கியங்கள், ஆசாரங்கள், மற்றும் வாழ்க்கை நடைமுறைகள் ஆகியனவும், ஒரு சமுதாயத்தின் கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் ஊடகங்களுமாகும்.

தமிழ்ச் சமுதாயத்தின் கலை, மற்றும் கலாசாரம் போன்றவை உறுதியான ஆன்மீக விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டவை. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருஷார்த்தங்கள், மனித வாழ்வின் உயர் விழுமியங்களாகப் போற்றப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களும், கலைகளும் இதற்கு சான்று பகர்கின்றன.

இதனடிப்படையில், பட்டிப்பளைப் பிரதேசத்தில் இலைமறைக்காயாக காணப்படும். கலைகளையும், கலாசார விழுமியங்களையும் ஆவணப்படுத்தும் நோக்கோடும், கலைஞர்களையும், கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் கௌரவிக்கும் நோக்கம் கொண்டும் வெளியிடப்படும் இச் சிறப்பு மலர் ஆண்டுதோறும் தவறாமல் வெளி வரவேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும்.

பட்டிப்பளைப் பிரதேச கலாசார பேரவை, இத்தகையை விழாக்களை ஏற்பாடு செய்வதன் மூலம் அப்பகுதித் தமிழர்களின் கலாசார விழுமியங்கள் புதிய உத்வேகம் பெறும் என்பதில் ஐயமில்லை.

மேற்படி பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாசார விழாவும், "சுயம்பு" சிறப்பு மலர் வெளியீடும், வெற்றிகரமாக நடந்தேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் இந்நிகழ்வுகளோடு தொடர்புடைய அனைவருக்கும் இறைவன் மேலும் அர்ப்பணிப்போடு கூடிய ஆர்வத்தை வழங்கவேண்டுமென பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பிரார்த்திக்கின்றேன்.

இறைபணியில்

**சுவாமி கபாலீசானந்தர்**

ASHRAMA & CHILDREN'S HOME
Ramakrishnapuram,
Batticaloa, Srilanka.

# ஆசியுரை :



"தானே உதித்தவா தான்தோன்றி ஆனவா" என்ற கூற்றுக்கிணங்க சுயம்பாக இறைவன் தோன்றி அமர்ந்த இப்பெருநிலத்தின் பெருமைகளையும் கலை இலக்கியங்களையும் சுமந்து வர இருக்கும் சுயம்பு மலர் வெளியீட்டை எண்ணியும் நீண்ட காலத்திற்குப் பிறகு இவ்வாறானதொரு பிரதேச கலாசார விழா இடம் பெறுவதையொட்டி பெருமகிழ்ச்சி அடைவதுடன் இவ்விழாவும் வெளியிடப்படும் "சுயம்பு" மலரும் சிறப்பாக அமைய சுயம்புலிங்கமாகிய திருத்தான்தோன்றீச்சரப் பெருமானிடம் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.



**சிவஸ்ரீ வ. சோதிலிங்கம்,**
ஆலய பிரதம குரு,
திருத்தான்தோன்றீச்சரம்,
கொக்கட்டிச்சோலை.

## வாழ்த்துச் செய்தி :



மண்முனை தென் மேற்கு (பட்டிப்பளை) பிரதேச செயலக கலாசார பேரவையினால் முதற் தடவையாக நடாத்தப்படவிருக்கும் கலாசார விழாவில் கன்னி முயற்சியாக வெளியிடப்படவுள்ள சுயம்பு எனும் கன்னி மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எந்தவொரு சமூகமும் தனது இருப்பை தக்க வைத்துக் கொள்ள வேண்டு மானால் தனது மொழியில், மதத்தில், கலை கலாசார பாரம்பரியங்களில் மிகுந்த அக்கறை யுடையவராக இருத்தல் வேண்டும். அல்லாது போனால் மாற்றமுற்று வரும் தற்கால சூழ்நிலையில் நலிவடைந்து போய் விடும்.

எனவே பல்வேறு தனித் திறமைகள் கொண்ட கலைஞர்களின் கலை இலக்கியப் பணிகளையும், அவர்களின் சுய ஆற்றல் வெளிப்பாடுகளையும், உள்ளக்கிடக் கைகளையும் ஆவணப்படுத்தும் முகமாக அவர்களது படைப்புக்கள் தாங்கிவரும் "சுயம்பு" எனும் கன்னி மலர் வெளியீட்டிற்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளருக்கும் ஒன்றியத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிதத்துக் கொள்வதுடன் இம் மலர் வெளியீடு சிறந்த ஓர் மலராக மிளிர வேண்டும் என்று எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- நன்றி -

**திருமதி. பி . எஸ் .எம் . சாள்ஸ்,**
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

## வாழ்த்துச் செய்தி :



வயலும் வயல் சார்ந்த விவசாய பெருநில மக்கள் செறிந்து வாழ்கின்ற இடமாக பட்டிப்பளை விளங்குகின்றது. அத்துடன் பண்ணை வளர்ப்புக்கும் இப்பிரதேசம் சிறந்து விளங்குவதுடன் விவசாயத்தோடு கூத்துக்கலையும் வளர்த்த பெருமை இவர்களுக்கு உண்டு. கூத்துக்கலைகளினதும் கிராமியக்கலைகளினதும் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் கலாசார விழாக்கள் ஏதுவாக அமைகின்றன. இப் பிரதேசத்தில் கூத்துக் கலைக்குக் பெயர்போன அண்ணாவிமார்களும்.கலைஞர்களும் செறிந்து வாழ்கின்றனர்.

இப் பிரதேசத்தில் நடைபெறவிருக்கும் கலாசாரவிழா அப் பிரதேச மக்களின் கலை பண்பாட்டு ஆற்றலை வெளிக்கொணர்வதற்கும் கலைஞர்களை ஊக்கப்படுத்துவதற்கும் வழிசமைத்துக்கொடுக்கின்றது.

எனவே இவ் விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இவ் விழா சிறப்புற நடைபெறவும் இவ் விழாவையொட்டி வெளியிடப்படவுள்ள சிறப்பு மலர் நல்ல விடயங்களைத் தாங்கி வெளிவரவும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கலாசார உத்தியோகத்தர், கலாசார சபையினர் மற்றும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டீ.டபிள்யு.யு.வெலிக்கல**
பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு,
கிழக்கு மாகாணம்.

# வாழ்த்துச் செய்தி :



பட்டிப்பளைப் பிரதேச கலாசாரப் பேரவையின் நீண்ட கால முயற்சியின் பின்னர் பிரதேசத்தின் பண்பாட்டியலை வெளிப்படுத்தும் களஞ்சியமாக வெளிவரும் "சுயம்பு" எனும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

மனிதன் பூரணமடைவதற்கும், சிந்திப்பதற்கும் ஆக்க பூர்வமான படைப்பாக்கங்கள் வழிகாட்டுகின்றன. அதில் ஒரு முயற்சியாகவே இச்சஞ்சிகைவெளியீட்டைக் கருதுகின்றேன். ஒவ்வொருவருக்கும் ஒரு தனித் தன்மை உண்டு. இந்த தனித்தன்மை மனித குலத்தை வளமுள்ளதாக்கச் செய்கிறது. இதன் வழியில் வெளிப்பட்ட பல்துறை சார்ந்த ஆக்கங்கள் இதில் இடம் பெறுவது சிறப்பாகும்.

மரபுக்கலைக்குப் பேர்போன பிரதேச மக்களின் பாரம்பரியங்களையும் முயற்சிகளையும் ஆவணப்படுத்துவதிலும் அவற்றை எதிர்கால சந்ததியினருக்கு ஞாபகப்படுத்தி பேணிப்பாதுகாப்பதிலும் இச் "சுயம்பு" எனும் கலாசாரச் சஞ்சிகையின் பணி அமையும் என நம்புகின்றேன்.

சமூகத்தின் இயல்பான உணர்வுகளாக வெளிவரும் இத்தகைய வெளியீடுகள் தொடர்ச்சியான முயற்சிகளாக எழுச்சி பெற வேண்டுமென்றும், சுயம்பாக வெளிவரும் இச்சஞ்சிகை பலரது சுயங்களை வென்று பிரதேசத்தின் கௌரவ ஆவணமாக மலர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**கொ.யோ. அனுராஜ்**
முகாமையாளர்,
பட்டிப்பளை அபிவிருத்தித்திட்டம்,
வேர்ட்விஷன் லங்கா.

# அணிந்துரை:



கதிரவன் தன் கதிர்களை ஒளித்துக்கொள்ளும் படுவான்கரையின் இயற்கை வனப்பு மிகுந்த பிரதேசம் பட்டிப்பளை.கலையின் தொன்மையும், கலாசாரங்களின் மரபுகளும், பண்பாட்டு விழுமியங்களும், தோற்றுவிக்கப்பட்ட பூமி. குல மாற்றம்,நாகரீக வளர்ச்சி எதற்கும் உட்பட்டு விடாமல் கலைகளையும் அதன் மரபுகளையும் இன்னமும் கலப்படமில்லாமல் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றது. மூன்று தசாப்த கால யுத்தம், இயற்கை அனர்த்தங்கள் அனைத்துக்கும் முகம் கொடுத்து மீண்டு கொண்டிருக்கும் இப்பகுதி வாழ் மக்களுக்கு உரித்தான கலை அம்சங்களை வெளிக்கொணரும் வகையில் கலாசார விழா-2012, பிரதேச செயலக கலாசார பேரவையினால் முதற் தடவையாக முன்னெடுக்கப்படுகின்றது. இந் நிகழ்வினை மெருகூட்ட "சுயம்பு" எனும் சிறப்பு மலரும் முதன் முறையாக பிரசவிக்கப்படுகின்றது. மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக கலாசார வரலாற்றில் பொற்பதிவுகளாய் இக் கலாசார விழாவும், மலர் வெளியீடும் பொறிக்கப்படும் என நம்புகிறேன். "சுயம்பு" வினூடாக உங்களை சந்திப்பதில் பெருமையும் பெருமகிழ்வும் அடைகின்றேன்.

இம் மக்களிடையே புரையோடிப்போன கலைகளை, அதன் பாரம்பரிய விழுமியங்களை வெளிக்கொணரும் வகையில் இப்பகுதி வாழ் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், மாணவர்களின் ஆக்கங்களை தாங்கியதாக மலரவுள்ள "சுயம்பு" பட்டிப்பளையின் கலையின் வளர்ச்சிக்கும் கலைஞர்களின் மேம்பாட்டுக்கும் வித்திடும் என்பதில் ஐயமில்லை."சுயம்பு"வை உருவாக்க அர்ப்பணிப்போடு அயராது உழைத்த எனது செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கலாசார பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டுகின்றேன். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் "சுயம்பு" தன் வெவ்வேறு பரிணாமங்களை தொடர்ந்தும் பதிவு செய்ய தன் இதழ்களை விசாலமாக்கி மலரட்டும்.

இம் முதல் மலர் வெளியீட்டுக்கு உண்டான செலவுகள் அனைத்தையும் ஏற்று இப்பகுதி கலை வளர பங்களிப்பு நல்கிய உலக தரிசன நிறுவனத்தினரை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

"சுயம்பு" மொட்டவிழ்த்து இதழ் விரித்து மணம் பரப்ப இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்**

பிரதேச செயலாளரும்

கலாசார பேரவைத் தலைவரும்,

மண்முனை தென் மேற்கு, பட்டிப்பளை.

# கலாசார கீதம்



மண்முனை தென்மேற்கென்னும் பகுதி
மனம் மகிழ்ந்தே வாழின்ப வீடு

தண்ணருள் பொழியும் தான்தோன்றீசன்
தாந்தா முருகன் தலமிரு கண்ணாய்
பண்புயர் சைவமும் தமிழும் ஓங்கும்
பழமை மிக்க கலை வளர் பூமி

காடும் மலையும் சூழனியும் சேர்ந்தே
களப்பும் குளமும் வான் நிலம் நீர்தர
நாடு நுகர நெல் பிற தானியம்
நயமாய்ப் பாலும் தேனும் நல்கிடும்



வீரம் உழைப்பு ஊக்கம் கொண்டே
வீறுடை குலமாய் என்றுமே வாழ
தீர்த்துடனே கல்வி வளர்த்து
திருவை உயர்த்த வழியின்னும் காண்போம்



நெற்பயிர் செழிக்க நீர் வளம் பெருக்கி
நிலத்தினில் நிறையப் பயிர்வகை விதைப்போம்
பற்பல கைத்தொழில் பற்றியே மேலும்
பறவையும் கறவையும் இறாலும் வளர்ப்போம்

மதுமோடு சிறுமை வறுமைகள் போக்கி
மனத்தினை வெளுத்தே மாண்புற உயர்வோம்
புதுவழி கண்டு நாமெல்லாம் ஒன்றி
புத்துணர்வோடு எழத்தெழுவோம்

வாழிய மண்முனை தென்மேற்கு
வளமெல்லாம் பெருக்கி வளர்ந்தோங்கி
வாழியதெல்லாம் குறை வின்றி
வானகமொக்க யென்றும் வாழியவே

- மகிழை மகேசன் -

# கலாசாரப் பேரவை உறுப்பினர்கள்

தலைவர் :- திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் ( பிரதேச செயலாளர் )

உப தலைவர் :- திரு. சி. கங்காதரன்

செயலாளர் :- செல்வி. நாகராசா வளர்மதி ( கலாசார உத்தியோகத்தர் )

உப செயலாளர் :- செல்வன். ஆ. தனுஸ்கரன்

பொருளாளர் :- திரு. யோ. தவக்குமார்

இணைப்பாளர் :- திரு. வ. செல்வராசா ( நிருவாக உத்தியோத்தர் )
திரு. பி. ஸ்ரீஸ்கந்தசெயா ( கிராம உத்தியோகத்தர் - நிருவாகம் )

கணக்காய்வு உத்தியோகத்தர் :- திரு. எஸ். புவனேஸ்வரன் ( கணக்காளர் )

| | | |
|---|---|---|
| உறுப்பினர்கள்:- | திரு. T. நடராஜா | (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ) |
| | திரு.P. நீதிதேவன் | ( நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ) |
| | திரு. A. தயாசீலன் | ( இளைஞர் சேவை உத்தியோகத்தர் ) |
| | திரு. S. ருசகுமார் | ( சமுர்த்தி உத்தியோகத்தர் ) |
| | திரு. K. சிவகுருநாதன் | ( கிராமசேவை உத்தியோகத்தர் ) |
| | செல்வி. P. தேவகி | ( கிராமசேவை உத்தியோகத்தர் ) |
| | திரு. T. ஜீவநாதன் | ( அலுவலக பணியாளர் ) |
| | திரு. ஞா. பேரின்பம் | (கலாசாரப் பேரவை உறுப்பினர் ) |
| | திரு. வே. வல்லிபுரம் | (கலாசாரப் பேரவை உறுப்பினர் ) |
| | திரு. இ. யோகலிங்கம் | (கலாசாரப் பேரவை உறுப்பினர் ) |
| | திரு. ஏ. கதிர்காமநாதன் | (கலாசாரப் பேரவை உறுப்பினர் ) |
| | திரு. க. சந்திரகுமார் | (கலாசாரப் பேரவை உறுப்பினர் ) |
| | திரு. பா. நல்லதம்பி | (கலாசாரப் பேரவை உறுப்பினர் ) |
| | திரு. ம. கேதீஸ்வரன் | (கலாசாரப் பேரவை உறுப்பினர் ) |
| | திரு. பொ. புட்பேந்திரன் | (கலாசாரப் பேரவை உறுப்பினர்) |
| | திரு. ச. அருளானந்தம் | (கலாசாரப் பேரவை உறுப்பினர்) |
| | திரு.அ. பிள்ளைநாயகம் | (கலாசாரப் பேரவை உறுப்பினர்) |
| | திருமதி. தி. நிர்மலாதேவி | (கலாசாரப் பேரவை உறுப்பினர்) |
| | செல்வி. தி. பவநிதா | (கலாசாரப் பேரவை உறுப்பினர் ) |
| | திரு. க. செதீஸ்கரன் | (கலாசாரப் பேரவை உறுப்பினர் ) |
| | திரு. இ. ரவீந்திரன் | (கலாசாரப் பேரவை உறுப்பினர் ) |
| | திரு. க. பரமானந்தம் | (கலாசாரப் பேரவை உறுப்பினர்) |
| | திரு. அ. கனிவளன் | (கலாசாரப் பேரவை உறுப்பினர்) |
| | திரு. அ. துரைராஜா | (கலாசாரப் பேரவை உறுப்பினர்) |
| | திரு. வை. வாலசிங்கம் | (கலாசாரப் பேரவை உறுப்பினர்) |





**இடமிருந்து வலம் ( அமர்ந்திருப்போர்) :** திரு.எஸ்.புவனேஸ்வரன், திரு.ஞா.பேரின்பம், திரு.பி.ஸ்ரீஸ்கந்தசெயா, திருமதி. சிவப்பிரியா வில்வரத்தினம், செல்வி நா.வளர்மதி, திரு.வ.செல்வராசா, திரு.வே.வல்லிபுரம்.


**இடமிருந்து வலம் (முதலாம் வரிசையில் நிற்போர்) :** செல்வன்.சி.கங்காதரன், திரு.சி.ருசகுமார், திரு.இ.ரவீந்திரன் திரு.இ.யோகலிங்கம், செல்வி.பொ.தேவகி, செல்வி.தி.பவநிதா, திருமதி.நிர்மலாதேவி, திரு.ப.கதிர்காமநாதன், திரு.தே.நடராசா, திரு.தெ.ஜீவநாதன், திரு.க.செதீஸ்கரன், திரு.க.பரமானந்தம்.

**இடமிருந்து வலம் (இரண்டாம் வரிசையில் நிற்போர்) :** செல்வன்.து.கனிவளன், செல்வன்.ம.கேதீஸ்வரன், திரு.ஆ.சந்திரகுமார் திரு.கே.சிவகுருநாதன், திரு.பி.நீதிதேவன், திரு.கோ.தவக்குமார், செல்வன்.ஆ.தனுஸ்கரன், செல்வன்.ஆ.பிள்ளைநாயகம், திரு.வை.வாலசிங்கம்.

# சுயம்பு...



சுயமான இது சுகமானது
தனியானது இது தனித்துவமானது
பிணி நீக்கப் பெரும்பாலும் உருவானது
மண்முனையின் தென்மேற்கே நிலையானது
மறத் தமிழர் வாழ்வோடு இணையானது
கல்மாடு புல்லுண்டு சிறப்பானது
கலைகளெல்லாம் இங்கே பிறப்பானது



எம் கலைகள் சுயம்பாக வெளியானது
ஏனையவை எம்மிடமே உருவானது
கலை காக்க களை கட்டும் சுயம்பானது
எம் கலைஞர் வாழ்வில் என்றும் இயல்பானது

வயல் ஆறு மலை மேடு குளம் எல்லாம்
எங்கள் வரலாறு சொல்லித்தான் புகழ்பாடும்
பிரதேசப் பிரவேசம் செய்யும் போது
படுவான் மணம் வீசும் குளிர் காற்று
தொடும் எம்மைப் பாரு

சுயம்பு சுயம்பாக உண்டு இங்கு
கலை காக்கும் கரமெல்லாம் இங்கு வந்து
கைகோர்த்து மனம் சேர்த்து களிப்பாக
செவி சாய்த்து கேட்போம்



சிலம்புடைத்து செருக்கழித்தாள் அன்று
சுயம்பெடுத்து சூளுரைப்போம்
கலை காப்போம் என்று

சோலையூரான்
**ஆ. தனுஷ்கரன்**
கொக்கட்டிச்சோலை

# பட்டிப்பளைப் பிரதேசத்தில் மருவிச் செல்லும் நாட்டாரியலுடனான விவசாயச்செய்கை

சமுத்திரத்தில் அலைகள் ஓய்வதில்லை அல்லவா அது போலத்தான் மனித வர்க்கத்தின் நாகரிகம் என்பதும். நாகரிகம் என்ற கடலில் அலைகள் பரிணமிப்பது போல பல்வேறு அம்சங்களான கலை, கலாசாரம், பண்பாடு, பழக்க வழக்கம் என்பன தொடர்ந்து வளர்ந்து கொண்டும் சில மருவிக் கொண்டும் இன்னும் சில புதிய மாற்றங்களைப் பெற்றுக் கொண்டும் அந்தந்த நிலத்துக்கேற்பவும் பிரதேசத்திற்கு ஏற்பவும் தத்தம் இருப்பினை நிலைப்படுத்திக் கொள்கின்றன.

ஒரு பிரதேசத்தின் பண்பாட்டு விழுமியங்கள் அந்தப் பிரதேசத்தின் மக்கள் வாழ்வியலை எடுத்து இயம்புவதாக உள்ளது. அந்த வகையில் நோக்கும் போது மட்டக்களப்புப் பிரதேசத்தின் தென்மேற்குப் பகுதி எனக் குறிப்பிடப்படும் பட்டிப்பளைப் பிரதேசத்தின் கலை, பண்பாடு, கலாசாரம் என்பனவற்றில் சிலவற்றை எடுத்தாராயும் போது பல விடயங்கள் நமக்கு சிறப்புச் சேர்ப்பதாக உள்ளது.

இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் பட்டிப்பளைப் பிரதேசம் படுவான்கரைப் பகுதியில் ஒரு சிறு பகுதி மட்டும்தான். அதாவது கொக்கட்டிச்சோலை நகராக்கமையத்தை தன்னகத்தே கொண்டு விளங்கும் மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியாகும். இப்பிரதேசத்தை நோக்கிற்கு எடுத்துக் கொண்டதன் நோக்கம் இது ஒரு கலப்பற்ற தனித்தமிழர் என்று சொல்லக்கூடிய மக்கள் இனம் மட்டும் வாழ்கின்ற பிரதேசம் என்பதால் தான் இங்கு கலப்பற்ற கலாசாரம், கலை, பண்பாடு காலம் காலமாக வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



**மு.குணரெத்தினம்**
அம்பிளாந்துறை

இப்பிரதேசத்தின் பண்பாட்டம்சங்கள் யாவும் தொழில் என்ற பொருளாதார முறைமையின் ஊடாகவே வளர்ந்து வந்திருப்பதைக் காணமுடிகின்றது. அந்த வகையில் இப்பிரதேச மக்களின் வாழ்வியல் விவசாயத்தோடும், கால்நடை வளர்ப்போடும் ஒட்டி உறவாடி உள்ளத்தை நாம் உணர முடிகின்றது. உன்னதமான விவசாயத் தொழிலினை வாழ்வாதாரமாக உயிரிலும் மேலாக பண்டுதொட்டு மதித்து வருகின்றனர்.

இத்தொழிலின் ஊடாக பல்வேறு கலையம்சங்களையும் வளர்த்துவந்ததோடு நாட்டார் இயல் என்ற இலக்கியத்தின் மரபுரிமைக்காரர்களாகவும் விளங்கி வந்திருக்கின்றனர். இதற்காக இவர்கள் கூத்து, கோலாட்டம், கும்மி, நாட்டார் பாடல்கள், பள்ளு போன்ற அமைப்பிலான சில கும்மிகள் என்பனவற்றோடு தொழிற்பாடல்கள் என்று பல கோணங்களில் இலக்கியத்திற்கு தம்மை அறியாமலே அரும் தொண்டாற்றி வந்துள்ளனர் என்றால் மிகையாகாது.

எனினும் இன்று அவர்தம் தொழிலிலும் அதன் நடைமுறையிலும் பண்பாட்டுக் கோலங்களிலும் நேரடியானதும் மறைமுகமானதுமான பல்வேறுபட்ட தாக்கங்களின் காரணமாக மேற்சொன்ன பல விடயங்கள் அருகிச் செல்வதை உணர முடிகின்றது. இவற்றில் சிலவற்றையேனும் இக்கட்டுரையில் எடுத்தியம்ப முனைகின்றேன். அன்று விவசாயம் செய்பவர் போடியார்கள் என்றும் அதாவது பரம்பரை பரம்பரையாக அதிக விளை நிலத்தினைச் சொந்தமாக வைத்திருப்பவர்கள் போடியார்களாகவும் இவர்களுக்கு விவசாயத்தில் துணை நின்று பாடுபட்டு செய்கை பண்ணி தன் போடிக்காக உயிரையும் கொடுத்து ஊழியம் செய்து கூலி வாங்கி தன் குடும்பத்தையும், சுற்றத்தையும் கட்டியாண்ட அந்த தொழிலாளி " முல்லைக்காரன் " என்னும் பெயர் பெற்றும் விளங்கினான். சிலர் தம் அயராத உழைப்பின் காரணமாக அன்றைய போடியார்கள் தலை நிமிர்ந்து வாழ்ந்தனர். இவ்வாறு இவர்கள் விவசாயத்தில் ஈடுபடும் போது அத்தொழிலில் பலபடிமுறைகளைத் தாண்ட வேண்டியவர்களானார்கள்.

நிலம் பண்படுத்துதல், வரம்பிடல், விதைத்தல், நாற்றுநடல், களை எடுத்தல், பராமரித்தல், நீர் பாய்ச்சுதல், அறுவடை செய்தல், சூடு அடித்தல், பொலிதூற்றுதல், களஞ்சியப்படுத்துதல், கூலி வாங்கல் என்று இவர்களின் தொழில் மார்க்கம் விரிந்து செல்கின்றது.

இவ்வாறு செய்கை பண்ணிய போதிலும் இப்பிரதேச விவசாயிகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கினாலும் அலுக்காமலும் சலிக்காமலும் தொழில் செய்தனர். இதற்கான காரணங்கள் பல, அவற்றில் ஒன்றுதான் நாட்டார் பாடல்.

ஒவ்வொரு பாட்டும் நிலம் பண்படுத்தி விதைக்கும் வரையான காலப்பகுதிகளில் பாடப்படும். சிலவரிகள் செவிவழியாக வந்தவை

ஓடி உழவடிக்க
ஒரு எருதுப்புணையலடா
கூடி ஏர் பிடிக்க
கூட நீயும் வந்தாயெண்டால்
வீடி சுருட்டோட
வெத்திலை பாக்குனக்கு
சாமிக்கு வைச்ச கள்ளும்
சாராயமும் தாரன்......



இங்கு போடியாரின் வயல் உழுவதற்கு தன்னால் முடியாத நிலையில் தன் நண்பன், சகபாடியை விழித்து அழைப்பதாக இப்பாடல் அமைகின்றது. உழவு செய்வதோடு நிற்காமல் பழமையான மாடு கட்டி ஏர் பிடித்து உழும் முறையானது இப்பாடல் ஊடாக நமக்குச் சுட்டிக் காட்டப்படுகின்ற. ஆனால் இன்றைய தலைமுறையிடம் இம்முறை மருவிச் செல்வதை நாம் காணமுடிகின்றதல்லவா. இன்றும் சில காலம் சென்றபின் மாட்டால் உழுதோம் என்பது நகைப்புக்கும் நையாண்டிக்கும் உரியதாக மாறி பழமை மறைந்து விடலாம். ஆனால் இவ்வாறான பாடல்கள் ஏட்டில் வெளிவந்து நம்மவரிடையே இதனைப் பறைசாற்ற வேண்டும்.

இது போலவே விதைப்பதற்கு பல பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அதில் என்பால்பட்டதில் சில வரிகள்

ஆத்தை மறிச்சிக் கட்டி
ஏத்தைப் பிடிச்சிறைச்சி
அதிலிருந்து நீர்பாச்சி
சேற்றைக் குழப்பியங்கே
சென்னெல்லைத்தான் விதைத்து

என்று சொல்லும் பாடல் . இது நீர் இறைக்கும் போதும் விதைக்கும் போதும் பாடப்படும்.

இப்பாடலின் ஊடாக ஏற்று நீர்ப்பாசன முறை மிக இலகுவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் இன்று ஏற்று நீர்ப்பாசனத்திற்கு நிகழ்ந்தது என்ன நீர்ப்பம்பிகளின் வருகை இதற்குப் முற்றுப்புள்ளி வைத்து விட்டதல்லவா. நாம் நமது எதிர்காலச்சந்ததியினருக்கு இலக்கியத்தின் ஊடாக இவற்றை இருப்புச்செய்தல் சிறப்பானதாகும். எனினும் ஒரு பெரும்குறை இப்பாடல்கள் முழுமையாக கிடைக்காமையே.

பயிர்ச்செய்கையில் விவசாயிகள் எதிர்கொண்ட சவால்கள் அவர்களையும் அறியாமல் வாய் வழியாக வந்துள்ளது. ஆனால் அவர்களோடே அது மறைந்து விடக்கூடாது அல்லவா கீழ்வரும் பாட்டைப்பாடுங்கள் சில விடயங்கள் புலப்படும்.

ஆத்துச்சேனைக்கு
அம்பாறைத்தண்ணி பாச்சி
பாத்துச் செய்த பயிர்
பாதியில் ஆனைக்கோ

மிகத் தொலைவில் இருந்து கொண்டு வந்து நீர் பாய்ச்சப்படுகின்றது. ஆனால் பயிரை பாதியில் யானை அழிக்கிறது. இதனைப் பார்த்திருந்த விவசாயியின் உள்ளக்குமுறல் பாட்டாக வெடிக்கிறது. இந் நிலை இன்றும் தொடர்கிறது.

அன்று எமது விவசாயப்பரப்பிலே இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்ப பல நெல்லினங்கள், பயிர் இனங்கள் நம்மிடையே இன்று இல்லாமல் மறைந்து விட்டன. இப்பிரதேசத்தில்

உப்புக்கறுப்பன், பச்சைப்பெருமாள்
ஊரறிஞ்ச முருகன் சம்பா
பால்பொங்கல் பொங்க
நல்ல பாசிப்பயறு பக்குவமாய்
குற்றியல்லோ ஏசிப்படைப்பாங்க எங்கட சாமிக்கு

இப்பாடல்களை நையாண்டியாகப் பாடப்பட்டாலும் அன்று விதைத்த நெல்லினங்கள் பற்றி தொட்டுச் செல்கின்றதை நாம் உணரமுடிகின்றது.

இன்றும் நம்மவர்கள் வாய் ஓயாமல் பல இனங்களைச் சொல்கிறார்கள். அவற்றில்

| | |
|---|---|
| முருகன் சம்பா | உவர்க்கறுப்பன் |
| சின்னமுருங்கக்காயன் | பெரிய முருங்கக்காயன் |
| கமுகம் பூச சம்பா | பச்சப்பெருமாள் |
| கறுப்புச்சீனெட்டி | தாயாதி ( பன்றிநெல் ) |

இங்கு இறுதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் நெல் பற்றி இப்பிரதேசத்தில் ஒரு அருமையான பக்கம் இருந்திருக்கின்றது. ஆனால் இன்று அது மறைந்து சென்று விட்டது. பெண்கள் பலர் ஒன்று கூடி "சுளகு" கொண்டு பன்றிநெல் தாளாக விளைந்து கிடக்கும் இடங்களுக்குச் சென்று சுளகால் அடிப்பார்களாம் நெல் சுளகில் ஏறிக் கொள்ளும் அதனைச் சேகரித்து காய வைத்து குற்றி அரிசியாக்கி பால் ஊற்றிக் கஞ்சிகாச்சி உண்பார்களாம். பலர் சோறும் சமைப்பார்களாம். இந்தச் சிறப்பான உணவுப் பழக்கம் மாறிவிட்டது. தாயாதி என அழைக்கப்படும் பன்றி நெல் தேடுவாரற்றுக் கிடப்பதை காண முடிகின்றது. இதற்கு நம்முன்னோர்கள் பஞ்சம்தாங்கி என்றும் ஒரு பெயர் வைத்துள்ளனர். அது மட்டுமல்ல இன்றுள்ள சிறந்த இன நெல் யாவும் இதில் இருந்தே பிறப்பாக்கம் செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது. எப்படியோ தாயாதி தாயாதிதான் என்ற பெருமை உண்டல்லவா ? இந்த இயற்கை நெல்லினம் நம் நெற் செய்கைக்கு ஒரு சவாலாக எதிரியாக உள்ளதும் குறிப்பிடத்தக்காகும். இது பற்றியோர் நாட்டார் பாடல் பின்வருமாறு வழங்கி வந்துள்ளது.

வாயாடிப் பொண்டுகள் கூடி
தாயாதி நெல்லடிச்சி
ஓட்டில் வறுத்துக்குற்றி
ஊருக்குச் சோறாக்கி
தீராப்பசிதீர்ப்பர்
தில்லாலங்கடியோ

என்று தனது நாட்டார் இயல் கட்டுரைக்காகப் பல பாடல்களைத் தந்த பெருந்தகை அமரர் சின்னக்குட்டியப்பச்சி பாடிக் காட்டுவார். இங்கு தாயாதி என்றது இந்தப் பன்றி நெல்லைத்தான்.

இங்கு மிகமிக முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் அன்றைய விவசாயிகள் கடவுள் நம்பிக்கையோடு தன்னம்பிக்கையும் கொண்டிருந்தனர் என்பது. எப்படி விவசாயத்தில் ஏற்படும் பீடைகள் யாவற்றையும் கட்டுப்படுத்தும் திறன் கடவுளுக்கே உண்டென்று நம்பிக்கை மிக ஆழமாகப் பதிந்திருந்தது எடுத்துக்காட்டாக உலகப் புகழ் பெற்ற திரு தான்தோன்றீஸ்வரர் ஆலயம் இப்பட்டிப்பளைப் பிரதேசத்திலே உள்ள கொக்கட்டிச்சோலையில் அமைந்திருப்பது நாம் அறிந்ததே.

இவ்வாலயத்தின் தீர்த்தமே இப்பிரதேசம் மட்டுமன்றி படுவான்கரைப் பிரதேசம் முழுவதற்குமான நோய் தீர்க்கும் மருந்தாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இந்நிகழ்வு முன்பெல்லாம் சம்பிரதாய பூர்வமாக நிகழ்கின்ற ஒரு நிகழ்வாகும். அன்று தீர்த்தம் எடுக்கும் நாள் என்றால் வட்டவிதானை, அரியாரி, பெரும் விவசாயிகள், சிறு விவசாயிகள் எல்லோரும் கூடி தீர்த்தம் எடுத்துச் செல்வார்களாம். தனித்தனியாகவும் சென்று கோயில் ஐயரிடம் தீர்த்தம் பெற்றுச் சென்று வேப்பிலையை நான்கு மூலைக்கும் போட்டு நடுவிலும் போட்டு வயலைச்சுற்றி தீர்த்தம் தெளியுங்கள் என்று ஐயர் ஆலோசனை கொடுப்பார்.

இயற்கை பீடைக்கட்டுப்பாடு எம்பெருமான் சன்னிதியில் இருந்து அவன்பெயரால் வியாபித்திருக்கின்றது. 1985,86,87ம் ஆண்டு காலப்பகுதியில் அம்பிளாந்துறை கன்னன்குடா வயல்களுக்கு திரு. தம்பியன் அரியாரியார் வாய்கட்டி (வெள்ளைத்துணியால்) தான்தோன்றியப்பனின் தீர்த்தம் என்று கூறி தெளித்ததை நான் கண்டு உளகாங்கிதம் அடைந்துள்ளேன். இதன் பின் இந்நிகழ்வு மெல்ல மெல்ல மறைந்து செல்கின்றது. ஒரு சிலர் இன்றும் பின்பற்றுகின்றனர். இதை நான் என் கட்டுரையில் கூறுகின்றேன் எனில் இப்பிரதேசத்தவர் தம் தொழிலோடு கடவுள் நம்பிக்கையை மிக இறுக்கமாகப் பிணைத்திருந்தனர் என்பதைக் காட்டவே. இதுவும் இன்று மறைந்து செல்லும் நிகழ்வுதான் எனினும் நம் நாட்டார் இயல் குழுவும் கீழ்வரும் பாடலைத்தாங்கும் வரை இந்நிகழ்வுகள் நம்மிடையே நிலைக்க வாய்ப்பு உண்டல்லவா.

தேன் தோன்றிகொக்கட்டி தான்தோன்றியப்பனிட்ட
நான் வேண்டிவந்த தீர்த்தம் பாண்டல் அழுகல்
பக்கக் குருமன் நோய் பச்சைச்சுருட்டையொடு
பாளான கரைசல் எல்லாம் பாத்திருக்க அகல வேணும்

என்று சொல்லித் தீர்த்தம் தெளித்து மனநிறைவும் நிம்மதியும் பெறுவர் விவசாயிகள். ( இங்கும் நம் இலக்கியக் கருவூலத்திற்கு தம்மைத் தெரியாமலே ஒருவராய் வழிப்பாட்டு ) இவை நம்மை விட்டு நமது பிரதேசத்தை விட்டு அகலக்கூடாது என்பது எமது ஆசை.

இதனைத் தொடர்ந்து அறுவடைக்கு உங்களை அழைத்துச் செல்கின்றேன். இலங்கையின் வேறு எந்தப் பிரதேசத்திலும் ( தமிழ் ) காணாத விடயங்கள் கையாளப்பட்டு வந்துள்ளது. சில இன்றும் நீடிக்கின்றன. பல நம்மிடையே மறைந்து செல்கின்றன. இதுகாலத்தின் தேவையும் மாற்றமும் என்று கூறினாலும் எமது பண்பாட்டு அம்சங்கள் இதனுடன் புதைந்து விடக்கூடாது என்பதனால்தான் சிலவற்றை இச்சந்தர்ப்பத்தில் நமது எதிர்காலச்சந்ததிக்காக படையல் செய்வோம். அன்று அறுவடைக்கு நாள் பார்ப்பார்கள் எப்படித் தெரியுமா விதைக்கும் போதே பார்ப்பார்களாம். இன்று அமாவாசை கழிந்து இத்தனையாம் நாள் இந்த நெல்லின் வயது இவ்வளவு எனவே இது இந்தக் காலத்தில் அறுவடைக்குத் தயாராகும் இக்காலத்தில் சுழி மழைத்தாக்கம், காற்று என்பன குறைய வாய்ப்புண்டு என்று கணக்கிட்டு விதைப்பர். ஆனால் இன்று இவற்றைக் கருத்தில் கொள்ளாததே நம் விவசாயிகள் புலர் வெள்ளம் சுழிமழை என்பவற்றில் சிக்கித்தமது அறுவடையை பாழாக்கி நஸ்டமடைகின்றனர். இதைத் தான் நம்மவர்கள் "காலம் அறிந்து பயிர்செய்" என்று கச்சிதமாகச் சொன்னார்கள்.

அறுவடைக்கு முன் வேலிக்கட்டு, காவல் என்ற விடயங்கள் கச்சிதமாக கடைப்பிடிக்கப்படும் நிகழ்வு. ஒரு வட்டைக்குண்டான வட்டவிதானையார் அல்ல அரியாரியார், காவல் புரையில் ( பறனில் ) லாம்பு மாற்றுதல் என்ற நிகழ்வின் ஊடாக இரவில் பயிர் அழிவைத்தடுக்க பெரும் முயற்சியும் கட்டுக்கோப்பும் வைத்து நடை முறைப்படுத்தியுள்ளனர் எவ்வாறு எனில் அரியாரியால் கொழுத்தப்படும் அரிக்கண்லாம்பு அல்லது மணி அல்லது சகடை காவல்புரை ஒன்றுக்கு மாற்றப்படும். வைத்ததும் முழிப்பாக இருக்கும் காவல்காரர் அந்த லாம்பை கூக்குரல் இட்டவண்ணம் எடுத்துச் சென்று

நகர்த்த வேண்டும். இவ்வாறே அது இறுதியாக தலையாரியின் புரைக்கு வரும் விடியாவிட்டால் மீண்டும் அது நகரத் தொடங்கும் இதனால் காவல் பலமானதாக எல்லோரும் ஒன்றுபட்டு நிற்பது வழக்கம். இவ்வாறு லாம்பு நகராத பட்சத்தில் யார் நகர்த்தத் தவறியவரோ அவருக்கு மறு நாள் தண்டனை பிரம்படியாம். இதனால் மிக ஜாக்கிரதையாக விழித்திருந்து காவல் செய்வர். இவ்வாறு பாடுபட்டுக் காத்த நெற்செய்கையை அறுவடை செய்து சூடடிப்பதற்கு நாள் பார்ப்பார். இன்றோ இந்நிலைகள் மாறிவிட்டன. சூடு அடிப்பதற்கு முன்போ பின்போ எம்பெருமான் தான்தோன்றியப்பனுக்கு புதிர்க்கோட்டை காவிச்செல்வார்களாம். புதிர்க்கோட்டை என்பது வைக்கோல் கொண்டு அமைத்த கோட்டைக்குள் புதிய நெல் வைத்து பூசைப் பொருட்களுடன் காத்தாடியில் காவிச் சென்று இறைவனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் பட்டிப்பளைப் பிரதேசப் பண்பாட்டுப் பழக்க வழக்கம் இன்று மருவி மறைந்து செல்கின்றது என்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. இவ்விடயத்தை விளக்கும் பாட்டு நமக்கு முழுதாகக் கிடைக்கவில்லை.

புதிர்க்கோட்டை கட்டியதில்
புது நெல்லுத்தான் வைத்து
கதிர்வேட்டி கட்டியில்கே
காத்துத்தந்த கடவுளுக்கு
காணிக்கை......................

பாடல் எமக்கு முழுதாகக் கிடைக்காவிட்டாலும் அதில் சொல்லப்பட்டிருப்பது புலனாகின்றது. இவை நமது பாக்கியங்களே

இத்தோடு காவல் காக்கும் நிகழ்வுக்கான பாடல் ஒன்றையும் பார்ப்போம்

சூட்டுலாம்பு சூழலாம்பு
அத்திவரும் காவல்லாம்பு
பாட்டுவரும் முன்னால
வெளிச்சம் போட்டுவரும் பின்னால்

அடுத்து சூடு அடித்தல் என்பது ஒரு பெரிய சடங்காகும். ஆனால் இன்று இன்நிகழ்வும் மருவி முற்றாக மாற்றம் பெற்று விட்டது. சூடு அடித்தல் நிகழ்வு அன்று பின்வருமாறு நிகழ்ந்தது.

தெரிந்தெடுக்கப்பட்ட உயர் நிலம் பண்படுத்தப்பட்டு " களவட்டி " தயாரிக்கப்படும். புல்கொத்தி, துப்பரவு செய்து, நீர் தெளித்து, நிலம் தட்டி, அண்ட வைத்து, கோலக்கட்டால் கூட்டி, வாருகல்புல் கட்டால் சிறுமண் தள்ளி ஓடுபோல வளவளப்பான ஒரு பிரதேசத்தை உருவாக்கி அதன் நடுவே அரக்கடி புதைத்து, சூடு போடத் தொடங்குவர். அரக்கடி என்பது ஒரு பாக்கு, ஒரு பழம், ஒரு வெற்றிலை, பூ, சாராயம், இரும்பாணி அல்லது சங்கு என்பன வைத்து களவட்டியின் நடுவே மண்ணின் உள்ளே புதைப்பர். இதன் பக்கத்தில் கணு ஒன்றும் நட்டு வைப்பர். இதனையே அரக்கடி என்று கூறுவர். எருமை மாடுகளைக் கொண்டு சூடு மிதிக்கும் வைபவம் நடக்கும். இன்று ஒரு மணித்தியாலயத்திற்குள் மெசினால் போடப்படும் சூடு ஒரு இரவுச்சூடு என்ற பெயரால் மாலையில் சூட்டில் மாடு ஏற்றப்பட்டால் சாமம் வரை மாடு சுற்றிச் சுற்றி சூடு மிதிப்பதும் பொலிக்கொடி வெளியேற்றுவதும் நடைபெறும். அதிகாலையில் பொலி பட்டறையில் போட்டுப் பாதுகாக்கப்படும் . மதியத்தின் பின் அவரியில் ஏறி நின்று தூற்றுவர்.பின் தூற்றிய பொலியை

சாக்குகளில் பிடித்து வண்டில்களில் வீட்டுக்கு அனுப்புவர். இவ்வாறு நான்கு ஐந்து இரவின் பின் சூடு முடிந்து விடும். அவுரி என்பது ஒரே நீளமுள்ள தடிகள் நான்கை எதிரும் புதிருமாக வைத்து வைக்கோல் புரியால் கட்டி முக்காலி அமைப்பினை நாற்காலி கட்டி அதன் மேல் நின்றே தூற்றுவர்.

இன் நிகழ்வு முடிந்த பின் களவட்டிப் பொங்கல் பொங்கி களவட்டி தொட்டுக் கும்பிடும் நிகழ்வு நடக்கும் இதில் பொங்கல் செய்து றொட்டி சுட்டு அரக்கடியில் புதைத்த பொருட்களை எடுத்து படையலுடன் வைத்து வணங்கி உண்டும் குடித்தும் மகிழ்ந்தும் தொட்டுக் கும்பிட்டுச் செல்வார் ( நிலத்தை ).

அக்காலத்தில் களவட்டிப் பிச்சை என்பது பிரபல்யம். இதில் அதிகம் கைம் பெண்களே பங்கு கொள்வர். இதற்கு வரும் பெண்களுக்கு நெல் பிச்சையாக வழங்கப்படும் இது ஒரு பெரிய தர்ம சிந்தனையையும் கொடைத்திறத்தையும் எமது பண்பாட்டில் வளர்த்து வந்த செயற்பாடாகும். ஆனால் இன்று இச்செயல்கள் யாவும் மாற்றம் பெற்று அருகிச் செல்லுகின்றது.

இது போல் மாட்டை சூட்டில் ஏற்றி சூடு அடிக்கும் போது பல பாடல்கள் பாடப்படுகின்றது. இது பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபட்டது. பட்டிப்பளை பிரதேசத்தில் உலாவரும் சில பாடல்களில் ஒன்று

பொலி பொலி தாயே
பூமா தேவி பொலியம்மா
பூமி பொலிய புண்ணியம் தான் பொலிய
ஓடி நடகிடாவே உண்ட
உறுதி உள்ள காலாலே
ஏறி நடகிடாவே
எங்கும் பொலிந்திடவே

மாதாவே தாயே
மனம் மகிழத்தான் பொலிகள்
வையம் தளைத்திடவே
வளைவு பொலியம்மா

பொலி பொலி தாயே பொலி
பூமாதேவி பொலியம்மா
பொன்னின் கிழமை மாதாவே
பொலி பொலி தாயே
பொலியம்மா பொலி

தாயே பொலி தம்பிரானே பொலி
பூமி பொலி பூமா தேவி பொலியம்மா
மண்ணின் கனமே
மாதாவேவளர்பூமி மாதாவே ( தாயே )
நிறைகழமே பொன்னின் கிழமை
மாதாவே தாயே பொலி பொலியம்மா
தாயே பொலி தம்பிரானே
பொலிபொலி பொலியம்மா

போரேற பொலியுநிற
தாயே பொலியம்மா
பூமியில் உள்ளோர் ஈடேற
பொன்னின் கழமே மாதாவே
தாயே பொலியம்மா


ஆனால் இன்று எம்மிடையே இன்நிலை மாற்றம் அடைந்து செல்கின்றது.

தூற்றும்போது காற்றினை அழைப்பதற்காக இரங்கல் பாடல்பாடி அழைக்கும் நிகழ்வு உன்னதமானது

வாருமையா வாருமையா
வால் நாசா வாருமையா
வாடை மூலை தான் திறந்து
வாராயோ வால்ராசா
வாட்டமுறா தெங்களுக்கு
வாக்குதவ வேணுமையா
அந்தி மாலை ஆகுமுன்னே
அவுரி விட்டு நாமிறங்க
பொங்கி வரவேணுமப்பா
பூபாலா வால்ராசா

வாருமையா வாருமையா
வால் ராசா வாருமையா

காசி பணம் வேணாமய்யா
காராக நீ வந்து கருணை தருவாயே
தூசி பறக்க வேணும்
தூய பொலி சேரவேனும்
வாராயோ வாராயோ



உழவும் போது பாடப்படும் மற்றுமொரு பாடல்

நாளது பார்த்து நார்க்கம்பு தான் வெட்டி
ஏரது பூட்டி இடம் வலம் உழுதிடவே
ஓடிநட கண்டே உண்ட உறுதியுள்ள காலாலே
பாரக்கலப்பையடா தம்பி செல்லக்கண்டே
உனக்கு பாரமிகுந்தோஞதடா
ஓடி நட கண்டே உண்ட உறுதியுள்ள காலாலே
வாய்க்காலோ பஞ்சி மெத்தை - செல்லா
உனக்கு வரம்போ தலையணையா
பார்த்து நட கண்டே உண்ட பார்வையுள்ள கண்ணாலே
கேட்டு நடகண்டே உண்ட கெடுதியுள்ள காதாலே
வார்த்தையொன்றும் பேசாயோ வண்ணமுள்ள வாயாலே
நலனது பார்த்து நார்க்கம்பு தான்வெட்டி
ஏரது பூட்டி இடம்வலம் உழுதிடலாம்

இனி சில சொல் பிரயோகங்களைக் காண்போம் விவசாயத்தில் அன்று பயன்படுத்தப்பட்ட சொற்கள் தூயதமிழ்ச் சொற்கள் ஆனால் இன்று மருவி மறைந்து போகின்றன.

| | |
|---|---|
| களவெட்டி | - சூடடிக்கும் இடம் |
| களம் | - சூடடிக்கும் இடம் |
| கோலாமாறு | - பன்னல், நெல்லி போன்ற தாவரங்களின் சேர்க்கையால் உண்டான கூட்டும் தடி. |
| வாருகல் | - இது ஒரு வகைப் புல்லால் ஆன கூட்டும் சிறிய தும்புத்தடி |
| அரக்கடி | - புதைக்கப்படும் சில பொருட்கள் நடுக்கள வட்டி |
| அரக்குமாடு | - மாட்டுத்தொழுவையில் தலைச்சன் மாடு இதுவே நின்ற நிலையில் நின்று ஏனைய மாடுகள் சுற்றி வருமாறு செய்வது |
| வேலக்காரன் | - கொழுகம்பு |
| கட்டு | - எடுபிடி, அள்ளு என்ற சொற்களுக்கும் பதிலாகப் பாவிக்கும் சொல் |
| குஞ்சுவாயன் | - கைப்பெட்டி |

போர்வாயன் - சால்டு, தோல் பாலன்

கோல் - சாணம்

பொலி - நெல்

பொலிக்கொடி - வைக்கோல்

குழைத்தல் - தூற்றும் போது தூசி விழுதல்

பட்டறை - வைக்கோல் கொண்டு கட்டப்படும் ஒரு வகைப் பெரிய களஞ்சிய இடம்

வால்ராசன் - காற்று

அவரி - தூற்றுவதற்காக நான்கு தடி கொண்டு கட்டப்படும் உயரமான ஒரு பொருள் இதன் மேல் நின்று தான் தூற்றுவர்

கொம்புமுறித்தல் - தூற்றும் போது தூசி தட்டி துணியை அகற்றுதல்

கணக்கன் - மரைக்கல்

கொல்லன் - மண்வெட்டி

விசுட்டுவான் - கேட்டி

உருட்டுவான் - கயிறு

பல்விளிச்சான் - தேங்காய்

வாதிக்காலி - மாடு

வேலையாள் - வேலைக்காரன்

நீர் எடு - வெள்ளம் கட்டு

நித்திரை கொள்ளுதல் - மின்னிகட்டல்

சள்ளு - பானை வெள்ளை



இவ்வாறான மிக அற்புதமான சொற்களஞ்சியங்களும் மரபுகளும் நம்மை விட்டு அகலாமல் பாதுகாக்க வேண்டியது எமது பணியாகும். எனவே இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்ட பாடல்களை மனம் கொண்டு இவற்றில் சிறப்பை நமது இலக்கியக் கருவூலங்களில் சேர்க்க முயல்வோமாக.

### உசாவி அறிய உதவியவர்கள்

இக்கட்டுரையில் வரும் பாடல்களைத் தந்து உதவியவர்கள் களஞ்சியச்சொல் உதவியவர்கள்

திரு. பொ. கந்தசாமி J.P

திரு. இ. கந்தசாமி

திரு. சி. தட்சணாமூர்த்தி

திரு. த. சின்னக்குட்டி (சின்னக்குட்டி அப்புச்சி)

திரு. க. இரத்தினசிங்கம்

திரு. உ. பாக்கியசெல்வம் ( கிராமத்தலைவர் )

திருமதி. P. குணரெத்தினம்

# மண்முனை தென்மேற்கு

பெண்ணரசோச்சில் பெரும் புகழ் கொண்ட
பெரும் நிலப் பரப்பாம் எழில் மிகும் எங்கள்
மண்முனை தென் மேற்கெனும்
வளம் மிக்க நிலப்பரப்பதனில் என்றும்
எண்ணம் போல் வாழ்வினிக்க இங்கிருப்போர்
உழைப்பாலே உயர்ந்திருப்பர் வாழ்வுதனில்

கண்ணுதல் கொண்ட கருணைமாக் கடவுள்
காத்தருள் செய்திட அன்றொருநாள்
மண்ணுள் இருந்து சுயம்புலிங்கமதாய்
மானிடர்க்குக் காட்சிதந்து மாட்சிமை நல்கும்
விண்ணவரும் போற்றுகின்ற சிவத்தலமாம்
கொக்கட்டிச்சோலை திருத்தான்தோன்றீச்சரம்

மலையும் சோலையும் மருவித் தழுவும்
மஞ்சள் மலர்கள் பூத்துக் குலுங்கும்
தலைவன் ஒருவன் தவழும் பதியாம்
தாந்தா மலைக் குமரன் நாமம்
நிலையாய் நாமும் நித்தம் உரைக்க
நிறைந்திடும் வாழ்வில் செல்வமனைத்தும்

வேகமாய் பரவும் விடத்தைக் கூட
விரைந்தே போக்கும் விந்தை காண்பீர்
நாகசக்தி அருள் வழங்கும் கோவில்
நம்மவர் நெஞ்சில் நிறைந்த கோவில்
நாகம் தூங்கும் தாமரைத் தடாகம் அதில்
நாளும் நீராடிப் பாவம் போக்கிடவாரீர்

செந்நெல் விளையும் செழும் நிலப்பரப்பும்
செந்தேன் விளையும் சோலைகள் வனப்பும்
மந்தைகள் மேயும் புல்வெளிப் பரப்பும்
மந்திகள் தாவும் மாஞ்சோலை வனப்பும்
சிந்தைகொள் மானிடம் நெஞ்சில்
செந்தமிழ்த் தேன் மொழியில் கவியும் சுரக்கும்

**மாவூரான் ரவி**
கடுக்காமுனை

தென்மோடி, வடமோடி எனும் இருவகை
நாட்டுக் கூத்துக்கள் சிறப்புற உண்டு இங்கே
தன்னார்வத்துடன் கலை வளர்க்கும் அண்ணாவிமார்
தமிழன்னைக்கு சதங்கையிடப் பலருமுண்டு
வன்னிமை உடையார் பதவி கொண்டு
வாழும் பரம்பரை மக்கள் உண்டு

கல்விச்சாலைகள் ஊர்கள் தோறும் உண்டு
கற்றிடும் சிறார்கள் என்றும் உண்டு
எல்லே கரப்பந்து என்று பல விளையாட்டுக்கள்
எம்மிளைஞர் யுவதிகளுக்கு எங்குமுண்டு
சொல்லிலும் செயலிலும் சோர்விலாது
சுறுசுறுப்புடன் வாழும் இளைஞருண்டு கட்டித்தயிர் உண்டு
காலைப் பொழுதினிலே ஒன்றாய்க்கூடி
கிட்டிப்புள் விளையாட்டில்
இரு பிரிவாய் பிரிந்து நின்று நன்றாய்
கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்கப்
பாலாறு.... பாலாறு எனும் மூச்சிவிடாப்
பாட்டில் இன்றும் நெஞ்சம் இனித்திடுதே

கோயிற் சடங்கு திருவிழாக் காலங்களில்
சிறுவர் சிறுமியர் ஒன்றாய்க் கூடி
காவடி வசந்தன் கோலாட்டம் கும்மியினை
கால்கள் பின்னித் தாளமுடன் ஆடிடும் ஆட்டம்
காண்போர் மனங்களில் ஆனந்தம்
பொங்கிடச் செய்யும் அற்புதம் காண்பீர்

நீரில் ஆடி நிலவில் உலாவித் தினம்
நெல்வயல் பரப்பில் கால்கள் பதித்து
பாரில் தமிழர் போற்றும் கலைகள் அனைத்தும்
பேணி வளர்த்து பெருமை கொள் மாந்தர்
ஊரில் மிதமாய் உள்ளனர் காண்பீர்
இதுவோர் உண்மை புகழில்லை கண்டீர்.



# மண்முனை தென்மேற்குப் பிரதேச இடப்பெயர்களினூடாக வெளிப்படும் சமூக வரலாற்றுச் செய்திகள்

- ஒரு தேடலின் பதிவு.-

மீன்பாடும் தேனாடு என சிறப்பிக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சிறப்பு சேர்க்கும் பெருநிலப்பகுதி படுவான்கரை ஆகும். இயற்கை அழகும் வரலாற்றுத் தொன்மையும் மிக்க இப்பிரதேசப் பரப்பில் போரதீவுப்பற்று பிரதேசத்திற்கும் மண்முனை மேற்குப் பிரதேசத்திற்கும் இடையே மண்முனைக்கு தென்மேற்காக நீண்டு கிடப்பது மண்முனை தென்மேற்கு பிரதேசமாகும். 1981ம் ஆண்டு தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பட்டிப்பளையில் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் இன்றுள்ளோர் இதனை பட்டிப்பளை பிரதேசம் என அழைப்பர். தற்போது இப்பிரதேசத்தில் 24 கிராமசேவகர் பிரிவுகளும் 8386 குடும்பங்களும் உள்ளன. இப்பிரதேச இடம்பெயர்களினூடாக வெளிப்படும் சமூக வரலாற்று செய்திகளை முன்வைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மட்டக்களப்பு மானிலத்தின் பண்பாட்டு வரலாற்று உருவாக்கத்திற்கு படுவான்கரை பிரதேசம் பற்றிய முறையான ஆய்வுத்தேடல் அவசியமானதாகும். ஏனெனில் தற்போதைய மட்டக்களப்பின் உருவாக்கத்திற்கு முன்பு சிறப்பு பெற்று விளங்கிய பிரதேசமாகவும் பல வரலாற்று தலைமைகள் நிலை கொண்டு தமது நிருவாக நடவடிக்கைகளை மேற்கொண்ட இடமாகவும் இப்பரந்த பிரதேசம் காணப்படுகின்றது. இவற்றை ஆதாரப்படுத்தும் வகையில் இப்பிரதேசத்தின் பல இடங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன. சுயலாபத்தன்மைக்கு அப்பால் இப்பிரதேசம் பற்றிய நேரியதான ஆய்வு அவசியமானதாகும். அத்தகைய எவ்வித ஆய்வுகளும் இதுவரை இப்பிரதேசத்தில் இடம்பெறவில்லை. மண்முனை தென்மேற்கில் உள்ள முனைக்காடு, கொக்கட்டிச்சோலை, அம்பிளாந்துறை, மணற்பிட்டி, தாந்தாமலை போன்ற பல இடங்களை ஆய்வியல் ரீதியாக நோக்க முடியும்

## 1. பிரதேசத் தொன்மையும் வீரசைவ வழிபாடும்

### (அ) முனைக்காடு

மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் முனைக்காடு பழமையான கிராமமாகும். காடுகள் நிறைந்த முனையாக இது இருந்தமையால் முனைக்காடு எனப் பெயர் வந்தது. ஒரு காலத்தில் இது களப்பு முனைக்காடு எனவும் பின்னர் குடியிருப்புக்கள் அதிகரித்த சூழலில் பெரியமுனைக்காடு, சின்ன முனைக்காடு எனவும் அழைக்கப்பட்டது. இம் முனைக்காட்டின் அடர்ந்த காடுகள் நிறைந்ததும் உயர்ந்த நிலப்பகுதியை கொண்டதுமான ஒரு பகுதி பட்டறைக்காடு என்றும், பட்டறைத்தீவு என்றும் அழைக்கப்பட்டமைக்கு உலக நாச்சியுடன் தொடர்புபட்ட வரலாற்றுச் செய்தியொன்றுள்ளது. இது இக்கிராமத்தின் பழமையினை விதந்துரைக்கின்றது.

த. மேகராசா
அரசடித்தீவு

கலிங்கநாட்டு மன்னனின் மகளான உலக நாச்சியும் அவளது தம்பி உலகநாதனும் இந்தியாவிலிருந்து இலங்கை வந்ததையும் மண் செறிந்த குறுகலான முனையாகையால் மண்முனை எனப்பட்ட ( இக்காரணத்தை மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது ) பிரதேசத்தினை கி.பி 4ம் நூற்றாண்டில் உலகநாச்சி ஆண்டமையை மட்டக்களப்பு வரலாறு உணர்த்துகிறது. மண்முனை அரசி. அரசியிருக்கை இட்டு வாவியின் இருபுறமும் குடியேற்றங்களை மேற்கொண்ட அதே வேளை பாதுகாப்புக்கான படையினரையும் தங்க வைத்திருந்தார். அப்படையினரில் ஒரு பகுதியினர் முனைக்காட்டின் முற்கூறிய காட்டுப்பகுதியில் தமது ஆயுதங்கள், உணவுப் பொருட்களை பாதுகாப்பதற்காக பட்டறை கட்டி மறைத்து வைத்திருந்த இடம் பின்னர் பட்டறைக்காடு என்றும் பட்டறைத்தீவு என்றும் அழைக்கப்படலாயிற்று என கூறப்படுகிறது.

இதே வேளை இப்பகுதிக்கு வந்த போர்த்துகேயர் இப்பகுதியில் காணப்பட்ட படைகளை கைதுசெய்து மண்முனை வாவியை அண்டிய தீவொன்றில் சிறை வைத்து விசாரித்தனர் என்றும் அதனால் வாவியை அண்டிய அத்தீவு சிறையாத்தீவு என்றாகிய என்றும் வழங்கிவரும் வாய் மொழிக் கதைகளும் ஆராயப்பட வேண்டினவாகும்.

## (ஆ) கொக்கட்டிச்சோலை

தான்தோன்றீச்சரம் அமையப் பெற்றமையால் புகழ்பெற்ற ஓர் இடப்பெயராக கொக்கட்டிச்சோலை விளங்குகின்றது. கொக்குநெட்டி மரங்கள் அதிகமாக நின்றமையால் கொக்கொட்டிச்சோலை என்றும் பின்னர் கொக்கட்டிச்சோலை என்றும் இப்பெயர் வந்தது என்பர். உலகநாச்சி மண்முனையை ஆட்சி செய்த காலத்தில் அவ்அரசியால் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் கட்டப்பட்டதாக கோயில் வரலாறு கூறுகின்றது. திகடன் என்னும் வேடன் மரத்தை வெட்டிய போது அம்மரத்திலிருந்து இரத்தம் வழிந்ததாகவும் பின்னர் அவ்விடத்தில் கண்டெடுக்கப்பட்ட லிங்கம் காரணமாக இத்திருத்தலம் தான்தோன்றீச்சரம் ஆகியது என்றும் அறிய முடிகின்றது.

உலக நாச்சியின் காலத்திலிருந்து மட்டக்களப்பை ஆட்சி செய்த மன்னர்களால் மதிக்கப்பட்ட தலமாகவும் கண்டி மன்னர்களின் திருத்தொண்டினை ஈட்டிய அதே வேளை மாகோனால் அரன் ஊழியம் வகுக்கப்பட்ட ஆலயமாகவும் இத்தான்தோன்றீச்சரம் விளங்குகின்றது. தேர், குடிமரவுத்திருவிழா, குடுக்கை கூறுதல் போன்ற பல அம்சங்களால் இவ்வாலயம் சிறப்பு உயர்ந்து நிற்கின்றது. அதே வேளை இப்பிரதேசம் வீரசைவத்தை பின்பற்றும் முற்குவர்க்கு உரியது என்பதையும் இவ்வாலயம் பறைசாற்றுகின்றது.

இவ்வம்சத்திற்கு அப்பாற்பட்ட பிறிதோரு விடயத்தையும் இன்று வரையும் கொக்கட்டிச்சோலை நினைவு படுத்துகின்றது. முன்பு வட்டார முறையில் பிரதேச ஊர்கள் பிரிக்கப்பட்டிருந்ததோடு கிராம தலைமைகள் மூலம் வழிநடத்தப்பட்டது. கொக்கட்டிச்சோலை 9ம் வட்டாரம் 10ம் வட்டாரம் என கூறப்படுவது பிரதேசத்தின் அனைத்து ஊர்களும் 11 வட்டாரங்களாக பகுக்கப்பட்டிருந்த நினைவு புறந்தள்ளப்பட்டு கொக்கட்டிச்சோலையினையே அது நினைவுறுத்துவதாகவும் உள்ளது. கட்டுரையின் விரிவஞ்சி வட்டார விபரம் தரப்படவில்லை.

## 2) வன்னிமை ஆட்சி பற்றிய செய்தி

### (அ) அம்பிளாந்துறை

மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள வரலாற்று தொன்மைமிக்க இடங்களுள் அம்பிளாந்துறை முதன்மையானதாகும். " அம்பிளாந்துறை பற்றிய ஓர் ஆய்வு முயற்சி " என்னும் கட்டுரையில் க.மகேஸ்வரலிங்கம் இவ் ஊர் பெயருக்கான ஐந்து காரணங்களை கூறியுள்ளார்.

i. அம்பிளா என்னும் ஒரு வகை மரமுண்டு. இம்மரம் இத்துறைமுக கரையில் காணப்பட்டதால் அம்பிளாந்துறை எனப்பெயர் தோன்றி அம்பிளாந்துறையாயிற்று.

ii. தரிப்பிடத்தை அல்லது திறந்தவெளி மண்டபத்தை அம்பலம் என்பர். அம்பலம் இருந்த துறை அம்பலாந்துறை என ஆகி பின்னர் மருவி அம்பிலாந்துறை அல்லது அம்பிளாந்துறையாயிற்று.

iii. பண்டைய நாளில் மட்டக்களப்பு வாவியை கடந்தவர்கள் மரக்கட்டையை அல்லது கட்டுமரத்தை பயன்படுத்தியிருப்பர். குறித்தவொரு கால கட்டத்தில் இதில் புதுமை புகுத்தப்பட்டிருக்கலாம். அப் புதுமை தோணி ஓடம் மரக்கலம் ஆகியவையாக இருந்திருக்கும். அம்பியென்பது ஓடம், தோணி, மரக்கலம் எனப்பொருள் தரும். எனவே இதனை அதிசயத்தோடு நோக்கியிருப்பர். இதனைக் கொண்டே பெயரும் சூட்டியிருக்கலாம். இவ் வகையில் அம்பிஉலாந்துறை அம்பிளாந்துறையாக மாற்றம் பெற்றிருக்கலாம்.

iv. அம்பலக்காரார் என்னும் வன்னியர் அம்பிளாந்துறையில் நிரந்தரமாக வாழ்ந்தனர் எனக் கூறப்படுகிறது. அவ் வகையில் இங்கிருந்த துறையும் அவர்கள் கட்டுப்பாட்டுக்குட்பட்டதாக இருந்திருக்கும். இதனால் அம்பலக்காரர் துறை எனப் பெயர் பெற்று காலப்போக்கில் அம்பிளாந்துறை என மாற்றம் பெற்றிருக்கலாம்.

v. அம்பிளாந்துறையென்பது திருவானைக்கா என்னும் இடத்தின் மறுபெயராக குறிப்பிடுவர். திருவானைக்கா என்பது தென்னகத்தில் உள்ள சிவதலங்களில் ஒன்று. இது காவேரியின் வடகரையில் தொண்டை மண்டலத்துள் உள்ளது. தொண்டை மண்டலத்திலிருந்தே வன்னியர் மட்டக்களப்பிற்கு குடியேறியதாக பேராசிரியர் சி. பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார். அம்பிளாந்துறையில் குடியேறிய வன்னியர்கள் தமது தாயூர்ப்பெயரை அல்லது வழிபாட்டுக்குரிய தலத்தின் பெயரை புதிதாக புகுந்த ஊருக்கு சூட்டியிருக்கலாம்.

க. மகேஸ்வரலிங்கத்தின் மேற்கூறிய கருத்துக்கள் இவ்வூர் பெயர்த்தொடர்பான தனித்துவமான பல செய்திகளை தருகிறது. அவ் வகையில் அம்பிளாந்துறையில் வன்னிமை ஆட்சி இடம்பெற்றுள்ளது என்பதையும் வன்னியர் வாழ்ந்துள்ளார் என்பதையும் அறியமுடிகின்றது. தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும் என்னும் நூலில் வெல்லைவூர் கோபால் அவர்கள் மட்டக்களப்பு முற்குவரிடையே காணப்படும் முக்கிய பிரிவினர் படையாட்சி குடியினராவார். பூபாலகோத்திர வன்னிமையும் இவர்களை சார்ந்ததே. இவர்களே மகோன் காலத்தில் வன்னியர்களாக நியமிக்கப் பட்டவர்கள். ( பக்- 62) என்று கூறுகின்றார். அதே வேளை க. மகேஸ்வரலிங்கம் அவர்கள் தமது கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"மட்டக்களப்பு முற்குவருள் படையாண்ட குடிகள் என்னும் உட்பிரிவுண்டு. இப்பிரிவினரே பண்டைக் காலம் முதல் அம்பிளாந்துறையின் பெரும்பான்மையினராக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் படைத் தொழிலுக்காக தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தவர்கள். தொழில் காரணமாக பெயர்பெறும் இவர்களுள் முற்குவர்களை விட பிறசாதியாரும் இணைந்திருக்கலாம். தென்னிந்தியாவில் படைத் தொழில் செய்வோர்களுள் அம்பலக்காரர் என்னும் சாதியார் உள்ளனர். இவர்கள் படைத்தொழிலாளர்களாவும், வேளாண்மை செய்வோர்களாகவும் வாழ்வதுடன் வன்னியர் அல்லது சேவைக்காரர் எனப் பெயர் பெறுவர்" என ந.சி. கந்தையாப்பிள்ளை குறிப்பிடுவர்.

மேற்கூறிய கருத்துக்களை நோக்கும் போதும் படுவான்கரைப் பிரதேசத்தில் பலம்பொருந்திய தனியான வன்னிமையின் ஆட்சியில் அம்பிளாந்துறையும் இருந்தது என்று வழங்கும் கர்ண பரம்பரை கதையையும் 1790ம் ஆண்டளவில் பிறந்திருக்கக் கூடியதாக இருக்கலாம் எனக் கருதும் அம்பிளாந்துறையை ஆண்ட குஞ்சிலையாப்போடி வன்னியனார் பற்றிய செய்திகளையும் மாகோன், குளக்கோட்டன் போன்றோர் ஈழத்தில் வன்னிமையர்களை குடியேற்றிய செய்திகளையும் நோக்கும் போதுமஅம்பிளாந்துறை வன்னிமையாட்சி இடம்பெற்ற ஓர் பெரிய தளம் என்பதையு அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

## 3) இராசாக்கள் தங்கிய இடம்

### 1. மணற்பிட்டி

உலகநாச்சியின் காலத்துக்கு முன்பு மட்டக்களப்பை ராசதானியாக்கி மனுநீதியின்படி அரசாற்றி வந்த ஒருவனாக கூர்த்திகன் குறிப்பிடப்படுகின்றான். இவனது நான்கு சந்ததியினரின் ஆளுகையில் சுமார் 230 வருடங்கள் மட்டக்களப்பு இராசதானி இருந்தது என்றும் இக்காலத்தில் மாப்புட்டி, மணற்புட்டி, நாப்புட்டி, மல்கவத்தை, உன்னாச்சை, தம்புட்டி, பங்கிடான்வெளி, அம்பிளாந்துறை, அறுகம்பைபூமுனை, கொங்குகாசி, அப்பன்பிட்டி ஆகிய ஊர்கள் மட்டக்களப்பில் இராசாக்கள் கூடும் இடமாய் இருந்து வந்ததென மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் குறிப்பிடுகிறது. இவ்வகையில் மணற்பிட்டி முக்கியமான இடமாகும். மணல் நிறைந்த பிட்டி ஆகையால் இப்பெயர் தோன்றியது என அறியமுடிகின்றது. அதே வேளை இப்பகுதியில் மக்கள் குடியேற்றப்பட்டு வாழ்ந்து வந்தனர் என்றும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தொற்றுநோய் காரணமாக பலர் இறந்தனர் என்றும் அவ்விடத்து மக்கள் வேறு இடத்திற்கு சென்றனர் என்றும் வாய்மொழிக்கதை வாயிலாக அறியமுடிகின்றது. மேலும் இவ்விடம் மணல் எடுக்கின்ற முக்கியமான தளமாகவும் போக்குவரத்துக்குரிய தங்குமிடமாகவும் சிறந்த வியாபார நிலையமாகவும் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. மணற்பிட்டி ஆற்றுநீர் புளுகுநாவை குளத்திலிருந்து வருவதென்பதும் குறிப்பிடத்தக்கது.

மணற்பிட்டி ஐந்து வீதிகள் சேரும் ஓர் பெரிய சந்தியிலேயே அமைந்துள்ளது. இதனை ஊடறுத்துச் செல்லும் வீதி தற்போதும் "கம்பிறோட்" என அழைக்கப்படுகின்றது. 1800ம் ஆண்டு காலப்பகுதியில் ஆங்கிலேயர் முதன் முறையாக மட்டக்களப்பிலிருந்து கல்முனை மற்றும் சம்மாந்துறைக்கு தொலைத்தொடர்பு வசதியினை செய்தனர். இது மட்டக்களப்பு மாந்தீவு, வவுனதீவு, மண்டபத்தடி, மணற்பிட்டி, வெல்லாவெளி ஆகிய பிரதேசங்களினூடாகவே மேற்கொள்ளப்பட்டது. இதனால் இந் நெடும்பாதை " கம்பிறோட்" என அழைக்கப்படலாயிற்று. இதனைத் "தார்றோட்டு" என்றும் பிரதேச மக்கள் அழைப்பர். 1822இல் இலங்கையில் ஆங்கிலேயர் நில அளவையை மேற்கொண்டபோது கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கியும் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கியும் மேற்கொண்டனர். அவ்வேளை கொழும்பில் ஓர் இடத்திலும் மட்டக்களப்பில் வவுணதீவிலும், ஐயர் குளத்திலும் நில அளவைக் கோபுரங்களை நிறுவினர். இவ்வீதியை ஆங்கிலேயர் வேஸ்லைன் வீதி எனவும் அழைத்தனர். இந்நில அளவைக் கோபுரங்கள் மண்முனை தென்மேற்கில் அமையாவிட்டாலும் படுவான்கரையிலேயே அமைக்கப்பட்டமை ( காஞ்சிரங்குடாவில் இன்றும் உள்ளது ) சிறப்புக்குரியதாகும்.

## 4. கண்டி மன்னனுக்கு மானியம் வழங்கப்பட்ட நிலங்கள்

### (அ) சேவகப்பற்று

சேவகப்பற்று என்பது முதலைக்குடா. மகிழடித்தீவு கிராமங்களுக்கு வடபுறமாகவுள்ள வயல்வெளியாகும். சேவைக்காரன்பற்று என்பது குறுகி சேவகப்பற்றாகி யிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. சேவகம் என்பதற்கு தொண்டூழியம் என்றொரு பொருள் உண்டு. இது முன்னர் கண்டி மன்னனுக்கு மானியம் செலுத்தும் வயல் நிலங்களுள் ஒன்றாக இருந்தது என்றும் கூறப்படுகின்றது. இவ் வயல்நிலம் பண்டைய நாளில் படையாண்ட குடியாருக்கு உரித்துடைமையாக இருந்ததாகவும் அது அவர்களுக்கு மானியமாக கிடைத்ததாகவும் மரபுவழியாக செய்திகள் கூறுகின்றன. இவ் வயல்காணி பகுதியே அமெரிக்க செரண்டிப் தனியார் கம்பனியினால் வாங்கப்பட்டு இறால் வளர்ப்பு செய்யப்பட்டமையால் " இறால் வளர்ப்பு " எனவும் அழைக்கப்பட்டது. 1987ம் ஆண்டு போர்ச்சூழலில் இவ் இறால் வளர்ப்பில் வேலை புரிந்த தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதும் இப்படுகொலை இறால் வளர்ப்புப் படுகொலை என அழைக்கப்படுவதும் இச் சம்பவம் படுவான்கரை பிரதேசத்தில் கறை படிந்த ஓர் துயர நிகழ்வாக இருப்பதும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

### (ஆ) அத்தியாமுன்மாரி

அம்பிளாந்துறைக்குரிய உட்பிரிவுகளுள் ஓர் இடமே அத்தியாமுன்மாரி. வேளாளர் சாதியில் அத்தியாகுடி என்றொரு பிரிவினர் உள்ளனர். முன்மாரி என்பது மழையை நம்பி பயிர் செய்கை பண்ணப்படும் மேட்டு நிலமாகும். அத்தியாகுடியார் இருந்த இடம் அத்தியாமுன்மாரி எனப்பட்டிருக்கலாம். இப்பகுதியில் அவர்கள் ஓர் பிள்ளையாரை வைத்து வணங்கிய செய்தியையும் வாய்மொழியாக அறிமுடிகின்றது. அத்தியாமுன்மாரி என்பதற்கு வேறொரு காரணமும் கூறப்படுகின்றது. அத்தி என்பது ஒரு வகை மரமாகும். முன்மாரி என்னும் பின் ஓட்டையும் காரணப் பெயராக வைத்து மாவடிமுன்மாரி பனிச்சையடி முன்மாரி எனப் பெயர் பெற்றது போன்று அத்தியா முன்மாரி எனப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

அத்தியாமுன்மாரி நெற்காணியும் கண்டி மன்னனுக்கு திறை செலுத்தும் இடமாக இருந்துள்ளமை வரலாறு தரும் செய்தியாகும். வால்கட்டியிலிருந்து வில்லுக்குளம் தாண்டி வெல்லாவெளி செல்லும் நேரிய பாதையும் அம்பிளாந்துறையில் இருந்து கற்சேனை செல்லும் நேரிய பாதையும் சந்திக்கும் நாலாஞ்சந்தி அத்தியாமுன்மாரிச் சந்தியாகும். பின்னாளில் அம்பலத்தடிச் சந்தியென்றும் அதன்பின் அச்சந்தியில் கட்டப்பட்ட தாமரைப்பூ நினைவுத் தூபி காரணமாக தாமரைப்பூச்சந்தி என்றும் அழைக்கப்படுகின்றது. இன்று இப்பகுதியில் குடியேற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

## 5. நாகர், சோதையர் முதலான இனக்குழு பற்றிய செய்தி

### (அ). நாகமுனை

அம்பிளாந்துறையின் உட்பிரிவுகளுள் நாகமுனையும் ஒன்றாகும். இவ்விடப் பெயர் இலங்கையின் ஆதிக்குடிகளுள் ஒன்றாகவும் மட்டக்களப்பில் வாழ்ந்ததாகவும் கருதப்படும் நாகர் இனக்குழுவை நினைவுபடுத்துகின்றது. பண்டைய நாளில் நாகர் என்னும் இனக்குழுவினர் வாழ்ந்ததால் நாகமுனை எனப்பெயர் பெற்றது என குறிப்பிடப்படுகிறது. பண்டாரியாவெளி நாகதம்பிரான் ( நாககட்டு ) ஆலயத்தில் உள்ள புற்றில் விடப்பட்ட பாம்பு நாகமுனை வயலில் உள்ள ஓர் சூட்டின் மேல் இருந்து

கொண்டு விடப்பட்டதாக கூறப்படும் கதையுடன் தொடர்புபடுத்தி நாகம் காணப்பட்ட இடமே நாகமுனை எனப்பட்டிருக்கலாம் என க.மகேஸ்வரலிங்கம் கருதுகிறார். அவ் அடிப்படையில் இவ் இடப்பெயர் நாகர் இனக்குழுவை நினைவூட்டுவது தவறில்லை. ஆயினும் சில இடப்பெயர்கள் மரங்கள், சோலைகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய வகையில் நாகமரம் நின்ற ஓர்முனை நாகமுனை ஆகியிருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர். அரசடித்தீவிற்கும் வில்லுக்குளக்கட்டிற்கும் இடையில் உள்ள ஒரு பகுதி நாவற்காடு என அழைக்கப்படுவதும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டக் கூடியதாக உள்ளது.

(ஆ). சோதையன்கட்டு

உயரமான விரிந்த மண் கட்டுக்களை சோதையன் கட்டு என அழைக்கும் பழக்கம் மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் அதிகமுண்டு. அம்பிளாந்துறையில் ஒரு சோதையன் கட்டு உள்ளது. அரசடித்தீவிற்கு அருகில் உள்ள நாவற்காடுப் பகுதியும் சோதயன்கட்டு என அழைக்கப்படுகிறது. சோதையன் என்போர் ஓர் இனக்குழுவினர் என்றும் உடற்பருமனும் எத்தகைய பாரிய வேலைகளையும் செய்யக் கூடியோர் என்றுமே மக்கள் கருதுகின்றனர். அதனாலேயே சாதாரணமாக செய்துவிடமுடியாத கட்டுக்களை சோதையன் கட்டிய கட்டு எனக் கருதி சோதையன் கட்டு எனவும் அழைக்கலாயின. " சோதையர்கள் நவீன தொல்லியலாளர்கள் குறிப்பிடும் ஒஸ்ரலொயிட் மக்களாய் இருத்தல் கூடும் " ( மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும் பக் : 187 ) என க.மகேஸ்வரலிங்கம் என்னும் ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். ஆக இப்பிரதேசத்துடன் தொடர்புபட்ட இனக்குழுக்களாக நாகர், சோதையன் ஆகியோர் இருந்துள்ளமையை அறிய முடிகின்றது.

## 6. நாக வழிபாடு :

(அ). நாககட்டு

பண்டாரியாவெளி நாககட்டு எல்லோராலும் அறியப்பட்ட ஓர் நாக தெய்வ வழிபாட்டிடமாகும். மண்ணாலாகிய உயர்ந்த நடைபாதையை கட்டு என்றும் வரம்பு என்றும் கூறும் வழக்கம் உள்ளது. நாகதம்பிரானை வழிபட்ட இடம் நாககட்டு என காரணப்பெயர் பெற்றது. இவ்வாலயம் தொன்மைமிக்கதாகும். நாககட்டையும் அம்பிளாந்துறையின் நாகமுனையையும் தொடர்புபடுத்தும் மண்முனையில் வாழ்ந்ததாக கருதப்படும் கொம்பியின் கதை ஒன்றும் உள்ளது. இக் கொம்பியினுடன் பிறந்த நாகமே நாகதம்பிரான் ஆலயம் எனக் கூறப்படும் நாககாட்டில் உள்ள புற்றில் விடப்பட்டு வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. கொம்பி : நாகர் இனத்தைச் சேர்ந்தவள் என்று கருதப்படுவதால் இப்பிரதேசத்தில் எற்கனவே கூறியது போன்று நாகர் என்னும் ஆதிக்குடியினர் வாழ்ந்திருக்க வாய்ப்புள்ளது. இப்பிரதேசத்தில் பரவலாக புற்றுக்களில் பொங்கல் படைத்து இளநீர் வெட்டி வைத்து நாகதம்பிரானை வழிபடும் முறை உண்டு. குறிப்பாக வயல், சேனைகள் செய்கை பண்ணப்படும் காலப்பகுதியில் அப்பகுதியில் உள்ள புற்றில் பொங்கல் வழிபாடு செய்யப்படுவது நீண்ட மரபாக இருந்து வருகின்றது. இவையெல்லாம் இப் பிரதேசத்தில் நாகர் வழிபாடு சிறப்புற்று விளங்கியமையை எடுத்தியம்புகின்றன.

## 7. முருக வழிபாடு :

(அ). தாந்தாமலை

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள மலைகளுள் தாந்தாமலையும் ஒன்றாகும். இம் மலையை அண்மித்ததாக வெள்ளைக்கல் மலை, பெருவெட்டை மலை, விளர மலை ( சுவாமி மலை ), மலையடிச்சேனை மலை, நாவலடிமலை, கந்தவேல்

மலை முதலிய ஓரளவு பெரிய குன்றுகளும் பல பாறைகளும் உள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்க இடங்களில் கற்படுக்கைகள், கல்வெட்டுக்கள் முதலியன காணப்படுகின்றன. இவை ஆய்வு செய்யப்படும் போது பல புதிய செய்திகள் வெளிவருமென்பது திண்ணம்.

தாந்தாமலை என்றதும் முருக வழிபாடே நினைவுக்கு வரும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஒரே ஒரு மலைக்கோயில் இதுவாகும். மழை வேண்டி பூசை செய்ய உடனே மழை பெய்த பல சம்பவங்கள் இவ்வாலயத்திலே நடந்தேறியுள்ளன. " தா " என்போர்க்கு " இந்தா " என்று கொடுக்கும் வல்லமை பெற்ற முருகப் பெருமான் உறையும் பதியென்பதால் இவ்விடம் " தாந்தாமலை " என்றாகியது. என ஒரு வாய்மொழிச் செய்தியுள்ளது. இவ்வாலயம் பழமையான வரலாற்றைக் கொண்டது. ஆதித் திராவிடரின் வழிவந்த வேடர்களால் பராமரிக்கப்பட்ட இடமாகவும் வேல் வழிபாடு இடம்பெற்ற பண்டைய தலமாகவும் இருந்திருக்க சந்தர்ப்பமுள்ளது. தாந்தாமலை ஆலயம் தொடர்பான பல செய்திகளை 2011இல் வெளியிடப்பட்ட குடமுழுக்கு மலரான தாந்தாமலை மாட்சியில் அறியமுடிகின்றது.

## 8. அமுதூட்டல்

### (அ). தெம்மத்தான் கிணற்றடிச் சந்தி

மகிழடித்தீவு சந்தியே தெம்மத்தான் கிணற்றடிச் சந்தி என அழைக்கப்பட்டது. இன்று இப் பெயர் மறைந்து விட்டதென்றே கூறலாம். தற்போது சிதைவடைந்த நினைவுத்தூபி உள்ள பகுதியில் ஓர் கிணறு இருந்துள்ளது. அவ்விடத்தில் வருடாவருடம் தெம்மத்தான் என்பவர் அமுது கொடுத்து வந்துள்ளார். அதன் காரணமாகவே இப் பெயர் வந்ததெனலாம். இவ்விடத்தில் கொடுக்கப்பட்ட அமுதில் பிரதேசம் சார்ந்தோரும் பிரதேசத்திற்கு வெளியில் உள்ளோரும் ஆர்வத்தோடு கலந்து கொண்டுள்ளனர். வருடாவருடம் எதிர்பார்த்திருக்கும் ஓர் அற்புத அமுதூட்டல் நிகழ்வாக இந் நிகழ்வு இருந்துவந்துள்ளது. இது பற்றி க. மகேஸ்வரலிங்கம் என்னும் ஆய்வாளர் " தெம்மத்தான் கிணற்றடி அமுது " எனும் கட்டுரையினையும் எழுதியுள்ளார்.

மட்டக்களப்பு மாநிலத்தில் படுவான்கரைப் பிரதேசம் ஓர் நெற்களஞ்சிய சாலையாக இருந்து வந்துள்ளது. வந்தோருக்கு விருந்தளிப்பது இங்குள்ளோரின் உயரிய பண்பாகும். செல்வம் நிறைந்த தேசமாக இப்பிரதேசம் காணப்பட்டமையால் இப்பண்பு குலவழி குணமாக மாறியிருக்கலாம். போர், இயற்கை அழிவுகள் காரணமாக இப்பிரதேச பொருளாதாரம் நலிவடைந்தாலும், வீட்டில் வறுமையிலிருந்தாலும் இங்குள்ளோரின் மனம் வீட்டுக்கு வந்தோருக்கு விருந்தளிக்கவே விரும்பும். இது ஓர் உறவு வழிப்பழக்கமாக நிலை கொண்டு விட்டது. தெம்மத்தான் கிணற்றடி அமுதும் இம்மனித விசுவாசப் பண்பினையே பறை சாற்றுகின்றதென்பதில் ஐயமில்லை.

## 9. வேறு செய்திகள்

### (அ). முதலைக்குடா

இடப்பெயர்கள் பெரும்பாலும் காரண அடிப்படையிலேயே தோன்றியுள்ளன. குறிப்பிட்ட இடத்தின் இயற்கை அமைவு, அவ்விடத்தில் வாழ்ந்தோர், அவ்விடத்தின் வளர்ச்சிக்கு காரணமாகியோர் போன்ற காரணங்கள் இவ்வகையில் முக்கியமானவையாகும். பல இடங்களின் பெயர்கள் குடா, முனை, தீவு என அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும். அவ்வகையில் முதலைக்குடா முக்கியமானது. மண்முனை வாவியைக் கடந்து வரும்போது முதலாவதாக வரும் குடா (முதல் குடா)

என்பதால் முதலைக்குடா எனப் பெயராகியது என்றும் முதலைகள் அதிகமாக இருந்த இடம் முதலைக்குடா என்றாகியது என்றும் இவ்விடப் பெயர் தொடர்பாக கூறப்படுகின்றது. மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் அபிவிருத்தியடைந்துவரும் முக்கிய கிராமமாகவும் பிரதேசத்தில் அமைந்த ஒரே ஒரு " இசுறு " பாடசாலை அமைந்த கிராமமாகவும் இது அமைகின்றது.

### ஆ). மகிழடித்தீவு, அரசடித்தீவு

மகிழைமரம் நின்றமையால் மகிழடித்தீவு என்றும் அரசமரம் நின்றமையில் அரசடித்தீவு என்றும் பெயர் வரலாயிற்று. மண்முனை வாவியைக் கடக்க முதல்வருவது மகிழடித்தீவாகும். இங்கே புகழ்மிக்க கண்ணகை அம்மன் ஆலயம் உள்ளது. இவ்வாலயம
பற்றிய விடயங்கள் ஆய்வுக்குட்படுத்த வேண்டியவையாகும். அரசடித்தீவு ஓர் சிறிய கிராமமாகும். இங்கே அரசமடுவார் வளவு என அழைக்கப்படும் இடமுள்ளது. அரசடித்தீவில் குடியேற்றங்கள் இவ்விடப்பகுதியிலிருந்தே ஏற்பட்டமைக்கு சான்றுகள் உள்ளன. அரசடித்தீவில் அடங்கும் வெட்டுக்காடு, வாய்க்கால் கட்டு என்பவை பிற்பட்ட குடியேற்றங்களாகவே கருத இடமுள்ளது. இங்கே சிறப்புமிக்க காளியம்மன் ஆலயம் உள்ளது.

### (இ). மாவடிமுன்மாரி, பனிச்சையடிமுன்மாரி

1939ம் ஆண்டு கிராம தலைமைக்காரர் முறை கொண்டு வரப்பட்டபோது மண்முனை தென்மேற்குப் பிரசேத்தில் ஏழு கிராம பரிபாலன பிரிவுகளே இருந்தன. அவற்றுள் மாவடிமுன்மாரியும் ஒன்றாகும். மாமரத்தை காரணமாக வைத்து முன்மாரி செய்கை பண்ணப்படும் மேட்டு நிலமென்பதால் இப் பெயர் பெறலாயிற்று. பனிச்சை மரத்தைக் காரணமாக வைத்து பனிச்சையடிமுன்மாரி எனும் பெயர் தோன்றிற்று.

### (ஈ). தளவாய்க்கிணற்றடி, நெடியமடு, கற்சேனை

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் பல தளவாய் பற்றைகளும், திறந்தவெளி நிலங்களும் சிறுகற்கள் நிறைந்த செம்மணல் பகுதிகளும், மடுக்களும் உள்ளன. இவை காரணமாக உருவாகிய இடப்பெயர்கள் இப் பிரதேசத்தின் புவியியல், இயற்கை அமைவினை தெளிவாக விளம்புகின்றன. விடுதிக் கல்லுக்கு முன்னுள்ள பகுதி தளவாய்க் கிணற்றடி எனவும் தளவாய் எனவும் அழைக்கப்படுவதுண்டு. நெடியமடு, நீலண்டமடு, சின்னமடு ( அம்பிளாந்துறையில் உள்ளது ) கெவிளியாமடு போன்ற இடங்களும் கற்சான் போடும் சேனையாக இருந்த மேட்டு நிலம் கற்சேனை என்றும் பல இடங்கள் இயற்கைச் சூழலோடு இசையுடையதாக உருவாகியுள்ளன.

### (உ). நீறுபோட்டசேனை

நீறு போடப்பட்டமையால் நீறுபோட்ட சேனையாகியதென நீண்ட காலமாக வழங்கிவரும் வாய்மொழிக்கதை கூறுகின்றது. குறிப்பாக முதலாம் உலக மகாயுத்தம் இடம்பெற்ற போது அமெரிக்கப் படையினர் தமது படைகள் இருந்த இடங்களை ஏனைய தமது படையினருக்கு அடையாளப்படுத்திக் காட்டும் வகையில் விமானத்திலிருந்து நீறு போட்டனர் என்றும் அதனாலேயே இப்பெயர் பெற்றது என்றும் கூறப்படுகின்றது.

(ஊ). கொறுக்காப்புளியூற்று

ஒறுக்காப்புளியூற்றே மருவி கொறுக்காப்புளியூற்றாக ஆயிற்று. ஒறுக்கா என்பதற்கு குறையாது வற்றாது எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. வெட்டும் பொருட்டும் வேறு தேவைகளின் பொருட்டும் காடுகளுக்கு செல்வோர் இவ்விடத்தில் தங்கி எக்காலத்திலும் நீர் அருந்திச் செல்லலாம் என்பதனாலும் இப் பெயரை இட்டதாக அறியமுடிகின்றது.

(எ). குளுவினமடு

கொல்லநுலை, நீறு போட்டசேனை என்னும் இடங்களை உள்ளடக்கிய பகுதி குளுவினமடு பிரிவில் அடங்கும். கோயிலுக்குப் பின்னால் இருந்த பெரியமடுவில் குளுமாடுகள் வந்து படுத்திருப்பதாகவும் அக்குளுமாட்டை அடக்கி, பிடித்தெடுப்பது வழக்கமாக இருந்தமையாலும் இப்பெயர் பெற்றதென வாய்மொழிக்கதை கூறுகின்றது. கொல்லன் பெரிய சாலை ( கம்மாளை ) வைத்திருந்த இடம் கொல்லநுலை எனப்பட்டது.

(ஏ). பட்டிப்பளை

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள மிகச்சிறிய கிராமமாக இது உள்ளது. பட்டிமாடு கட்டிய இடம் பட்டிப்பளையாயிற்று. இங்குள்ள மக்களின் தொழில்களுள் மந்தை வளர்ப்பும் முக்கியமானதாகும். மாடுகள் தொகையாக நிற்பதை " பட்டி " எனக் கூறும் வழக்கம் உள்ளது. இவ்விடப் பெயர் பிரதேச மந்தை வளர்ப்புத் தொழிலினையே நினைவு படுத்துகிறது.வன்னிமையுடன் இவ்வூரும் தொடர்பு பட்டதெனக் கூறப்படுகின்றது.

(ஐ). கச்சிரவாடி, ஆதண்டகுடா

கச்சிரவாடி, ஆதண்டகுடா என்னும் இடப்பெயர்கள் இப்பிரதேசத்தோடு தொடர்புபட்டு இப்பிரதேசத்தில் தங்கியிருந்து தொழில் செய்த முஸ்லிம் இனத்தவரையே நினைவூட்டுகின்றது. சுருங்கக் கூறின் தொழில் நிலை காரணமாக முஸ்லிம்களுக்கு மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் காணிகள் இருந்துள்ளன. இப்போதும் இருக்கின்றன. ஆனால் இப்பிரதேசத்தில் ஒரு முஸ்லிம் குடும்பம் கூட இல்லை. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்துடனும் முஸ்லிம் சமூகத்தினர் தொடர்புபட்டிருந்துள்ளனர். இவர்கள் தான்தோன்றீச்சர கொடியேற்றத்திற்கு பட்டாணிமடை கொடுப்பதை நீண்ட காலமாகச் செய்து வந்துள்ளனர். அதே வேளை தான்தோன்றீச்சர ஆலய நிருவாகத்தினரும் காத்தான்குடி பள்ளிவாசலுடன் தொடர்புபட்டு இருந்துள்ளனர்.

(ஒ). படையாண்டவெளி, படையாண்டகுளம்

மண்முனை வாவியை அண்டியதாக பிறை வடிவில் படையாண்டவெளி அமைந்துள்ளது. இக்கிராமமும் பண்டாரியாவெளியும் ஏனைய கிராமங்களிடமிருந்து சற்றுத் தொடர்பற்றுக் காணப்படுகின்றது. சுருங்கக் கூறுவதாயின் அவற்றின் பெயரிலுள்ளது போன்று பெருவெளியிலேயே உள்ளன. இக்கிராமங்களும் பழமையானவை. படையாண்டவெளிக்குப் பக்கத்தில் படையாண்ட குளம் உள்ளது. படையாண்டவெளிக் கண்டம் என்றொரு விவசாயக் கண்டமும் தற்போது உள்ளது. இவ்விடப் பெயர்கள் படையாட்சிகளின் குடியேற்றத்தையும் அவர்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தையுமே காட்டுகின்றன.

## தொகுப்பு

மட்டக்களப்பு வரலாறு தொடர்பான நூல்கள், பிரதேச ஆய்வுமுன்மொழிவுகள் வாய்மொழிக் கதைகள் ஆகியவற்றின் மூலம் இதுவரை கூறியவற்றினூடாக மண்முனை தென் மேற்குப் பிரதேச இடப்பெயர்கள் பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தி நிற்கின்றன. இக் கருத்துக்கள் மேலும் ஆராயப்பட வேண்டியவை என்பதோடு பிரதேச ஆய்வு சீர்செய்யப்பட வேண்டியதென்பதும் அவசியமானதாகும்.


1. பல மன்னர்கள், ஆட்சியாளர்களின் காலங்களில் படுவான்கரைப் பிரதேசம் சிறப்புப் பெற்று விளங்கியுள்ளது.
2. வீரசைவ வழிபாடு, நாகவழிபாடு, முருக வழிபாடு, அம்மன் வழிபாடு என்பவை நீண்டகாலமாக இருந்துள்ளன.
3. நாகர் எனும் ஆதிக்குடிகள் வாழ்ந்துள்ளதோடு வன்னிமை ஆட்சியும் இடம்பெற்றுள்ளது.
4. இராசாக்கள் தங்குமிடங்களாக சில இடங்கள் இருந்துள்ளதோடு மன்னர்களுக்கு திறை செலுத்தும் நிலங்களும் இருந்துள்ளன.
5. முஸ்லிம் சமூகத்தினரும் தொழிலின் பொருட்டு இப்பிரதேசத்துடன் பொருந்தியிருந்துள்ளனர். வழிபாட்டு முறையிலும் உறவு இருந்துள்ளது.
6. இடப்பெயர்கள், இடத்தின் இயற்கையமைவிடம், பொருந்தி வாழ்வோர், அவர்களின் குலத்தன்மை வழிபாட்டுத் தொடர்புகளால் ஏற்பட்டுள்ளன.

## உசாத்துணை நூல்கள்


1. நடராசா கு - F.X.C, 1998 மட்டக்களப்பு மான்மியம்.
2. கந்தையா வி.சி, 2002, மட்டக்களப்புத் தமிழகம்.
3. மகேஸ்வரலிங்கம்.க, 2008, மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்.
4. கமலநாதன் வித்துவான். சா.இ, 2005, மட்டக்களப்பு பூர்வசரித்திரம்.
5. கவிக்கோ வெல்லவூர்க்கோபால், 2011, மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம்.
6. தங்கேஸ்வரி. க. 2003 மண்முனை மேற்குப் பிரதேசம் ஓர் வரலாற்று நோக்கு ( கட்டுரை ), அகணி.
7. கவிக்கோ. வெல்லவூர்க்கோபால், 2008 மறக்கப்பட்ட வவுனதீவின் வரலாற்றுச் சிறப்புக்கள் ( கட்டுரை ), அகணி
8. தாந்தாமலை மலைமாட்சி - 2011.


## வாய்மொழித் தகவல்கள் தந்தோர்

1. பா. இன்பராசா ( நிருபர் ) முனைக்காடு
2. முருகு தயாநிதி ( ஆய்வாளர் ) அம்பிளாந்துறை
3. த. தியாகராசா, அதிபர், மகிழடித்தீவு.
4. எஸ். சற்குணம், அரசடித்தீவு.
5. திரு. குமாரவேலி, முனைக்காடு
6. திரு. சிவகுருநாதன், முதலைக்குடா



# சும்மாதான் நானிருக்கன்



இஸ்டப்படி நானும்
கலைப்பிரிவிற் சேர்ந்து
சட்டப்படிப்புக்கு
பல்கலையில் நுழைந்து
பல கஸ்டம்பட்டு
பாதியிலே படிப்பை விட்டு
மீதியைத் தொடரும்
அழைப்பிற்காய்
வீட்டிற் காத்திருக்கும்
இருபத்துநான்கு வயது
இளவல் நான்..........

அதிகாலைப் பொழுதினிலே
அப்பாவின் சுப்ரபாதம்
மப்படித்தாற்போல்
மங்கி மங்கிக் கேட்கிறது.
பாவைக்குப் பாத்தி கட்டு,
பயத்தைக்குத் தண்ணிவிடு,
கத்தரிக்கு மருந்தடிச்சேன்
மறந்தும் தண்ணி காட்டாத
வெண்டிக்கா வெட்டவேணும்
கண்டபடி
வெட்டாத...........

அடுக்கிக் கொண்டேபோன
அப்பாவின் வேலைகளை
அலுக்காமல் செய்து
ஒய்கையில்
மணி ஒன்பது

தண்ணிச் சோத்தை
தயிருடன் நான்
தின்கையிலே
முன்னிருந்து அம்மா
" சின்ன மகேன் " எனும்
பீடிகையுடன் ஆரம்பித்தாள்.
துறையடிக்குப் போய்ப்பாத்து
சள்ளல் ஒரு கோர்வை
வாங்கி வாவனை
துள்ளியெழுந்து நானும்
துறையடிக்குச் செல்கையிலே
யாவாரி வந்து
யாவற்றையும் கொண்டு போன
சேதி கேட்டு
மீண்டும் வீடு வந்தேன்.

" மச்சக்கறி இல்லாட்டி
ஒத்தருக்கும் சோறு இறங்கா
தீர்வையடியை ஒருக்கால்
பார்வையிட்டு வா அப்பன் "
அன்பாய் அன்னை
சொல்லக் கேட்டு அங்கு சென்று
இரு கோர்வை மீன் வாங்கிக்
கொடுத்துவிட்டு
கொஞ்ச நேரம் இருக்கலாமென
நெஞ்சு நினைத்திருக்க..........

அடுத்த வீட்டு லட்சுமியக்கா
அழகாயென்னைக் கூப்பிட்டாள்
" தம்பி இஞ்சயொருக்கா
வாடா செல்லம் ....."
வார்த்தையில் மயங்கி நானும்
வேலியாற் கடவைப்படுகையில்
" வேலைக்கிண்டு போகல்ல
வருத்தமெண்டொரு தந்தி

**சௌந். லெ. லொறன்ஸோ**
பிரதேச செயலகம், ம.தெ.மே

கொடுத்துவிட்டு வாவென
விருத்தம் பாடி நின்றாள்.....
விரும்பா விட்டாலும்
மறுக்காமற் தந்திட்டேன்.

அப்பாடி.....
இப்ப என்ன செய்யலாம்.....
வாசிய சாலைக்கொருக்கால்
போய்வருவோம் என்று நானும்
நுழைந்தவுடன் நூலகர்
" இன்றைய தினசரி
இன்னும் வரவில்லை
எடுத்து வந்து தாமனே..."
என மொழிய
பிரதேச சபைநோக்கி
ஓட்டமெடுக்கிறது என்
ஓட்டைச் சைக்கிள்

ஓய்வு நேரம் என்று நானும்
எண்ணியிருக்கையில்...
" இன்றுதான் குளோசிங் டேட்
இதையொருக்கால்
நிரப்பித்தாங்க"
என்றபடி எதிர்வீட்டு
ஏஞ்சல் அசடு வழிய
எதிரே நின்றாள்.

கறுவிய படியே நானும்
காகிதத்தை நிரப்பி - அவள்
கைகளிற் கொடுத்து விட்டு
உண்ண இருக்கையில்
இன்னுமொரு வேலை.........
அடுத்த தரம் அம்மாவின்
கெஞ்சலான வேண்டுதல்
" கண்டுமணி மாமியிடம்.
கடனாயொரு ஆயிரம் ரூபா
கேட்டுத்து வா, லோன் காசு
கட்ட வேணும் தம்பி ....."

பகலுணவு முடிய
கடன் கேட்கச் சென்றேன்
மீண்டும் வீட்டிற்கு வரும் போது
தாண்டியது நான்கைச் சிறுமுள்

வேலை விட்டு வந்த அண்ணர்
வெளியால போகையில
" எங்க போறா "யென நான் கேட்க
" உன்ன மாதிரி சும்மாவா நானிருக்கன் "
பறந்து வந்த பதிலில்
மறந்து போனேன் என் நிலையை

மீளவும் ஓய்வென நானிருக்க
ஆளுக்கொரு வேலை சொல்லக்
காத்திருந்தனர் எனை எதிர்பார்த்து

" கத்தரிக்கடிக்கும் கறுத்தப் போத்தல்
மருந்துக் குப்பியொன்று வாங்க வேணும் அப்பா
" சிறாம்பிக்கால் சரிஞ்சிற்று
கொஞ்சம் போல நேராக்கு மகன் " அம்மா
" ஒப்படை ஒண்டுக்கு ஒரு
கையெழுத்துச் சஞ்சிகை
எழுதிக் கட்டித்
தா அம்மாச்சி - என்னாசை மருமகள் ....

ஆளுக்கொரு வேலை
சொல்லக் காத்திருந்தனர்
எனை எதிர்பார்த்து
மொத்தத்தில் நானொரு
மெத்தப்படித்த வேலையில்லாதவன்.......



# படுவான்கரை மண்ணை வீட்டு மருவிச் செல்லும் நாட்டார் பாடல்கள்

நாட்டார் பாடல்கள் என்பவை ஒரு பிரதேசத்தினது அல்லது ஓர் கிராமத்தினது மண்வாசனையை படம் பிடித்துக் காட்டுகின்ற இலக்கியங்களாக காணப்படுகின்றன. மண் வாசனை எனும் போது குறித்த பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களது உணவு, உடை, உறையுள், கலை, கலாசாரம், பண்பாடு, தொழில், சமயம் என்பனவற்றினை கொண்டமைந்ததாகும். நாட்டார் பாடல்கள் நாகரீகம் வளராத எளிய மக்களால் கையாளப்படுகின்ற ஓர் கலையம்சமாகும். இந் நாட்டார் பாடல்கள் பல சிறப்பு பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றன. கிராமிய இசை, நாட்டுப்புற பாடல்கள், நாடோடிப் பாடல்கள், நாட்டுப்பாடல்கள், பாமரர்பாடல்கள், பாமரகானம், பரம்பரைப்பாடல், பொதுஇசை, செவிவழிப்பாடல்கள், கல்லாதார் பாடல்கள், மக்கள் பாடல்கள், ஊர்ப்பாடல்கள், ஏட்டில் எழுதாக்கவிதைகள், காற்றில் மிதந்த கவிதைகள், மலையருவி, காட்டுப்பூக்கள், வனமலர் என்றெல்லாம் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

இத்தகு சிறப்பு வாய்ந்த நாட்டார் பாடல்கள் பட்டிப்பளை பிரதேசத்தில் படுவான்கரை மண்ணில் செறிந்து காணப்பட்டன. இம் மண்ணிலே வாழ்ந்த எமது முன்னோர்கள், மூதாதையர்கள் எழுத்தறிவு கல்வி என்பவற்றில் விருத்தி குன்றியவர்களாகவே காணப்பட்டனர். இருந்த போதிலும் இம்மண்ணின் மைந்தர்களுக்கு கேள்வி ஞானம், மனனம் செய்கின்ற மனப்பக்குவம் என்பன அதிகளவிலேயே காணப்பட்டன. தமது வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகவும் பொழுது போக்கிற்காகவும், வயல் வேலைகளை முடித்து விட்டு களைப்பினை ஆற்றிக் கொள்வதற்காகவும் நாட்டார் கலைகளையும், நாட்டார் பாடல்களையும் உருவாக்கிக் கொண்டனர்.

இப்பாடல்கள் இம்மக்களின் நடைமுறை வாழ்க்கையினை பிரதிபலிப்பனவாகும். மண் வாசனைகள் நிரம்பியனவாகவும், நாட்டார் பாடல்களுக்குரிய உணர்ச்சி, ஓசை, இன்பம், தாளக்கட்டு, சொல் அழகு என்பவற்றை தன்னகத்தே கொண்டு காணப்பட்டாலும் இவர்கள் இவற்றினை ஏடுகளில் எழுதிப்படித்ததே இல்லை. எல்லாமே கேள்வி ஞானங் களாகவே காணப்பட்டன. உதாரணமாக இவர்கள் தமது பாரம்பரியக் கலையை வளர்ப்பதற்கும் பொழுது போக்கினை மேம்படுத்துவற்காகவும் கூத்தாடுவார்கள். கூத்தாடுகின்ற குழுவில் உள்ள எல்லோருமே எழுதப் படிக்க தெரிந்தவர்களாக இருக்க மாட்டார்கள். பெரும்பாலும் ஏட்டண்ணாவியார் ஒருவரே வாசிக்கும் திறன் கொண்டவராக காணப்படுவார். அவர் பாடல்களை சொல்லிக் கொடுக்க கூத்துக்கலைஞர்கள் அவற்றினை மனனம் செய்து முழுக்கூத்து என்று சொல்லப்படுகின்ற விடியும்வரை ஆடப்படும் கூத்துக்களைப் பாடியும், ஆடியும் உள்ளனர். சாதாரணமாக ஒரு கலைஞருக்கு ஐம்பது அறுபது பாடல்கள் கொடுக்கப்படும். பாத்திரங்களுக்கு அதற்கு மேற்பட்ட தொகையான பாடல்கள் கொடுக்கப்படும். இவற்றினை மனனம் செய்து பாடும் ஞானசக்திமிக்க வித்தகர்களாக படுவான் மண் தமிழர்கள் காணப்பட்டனர்.

**வ. வினோதன்**
முனைக்காடு

இம்மக்களிடையே பல நாட்டார் பாடல்கள் பயில் நிலையில் காணப்பட்டன. விளையாட்டு பாடல்கள், தொழிற்பாடல்கள், நையாண்டிப் பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், கொம்புமுறி பாடல்கள், பொலிப்பாடல்கள், வசந்தன் பாடல்கள், கூத்துப் பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள், மீனவர் பாடல்கள், பள்ளு பாடல்கள், வேளாண்மை வெட்டும் போது பாடும் பாடல்கள், வயல் உழுதும் போது பாடுகின்ற பாடல்கள் என பலதரப்பட்ட கிராமியப்பாடல்கள் இம்மண்ணுக்குச் சொந்தமான பொக்கிசங்களாகக் காணப்படுகின்றன.

## விளையாட்டுப் பாடல்கள் :

இம்மக்களிடையே பல கிராமிய விளையாட்டுக்கள் உள்ளன. ஒத்துக்கம்பு (கிட்டிப்புல்), கண்ணாண்டே கடையாண்டே, கொத்து விளையாட்டு, வார்போர், தட்டுக்கோடு, நொண்டி விளையாட்டு என பலவிளையாட்டுக்கள் இம்மண்ணிலே தோன்றி விருட்சமாகின. இவ்விளையாட்டுக்கள் சிலவற்றில் விளையாடும் போது பாடல்கள் பாடி விளையாடுகின்ற வழக்கம் உண்டு. அந்த வகையிலே கிட்டிப்புல் விளையாட்டினை எடுத்துக் கொண்டால் இவ்விளையாட்டின் போது வெவ்வேறுபட்ட பல பாடல்கள் பாடுவர். இப்பாடல் பாடும் போது மூச்சுவிடாமல் ஓடிக் கொண்டே பாடுவது வழக்கமாகும்.

*ஆலையிலே சோலையிலே*
*ஆலம்பாடிச் சந்தையிலே*
*கிட்டிபுல்லும் பம்பரமும்*
*கிறுக்கியடிக்க பாலாறு பாலாறு...........*



*குச்சிப் பெட்டி நெருப்பெட்டி*
*குச்சிப்பெட்டி நெருப்பெட்டி*
*குச்சிப் பெட்டி நெருப்பெட்டி.................*

என கிட்டிப்புல் விளையாட்டின் போது பாடுகின்ற வழக்கம் உண்டு, மேலும் " கண்ணாண்டே " விளையாட்டின் போது

" கண்ணாண்டே கடையாண்டே கடைக்குவைத்த மாம்பழத்தை கையோடே காலோடே கொண்டு வரயோ "என பாடல்கள் வடிவில் கேட்கின்ற மரபு இம்மக்களின் கிராமிய விளையாட்டுக்களில் காணப்படுகின்றது.

மேலும் கொத்து விளையாட்டின் போது கேள்வி பதில் கலந்தவையாக பாடல்கள் பாடப்படும்.

*"கொத்திருக்கு கொத்து*
*என்ன கொத்து*
*மாங்கொத்து*
*போட்டுத்துதுப் போ .....*
*போட்டுத்துயோ போட்டுத்துயோ............"*

பூக்குட்டி விளையாட்டு என்று சொல்கின்ற கண் பொத்தி விளையாடுகின்ற விளையாட்டின் போது பாடப்படும் பாடல் பின்வருமாறு

*" பூக்குட்டி வந்து குட்டிக் குட்டிப்போ...*
*பூக்குட்டி வந்து குட்டிக் குட்டிப் போ....*
*அண்ணா வாறான் தன்னாசி*
*ஆறெண்டு கண்டுபிடி*
*மாம்பழம் வந்து குட்டிக் குட்டிப் போ*
*மாம்பழம் வந்து குட்டிக் குட்டிப்போ*



போன்ற விளையாட்டுப் பாடல்கள் இம்மக்களிடையே காணப்படுகின்றன.

பொதுவாக இவை பட்டிப்பளைப் பிரதேசத்தில் உள்ள அனைத்து ஊர்களிலும் காணப்படுகின்றன. இருந்த போதும் இடத்துக்கு இடம் விளையாட்டின் பெயர்களும் பாடல்களில் சில வரிகள் வேறுபட்டும் காணப்படுகின்றன. மேலே காட்டப்பட்ட பாடல்கள் முனைக்காடு கிராமத்திலும் அதனை அண்டிய ஊர்களிலும் காணப்படுபவையாகும்.

## கொம்புமுறிப் பாடல்கள் :

இப்பாடல்கள் கண்ணகியம்மன் குளிர்த்தில் சடங்குடன் தொடர்புபட்டதாகும். கொம்புமுறி எனும் சடங்குசார் விளையாட்டின் போது இப்பாடல்கள் பாடப்படும். வடமோடி, தென்மோடி எனும் இரு குழுவினருக்கிடையே ஏற்படுகின்ற போட்டியின் போது பாடுவர்.

*கோலப் பணிச்சேலை கொய்துடுத்து*
*கொம்பு விளையாட்டுப் போகையிலே*
*வேலப்பர் வந்து மடி பிடித்து*
*மெத்தவும் சிக்கிக் கொண்டார் தோழி*

*வட சேரியான் கொம்பு எங்கே எங்கே*
*வண்ணாண்ட சாடிக்கு உள்ளே உள்ளே*
*தென் சேரியான் கொம்பு எங்கே எங்கே*
*சித்திரத் தேருக்கு மேலே மேலே.............* என பாடுவர்.

## தாலாட்டுப்பாடல்கள் :

இம் மண்வாழ் தாய்மார்கள் தமது குழந்தைகளை தொட்டிலிலோ அல்லது தமது நீட்டிய கால்களிலோ வளர்த்தி அவர்களை உறங்க வைப்பதற்காக தாலாட்டுப் பாடல்களை பாடுவர். அந்த வகையிலே தமிழர்களிடத்தில் காணப்படுகின்ற பொதுவான தாலாட்டுப்பாடலே இங்கு காணப்படும். சங்கீத ஞானமே இல்லாத இக்கிராமத்து தாய்மார்களின் குரல் கேட்பவர்களை உறங்க வைக்கும் வல்லமை கொண்டது.

*" ஆராரோ ஆரிரரரோ*
*ஆரடித்து நீயழுதாய்*
*கண் மணியே சொல்லியழு*
*அண்ணன் அடித்தானோ*
*அணைத் தெடுக்கும் கையாலே*
*மாமன் அடித்தானோ*
*மருந்தூட்டும் கையாலே................"*



என பொதுவான தாலாட்டுப்பாடலே இம்மண்ணிலும் பயில் நிலையில் காணப்படுகின்றது. இருந்த போதிலும் குழந்தைகளை உறங்க வைப்பதற்கும், உணவு ஊட்டுவதற்கும் சில தனித்துவமான பாடல்களை இம்மண் கொண்டுள்ளது. அந்த வகையிலே குழந்தைகளுக்கு உணவூட்டும் போது

*" ஆண்டாரே ஆண்டாரே எங்கபோறா*
*கம்பெடுக்க*
*கம்பென்னத்துக்கு*
*மாடு மேய்க்க*
*மாடென்னத்துக்கு*
*சாணி போட*
*சாணி என்னத்துக்கு*
*வீடு மொழுக..............."*

கதை சார்ந்த கேள்வி பதில் கொண்ட பாடலாக இது பாடப்படும். இப்பாடலைப் பாடி குழந்தைகளுக்கு உணவு ஊட்டி தூங்க வைப்பர். இப்பாடல் இம்மண்ணுக்குரிய சிறப்பம்சமான பாடலாகும்.

## ஊஞ்சல் பாடல்கள் :

வீட்டு முற்றத்திலோ அல்லது ஊரில் உள்ள பெரிய மரங்களிலோ ஊஞ்சல் கட்டி ஆடுகின்ற மரபு இம்மக்களிடையே உண்டு குறிப்பாக சித்திரைப் புத்தாண்டன்று இப்பிரதேசத்து மக்கள் வீடுகளில் அல்லது ஊர் பொது இடங்களில் ஊஞ்சல் கட்டி பாடல்கள்பாடி ஆடி மகிழ்வர். இதன்போது அந்த வகையில்

*" தெத்தாத ஊஞ்சில் தெத்தாத*<br>
*தெத்தும் பலகாரம் சுட்டுத்தாறன்*<br>
*நேரே போ ஊஞ்சில் நேரேபோ*<br>
*நேற்றடிச்ச காற்றோட............. "*

ஊஞ்சல் ஆடிக் கொண்டிருக்கும் போது ஊஞ்சல் தனது ஓட்டப்பாதையை விட்டு விலகி கோணல் மாணலாக செல்லும் போது இப்பாடலைப் பாடுவர். பாடுகின்ற போது ஊஞ்சல் சீரான ஓட்டப்பாதையில் செல்லும் என்பது நம்பிக்கை.

*" கொக்குப்பறக்குது கொக்குப்பறக்குது*<br>
*கோவிந்தன் வாசலிலே*<br>
*எட்டுச் சலங்கையும் கட்டிப்பறக்குது*<br>
*எங்கட வாசலிலே "*



*வேப்பமரத்தில் ஊஞ்சிலப்போட்டு*<br>
*வேப்பண்ணனும் பொஞ்சாதியும் ஏறியாட*<br>
*முருங்க மரத்தில ஊஞ்சிலப் போட்டு*<br>
*முருங்கண்ணனும் பொஞ்சாதியும் ஏறியாட*<br>
*புளியமரத்தில ஊஞ்சிலப் போட்டு*<br>
*புளியண்ணனும் பொஞ்சாதியும் ஏறியாட ........... "*

போன்ற பாடல்கள் இம்மக்களிடையே காணப்படுகின்ற ஊஞ்சல் பாடல்களாகும். குறிப்பாக பட்டிப்பளை பிரதேசத்தின் கீழ் உள்ள அனைத்து ஊர்களிலும் இப்பாடல்கள் பொதுவாக பாடப்பட்டு வருகின்றன.

## ஒப்பாரிப் பாடல்கள் :

இம்மக்களிடையே காணப்படுகின்ற மிக முக்கியமான அம்சம் ஒப்பாரிப் பாடல்களாகும். மரண வீடுகளில் அழுகின்ற போது இறந்தவர்களின் வாழ்க்கை, வரலாறு, சிறப்பம்சங்களைக் கொண்டு ஒப்பாரி வைத்தல் வழக்கமான முறையாகும். ஒப்பாரி என்பது சக்கரவியூகமாக வளைந்திருந்து அழுவதைக் குறிக்கும். ஓர் பாடலைக் கேட்பது போன்று அழகியல் தன்மையை கொண்டமைந்தாக ஒப்பாரிப் பாடல்கள் காணப்படும். மரண வீட்டிற்கு வருகின்றவர்களை கட்டியணைத்து ஒப்பாரிகள் மேற்கொள்வர். இவர்கள் பாடுகின்ற போது அவ்விடத்தே என்னென்ன வார்த்தைப் பிரயோகங்கள் கிடைக்கின்றனவோ அவற்றினை வைத்து கொண்டு வாய்க்கு வருபவற்றை அழுது பாடுவார்.

*" என்னப் பெத்தராசாவே*<br>
*என்னவிட்டுப் போனியே........... யே............யே "*

எனப் பாடி சிணுங்கல் போன்று இழுப்பர். இச் சிணுங்கல்களும் கேட்பதற்கு இசை போன்று காணப்படும்.

## நையாண்டிப் பாடல்கள் :

*" ஏண்டிக்குட்டி என்னடிகுட்டி என்னடி செய்தா*
*நீ என்னடி செய்தா*
*அம்மியடியில கும்மியடிச்ச நான் சும்மாவா இருந்தேன்*
*நான் சும்மாவா இருந்தன்*

*ஏன்டிக்குட்டி என்னடி குட்டி என்னடி செய்தா*
*நீ என்னடி செய்தா*
*பாம்புக் குஞ்சிக்குப் பல்லு விளக்கினன் சும்மாவா இருந்தேன்*
*நான் சும்மாவா இருந்தன்...."*

நையாண்டிப் பாடல்கள் வரிசையில் பொதுவாக இப்பாடலே மட்டக்களப்பு மண்ணிற்கே சிறப்பு வாய்ந்ததாக காணப்படுகின்றது. இந் நையாண்டிப் பாடல்கள் கேலி, கிண்டல், பாலியல் சார்ந்த சொற்பிரயோகங்களை கொண்டமைந்தனவாகவும் நகைச்சுவைகள் நிரம்பியனவாகவும் காணப்படுகின்றன.

## தொழில் பாடல்கள் :

இம் மண்வாழ் மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். இவர்கள் விவசாயம் தொடங்கும் காலத்தில் இருந்து சூடு மிதிக்கும் காலம் வரைக்கும் ஒவ்வொரு நிகழ்விற்கும் பாடல்கள் பாடுவர். உழுதும் போது, வேளாண்மை வெட்டும் போது, உப்பட்டி கட்டும் போது, சூடு மிதிக்கும் போது என ஒவ்வொரு நிகழ்வுகளின் போதும் நாட்டார் பாடல்களை பாடுவர். அதே போன்று மீன் பிடிக்கச் சென்றவர்களிடத்திலும் சில நாட்டார் இலக்கியங்கள் காணப்பட்டாலும் அவை பொதுவாக மட்டக்களப்பு மண்ணிற்கே உரித்தானவையாக காணப்படுகின்றது. அந்த வகையிலே தொழில் பாடல்கள் வரிசையில் பொலி தூத்தும் போது பாடுகின்ற பாடல்

*" பொலி, பொலி, பொலி*
*தாயே பொலி தம்பிரானே பொலி*
*பூமி பொலி, பூமாதேவியம்மா பொலி*
*மண்ணின்களமே மாதாவே தாயே*
*வளர்பூமி நிறைகளமே பொன்னின் களமே*
*பொலி, பொலி, பொலி*

*போரேறப் பொலி வளர தாயே பொலி*
*புவியிலுள்ளோர் ஈடேற வேணுமம்மா*
*தாயே பொலி இரக்கமுள்ள மாதாவே*
*தாயே பொலி மனவிரக்கம் உள்ளவளே*
*முன்னங்கால் வெள்ளையடா தாயே*
*பொலி முக நிறைந்த சீதேவியார்............"*



இதே போன்று வசந்தன் பாடல்களிலும் தொழில் சார் பாடல்களைக் காணமுடிகின்றது. வேளாண்மை வெட்டுவசந்தன், உப்பட்டி கட்டு வசந்தன், சூடு வைத்தல் வசந்தன், சூடுபோடு வசந்தன் என இம்மக்களின் தொழில்களினை அடிப்படையாகக் கொண்டு வசந்தன் பாடல்கள் இம்மக்களிடையே காணப்படுகின்றது.

" வெட்டுவதில்லை இந்தக் கத்தி மொட்டை தானென் – பாரந்த
வேலையறிதா கொல்லன் தன்னிடம் போவோம்
எட்டுச் சல்லி கத்திக்கிரயம் வாங்கிடும் கொல்லன் – அவன்
எங்கெளிந்து போனான் என்று தேடுவோம் – வரீர்

(வேளாண்மை வெட்டு வசந்தன்)

கொண்டலாலே மழையும் வருகுது
கூடுங்கோ பள்ளர் உப்பட்டி கட்ட
தென்றல் வந்திடும் தெற்கு திசையில்
சென்ற காரிருள் மண்டி முழுங்குவது
கோடையாலே மழையும் வருகுது
கூடி வங்கோ பள்ளர் உப்பட்டி கட்ட
வாடையாலே மழையும் வருகுது
வாருங்கோ பள்ளர் உப்பட்டிகட்ட

(உப்பட்டி கட்டு வசந்தன்)

இவ்வாறாக பல நாட்டார் பாடல்கள் இப்படுவான்கரை மண்ணிலே ஒன்றன் பின் ஒன்றாக பெருவாரியாக தோற்றம் பெற்றன. எமது முன்னோர்கள் அதனைக் கட்டிக்காத்து தமது அடுத்தடுத்த சந்ததியினருக்கு வழங்கியிருந்தனர். இருந்த போதிலும் எமது முன்னோர்களால் கட்டிக் காப்பாற்றப்பட்ட நாட்டார் பாடல்கள் இம்மண்ணின் பொக்கிசங்களை எமது தற்கால சந்ததியினர் ஏற்கத் தவறி விட்டனர். இது இம் மண்ணில் வாழ்கின்ற தற்கால சந்ததியினர் விட்ட ஓர் வரலாற்றுப் பிழையாகும்.

சினிமா, தொழிநுட்பம், நாகரீக வளர்ச்சி, விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் என்பவற்றிக்கு தற்கால சந்ததியினர் அடிபணிந்துள்ளமையால் எமது பாரம்பரியத்தை இவர்களால் காப்பற்ற முடியாது போய்விட்டது. காலத்தின் போக்கிற்கு ஏற்ப மனிதன் மாற வேண்டும் தான் இருந்த போதிலும் தமிழர்களாகிய நாம் நம் பாரம்பரிய கலைகள், நாட்டார் இலக்கியங்கள், கலாச்சாரம் என்பவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும். இல்லா விட்டால் நாம் வாழ்ந்ததற்கே இனிவரும் காலங்களில் ஆதாரம் இல்லாமல் போய்விடும். எம்மோடு வளர்ந்த நாட்டார் பாடல்களை மறந்த நாளை நம் தாயை மறக்கமாட்டோம் என்பதில் என்ன நிச்சயம்.



# பட்டிப்பளைப் பிரதேசத்தில் விஷக்கடி வைத்தியம்

ஈழ மணித்திருநாட்டின் கிழக்கிழங்கையில் மீன்பாடும் தேனாடும், வற்றாத வாவிகளும் அமையப் பெற்றதுமான மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்மேற்கே அமையப் பெற்றதும் அக்காலத்தில் உலக நாச்சி ஆட்சி செய்த பிரதேசமும், கொக்கட்டி மரத்தின் கீழ் சுயமாக தோன்றி சுயம்பு லிங்கமாய் வீற்றிருக்கும் பதியின் மகிமை கொண்ட பிரதேசமும், செந் நெல் விளை பூமியும், காடும் காடு சார்ந்த இடமும், மலையும் மலை சார்ந்த இடமும் வருவோரை வாவென்று அழைத்து இனிமை பேசும் இனிமைக் குணம் கொண்ட மக்கள் குடி நிறைந்த இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசம் பட்டிப்பளைப் பிரதேசம் ஆகும்.

இப்பிரதேசத்தில் இன்று 24 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கும் ஒரு பிரதேச செயலாளர் பிரிவும் உள்ளது. இப்பிரதேச மக்களின் தொழில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டே காணப்படுகின்றது. இங்கு வாழ்கின்ற அனேகமான மக்கள் வேளாண்மைச் செய்கையை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.


இப்பிரதேசமானது மிகவும் பின்தங்கிய ஒரு பிரதேசமாகக் காணப்பட்டது. இதனால் இங்கு நவீன முறையிலான வைத்தியசாலையின் பயன்பாடு குறைவாகக் காணப்பட்டது. ஆனாலும் இப்பிரதேசத்தில் நாட்டு வைத்திய முறையே பெயர் பெற்று விளங்கியது. ஆனால் தற்காலத்தில் அதன் பயன்பாடு மறைந்து கொண்டு செல்கின்றது.

நாட்டு வைத்தியத்தில் சிறப்புப் பெற்ற வைத்தியமே விஷக்கடி வைத்தியம் ஆகும். விஷக்கடி எனும் போது விஷம் பொருந்திய உயிரினங்களால் மனிதர்கள் தாக்கப்படுதல். உதாரணமாக பாம்பினால், நட்டுவாக்காலி, எலி, விஷ வண்டுகள் என சிலவற்றை இங்கு கூறமுடியும்.

ஆனாலும் எமது பிரதேசம் காடுகளை அண்டிய ஒரு பிரதேசமாகக் காணப்பட்டதனால் இங்கு பாம்புக் கடியினுடைய தாக்கம் கூடுதலாகக் காணப்பட்டது. அவ்வாறு காணப்பட்டாலும் அதற்கான பல விஷக்கடி வைத்தியர்கள் இருந்து மக்களை காப்பாற்றினர்.


பாம்பினங்களின் பெயர்கள் பற்றி பின்வரும் பாடலூடாக அறியமுடியும்

**ஆருடந் தனையற்தற் தாசை கொண்ட**
**அகத்தியனே சித்தரில் நீ மதிகனப்பா**
**ஒருடந் சொல்லுகின்றேன் எனக் கெங்கோமான்**
**உரைத்ததிது மறைநந்தி யொருவனன்றிப்**
**பாருடாருளறிந்து உனக்குச் சொல்வேன்**
**பத்திரம் பாம்பினங்களிலே யனந்தன் தக்கன்**
**சீருருங் குளிகன் வாசுகிமா பதுமன்**
**சிறந்த சங்க பாலனை கார்க்கோடன்றனே**



**வ. துசாந்தன்**
முனைக்காடு வடக்கு

அது போல விஷப்பாம்புகள் எவை என்பதையும் கீழ்வரும் பாடலில் அறியமுடியும்.



தானென்ற பத்மனுடன் அட்ட நாகம்
சலவிரியனிரத்தவிரி யனவன் குட்டை
மானென்ற குறுவிரியன் பெருவிரியனோடு
மவர் தருகத் திருவிரியன் புல்விரியன் ஆறும்
வானென்ற தொம்பேறு மூக்கன்சாரை
வழுழை கரு வழுலை சாஹுக மூக்கன்
பானென்ற புடையனொடு காபா னோலைப்
பாம்புமயக் காமுறுக்கு மணியனுமே எனக் கூறப்படுகின்றது.


இதில் அருக்கன் நிற்கும் நிலையை பக்கமாக எண்ணிக் கணக்கிட வேண்டும் எனக் கூறுவர். இது ஒவ்வொரு நாளும் வெவ்வேறு திசைகளில் நிற்கும் என்பார்கள் வைத்தியர்கள். அருக்கன் நிற்கும் நிலையை,



காரி, சனி, பகல் அருக்கன் கிழக்காகும்
கங்கலுக்குக் கதிரோன் தெற்கு
சீறிய அருக்கன் நீரே தென்மேற்கு
செவ்வாய்க்கு மேற்கே நிற்கும்
பூரியதோர் புந்தி புதன் வடமேற்கே
புகழ்ந்து வரும் பொன்னவர்க்கு வடக்கே நிற்கும்
நாரிகேர் பொன் கடிகை எட்டுங் காட்டி
நயந்த வெள்ளி ஏக்கே வடகிழக்கு

எனும் பாடலின் மூலம் சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் அருக்கன் நிற்கும் நிலையை காணமுடியும்.

திசைக் குறிப்புடன் பாம்பின் சாதிகளை கண்டு பிடித்தலை



அருக்கன் நாகம் தேள் வழுலை
அலை நீர் பாம்பு மாநாகம்
எரிக்கும் எலியாம் மண்டெலியாம்
எழில்கொள் சாரை ஆடரவம்
பூரிக்கும் எறும்பு புடையன் என்னும்
புள்ளியெனும் பூரமொடு பொருந்த விரியன்
சிலந்தி பேணி அறிவீர் பெரியாரே!


எனும் பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பாம்பு கடிக்கு தூதன் குறி சொல்லுதல், தவணை போடுதல், விஷக்கல் கொடுத்தல், குழையடித்தல் எனும் முறைகள் பிரதானமானது, இதற்கு மந்திரம் இறை நம்பிக்கை பிரதான இடத்தை வகிக்கும்.

தூதன் குறி சொல்லுதல் என்பதை அவதானிக்கின்ற போது ஒருவருக்கு பாம்பு கடித்த பிற்பாடு வைத்தியரிடம் சென்று பாம்பு கடித்தவரின் பெயரைக் கூறி பூச்சி குத்திவிட்டது என்ற வாக்கியத்தை மட்டுமே கூறுவர். ( உ-ம் கமலுக்கு பூச்சி குத்தி விட்டது ) என்று கூறி அவர் அப்படியே நிற்பார். பின் வந்த தூதுவன் நிற்கும் நிலையையும் அவருடைய

செயற்பாட்டையும் வைத்துக் கொண்டு என்ன பாம்பு குத்தியது என்று வைத்தியர் கண்டு பிடிப்பார். இங்கு வைத்தியரிடம் தூது கொண்டு செல்பவர்கள் இது தொடர்பான அனுபவம் உடையவர்களே செல்வர் எனக் கூறுகின்றனர்.

தூதன் குறி பற்றி



**வாறாய் நின்ற தூதன் வந்து கைமடக்கு**
**ஓர் விரல் நீட்டு என்றான் நாகமாகி சிறுவிரலாம்**
**நாகமண்டலி ஆம் விரல் வேகமில்லை**
**நடுவிரலாம் விளங்கிப்பாரு பெரியோரே,**


என்று இப்பாடல் விளக்குகின்றது.

அது போல

**விலங்கா நித்திரை தான் கொள்ளின் விசபேர**
**தீட்டி என வந்தால் வலங்கீழாயின் விசமில்லை**
**மார்மேல் கிடக்கின் விசம் பெரிதாம்**
**கலங்கா திடங்கள் விசமில்லை**
**கவுண்டு கிடங்கள் காலனுமே**

என்ற பாடல்கள் விளக்குகின்றது. இது போல இன்னும் பல பாடல்கள் காணப்படுகின்றது.

தவணை போடுதல் பற்றி நோக்கும் போது பாம்பு தீண்டிய ஒருவரின் கடிவாயிற்கு (பாம்பு கடித்த இடத்திற்கு) மேல் நூலை அல்லது சுண்ணாம்பினால் நூல் கட்டுவது போன்ற கட்டி மந்திரங்கள் உச்சரித்து விஷத்தைப் போக்குவர் எனக் குறிப்பிடுகின்றனர். இதனூடாக விஷம் இறக்குவதற்கு



**ஓம் திருப்பரமேஸ்வரரும் திருப்பரமேஸ்வரியும்**
**திருவேட்டைக்கு எழுந்தருளினால் போல்**
**திருப்பரமேஸ்வரி தாலி களர திருப்பரமேஸ்வரி**
**எடுத்துப் பிடிக்க திருப்பரமேஸ்வரன் திருப்பூட்டு**
**பூட்டினார் நானும் அப்பூட்டு பூட்டினேன்**
**விஷம் நெட்டி, முட்டி, பட்டு போக சுவாகா**

இது போன்ற பல பாடல்களை பாடி விஷம் போக்குவர்.

விஷக்கல் கொடுத்தல் எனும் போது பாம்பு கடித்த ஒருவரின் கடிவாயை வெட்டி அதனை தேங்காய் பாலால் கழுவி அந்தக் கல்லை அதன் மேல் வைக்கும் போது அது விஷத்தை எடுக்கும் எனக் கூறப்படுகின்றது. இதன் போது பாம்பு தீண்டியவருக்கு வேதனை காட்டும் எனவும் எமது பிரதேசத்தில் காணப்படும் விஷக்கல்கள் குறவர்களிடம் இருந்து எடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இது உண்மையான விஷக்கல்லா எனப் பார்ப்பதற்கு கல்லை தேங்காய்ப்பாலில் இட்டு பார்க்கும் போது தேங்காய்ப்பால் கொதித்தால் இது உண்மையான கல் எனவும் கூறுகின்றனர். சிலர் வைத்திருக்கும் கல்லானது பண்டைய மக்களால் ஒரு கல்லை எடுத்து அதற்கு மந்திரம் செபித்து வைத்திருப்பதாக கூறுகின்றனர். அக்கற்களும் விஷத்தை போக்குகின்றது.


விஷக்கல்லை பாம்பு கடித்த இடத்தில் வைத்ததன் பிற்பாடு அதனை மீண்டும் எடுத்து பாலில் கழுவி வைப்பர். இக்கற்கள் இதை தவிர கெருடபட்சி கல் என்ற விஷக்கல்லும் காணப்படுகின்றது. விஷக்கல் வைத்து மந்திரப் பாடல்களை ஓதுவர் அவற்றுள்

**ஒரு விரல் கீரி இருவிரல் செண்பகம்**
**மூவிரல் பன்றி நால்விரல் மயில்**
**ஐவிரல் கௌவ்வு கௌவ்வு வாங்கு வாங்கு**
**இரத்த வைரவதானே இவர் விரலில் கட்டிய**
**விஷத்தை எல்லாம் இந்தா இருந்து**
**வாங்கப்பா வாங்கு**

என்று இதுபோல பல மந்திரங்களைப் பாடி விஷத்தை போக்குவார்.

குழையடித்தல் எனும் போது வேப்பம் கொத்தினை எடுத்து மந்திரம் சொல்லி பாம்பு தீண்டியவர் மேல் அடித்தல் குழையடித்தல். இதன் போது கூறப்படும் மந்திரங்களில் ஒன்றாக

**ஓம் குரு வாழ்க குருநாதன் வாழ்க எந்தன்**
**ஆசாரியான் வாழ்க எவ்வானை மறக்கிலும்**
**குருவானை மறவேன் குருந் தொட்ட செருப்பும்**
**பல்லிக் குடையும் பாலாடையும் அடியேன்**
**தலைமேல் கொண்டேன் இந்திர தேவர்களும்**
**சந்திர சூரியர்களும் தொட்டெடுத்து தந்த குழை**
**கொண்டு வீசுகிறேன் விஷகலை தெறிமுறி**
**அமீர்த கலை அமீர்தமாக இறங்கவே சுவாகா**



என்ற மந்திரத்தை கூறுவர். இவ்வாறான முறைகள் ஊடாக விஷத்தை போக்குவர். ஒருவருக்கு விஷம் நீங்கி விட்டதை என்பதை அவருக்கு ஏற்பட்ட கடுப்பு குறைதல், வயிற்றுக்குநோ குறைதல், சுய உணர்வு வரல், கண் பார்வை வழமைக்கு திரும்பல் என பலவகையான காரணங்களை இனங்கண்டு விஷம் நீங்கி விட்டது என்பதை அறிவதாக கூறுகின்றனர்.

விஷம் நீங்கிய ஒருவருக்கு தளிர்விழா வேர் எடுத்து தட்டி பாக்கு அளவுக்கு அரைத்து கொடுப்பதாகவும் எருமத்தயிர் கொடுப்பதாகவும் குறிப்பிடுகின்றனர்.

அது போல கீரை, தயிர் போன்ற பொருட்களை நாம் உண்ட பிற்பாடு பாம்பு கடிக்குமாயின் விஷம் ஏறும் விதம் மெதுவாக காணப்படும் எனவும் விஷக்கடி வைத்தியர்கள் கூறுகின்றனர். இது போல விஷக்கடிக்குரிய பல பொதுவான மந்திரங்களும் காணப்படுகின்றன. அவற்றுள்

**நாட குரங்கு பூனை பன்றி நரியுமுழுவை முதலையுடன்**
**ஏவும் வேங்கையிலை மெய்யில் இதமாகக் கடித்து விடங் கொண்டால்**
**ஆவின் பாலில் அவிரியின் வேர் அரைத்தே நாலு நாட்**
**கொடுக்கத் தாவின் கணவில் மெழுதது போற்றளர்ந்து**
**கழன்று புலந்திடுமே** என்ற பாடலை குறிப்பிடலாம்.

எமது பிரதேசத்தில் தற்போது விஷக்கடி வைத்தியத்தில் பலர் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் சிலர் பண்டாரியாவெளியைச் சேர்ந்த பெத்திப்போடி- சின்னத்தம்பி, அம்பிளாந்துரையைச் சேர்ந்த வல்லிபுரம், செல்லத்தம்பி ஆகியோரும

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த பாலிப்போடி -பேரின்பம் என்பவரும் முதலைக்குடாவைச் சேர்ந்த சிவலிங்கம், அவர் தற்போது விஷக்கடி தொடர்பாக தனது அப்பா சின்னத்தம்பியிடம் கற்றுக் கொண்டு செய்து கொண்டு வருகின்றார்.

அது போல முனைக்காட்டைச் சேர்ந்த கணபதியார் வெள்ளத்தம்பி , இவர் தற்போது இச் சேவையை சில காலமாக செய்யாமல் இருக்கின்றார்.


இவ்வாறாக பலர் இத்துறையில் ஈடுபட்டுள்ளனர். அதே போல இத்துறையில் கைதேர்ந்த பலர் இன்று மறைந்துள்ளனர். அவர்களின் சேவையும் மகத்தான சேவையாக காணப்படுகின்றது. அவர்களால் உவந்தளிக்கப்பட்ட ஆவணங்களே இன்றும் இச் சேவையை செய்வதற்கு காரணமாகும்.

அது போல அக்காலத்தில் பல விஷக்கடி வைத்தியர்கள் காணப்பட்டனர். இவர்கள் பணம் எடுப்பதில்லை. ஆனால் அவர்களிடையே ஒரு போட்டித் தன்மை காணப்பட்டது. ஒருவர் விஷத்தை இறக்க இன்னொருவர் விஷத்தை ஏற்றுவார். (மந்திரத்தின் ஊடாகவே) இதன் காரணமாக சிலர் இறந்தும் உள்ளதாக கூறுகின்றனர்.

பொதுவாக பட்டிப்பளைப் பிரதேசம் கூடுதலான காலம் நாட்டுவைத்திய முறையிலே தங்கியிருந்தது. இதனால் விஷக்கடிக்கான வைத்தியமும் அக்காலத்து விஷக்கடி வைத்தியர்களால் செய்யப்பட்டது. தற்காலத்திலும் பல விஷக்கடி வைத்தியர்கள் இருந்து அது மறைந்து விடாமல் உயிரூட்டிக் கொண்டிருக்கின்றனர்.

தகவல் தந்தோர், நூல் :

திரு. பா. பேரின்பம் ( கொக்கட்டிச்சோலை )
திரு. பெ. சின்னத்தம்பி ( பண்டாரியாவெளி )
திரு. சி. சிவலிங்கம் ( முதலைக்குடா )
திரு. ஆ. கந்தப்போடி ( முனைக்காடு )
திரு. கி. இரத்தினசிங்கம் ( முனைக்காடு )
நூல் : சத்தி ஆரூடம்



# மக்கள் வாழ்க்கையோடு இணைந்த கொக்கட்டிச்சோலை திருத்தான்தோன்றீச்சரம்

செழிப்பும், வனப்பும் மிக்க மருத நிலச் சார்புடைய மண்முனை தென்மேற்கு பிரதேசத்தின் மட்டு நகரிலிருந்து மண்முனைத் துறையூடாக சுமார் பதின்மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் கொக்கட்டிச்சோலை உள்ளது. கொக்கட்டி மரங்கள் நிறைந்த சோலையாக இருந்தமை இப்பெயருக்கு காரணமாகலாம். அத்தோடு கொக்கட்டி மரத்தில் சிவபெருமான் சுயம்பு லிங்கமாக எழுந்தருளியுள்ளமையும் இதனை உறுதிப்படுத்த சான்றாக அமைந்தது. இது சுயம்பு லிங்கமாக இருந்தமையால் தான்தோன்றி லிங்கமென அழைக்கப்பட்டது. தான்தோன்றி லிங்கமைந்த புண்ணிய தலம் திருத்தான்தோன்றீச்சரம் எனக் குறிப்பிட்டுள்ளமை பொருத்தமானதாகும்.



வரலாற்றுத் தொன்மை மிக்க சிவாலயங்களில் தனித்துவமானதும் மக்கள் வாழ்க்கையோடு இணைந்ததுமான வழிபாட்டு முறைகள் ஆகம முறைக்கு புறம்பாக புகுந்திருந்தமை பொது இயல்பாகும். இவ்வகையில் சுமார் 1500 ஆண்டுக்கு மேல் பழமையான மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை திருத்தான்தோன்றீச்சரத்தில்

**இ. சாந்தலிங்கம் JP**
கிராமசேவை உத்தியோகத்தர்
வன்னைக்கர், திருத்தான்தோன்றீச்சரம், கொக்கட்டிச்சோலை.

தனித்துவமானதும் மக்கள் வாழ்க்கையோடு இணைந்த வழிபாட்டு முறைகளையும், நடைமுறைகளையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மட்டக்களப்பு மக்களின் படிப்படியான குடியேற்றத்தையும், அம்மக்களிடையே காணப்படும் உட்பிரிவுகளையும் இவ்வாலயம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. பண்டைய காலத்தில் உலகநாச்சி மண்முனையை சிற்றரசு புரிந்த வேளையில் கொக்கட்டி மரங்களால் சூழப்பட்ட ஒரு வனத்திலே திகடன் என்னும் வேடுவன் தேன் எடுக்கச் சென்று அங்கு ஒரு மரத்தினை வெட்டிய போது அதிலிருந்து இரத்தம் பாய்ந்து ஓடுவதைக் கண்டு வேடுவன் பயமடைந்து ஓடிச் சென்று அரசி உலக நாச்சியிடம் தெரிவித்தான். பிற்பாடு அவர் அதனை பார்வையிட்டு அது ஒரு சிவலிங்கம் தான் என உணர்ந்து முதலில் ஒரு கொத்துப் பந்தலிட்டு ஒரு ஆலயம் அமைத்து வழிபாடு செய்தனர். இதுவே ஆரம்பக் கால ஆலயம் எனக் கூறப்படுகின்றது. அக்காலம் முதல் இந்தியாவிலிருந்தும், இலங்கையின் வேறு பகுதிகளிலிருந்தும் இனக் குழுக்களாக இங்கு வந்து குடியேறிய எல்லா மக்களையும் தன்னோடு இணைத்துக் கொண்ட பெருமை இவ்வாலயத்திற்கு உண்டு. ஒவ்வொரு வருடமும் உற்சவ முடிவில் நிகழ்த்தப்படும் திருக்குடுக்கை,வரிசை முட்டி கூறல் என்னும் நிகழ்ச்சியில் மட்டக்களப்பில் வாழ்ந்தவர்களும், வாழ்ந்து கொண்டு இருப்பவர்களுமாகிய 140 அளவிலான இனப்பிரிவுகள் இங்கு திருக்குடுக்கை (வரிசை முட்டி) பெற்று கௌரவிக்கப்பட்டு வந்ததைக் காணலாம். இப்பிரிவினர்களுள் அந்தணர் முதல் புயலவர் ஈறாக எல்லா இன மக்களும் கௌரவிக்கப்பட்டதை அவதானிக்கலாம். மட்டக்களப்பில் ஆதிக்கம் பெற்று விளங்கிய முக்குகர் எனும் இனத்தவரால் இவ்வாலயம் பரிபாலிக்கப்பட்டு வந்தாலும் பல சாதியினரும் இவ்வாலயத்துடன் தொடர்பு படுத்தப்படுகின்றனர். முக்குகரோடு வேளாளருக்கும் இவ்வாலயத்தில் நீண்ட காலமாக தொடர்பு இருந்து வந்திருக்கின்றது.

மற்றும் இக்கோயில்களில் கடமை புரிந்தவர்களை எடுத்துக் கொண்டால் பறையர் திருவிழா அன்று எண்ணெய் கொண்டு தேரை விளக்கும் பொறுப்புடையவர்கள், குருகுல கரையார் தேருக்கு வடம் தொடுத்துக் கொடுக்கும் கடமைக்குரியவர்கள், ஆசாரிகள் கொடி எழுதும் கடமைக்குரியவர்கள், தேருக்கும் ஏனைய தேவைகளுக்கும் சேலை கட்டும் பொறுப்பு வண்ணாருக்குரியது. குயவர் குடுகைகளையும் செய்து கொடுப்பதற்கும் கிரியைகளுக்குரிய பானைகளையும், குடங்களையும் கொடுப்பதற்கும் பொறுப்பு வாய்ந்தவர்கள். இவற்றை விட இக்கோயிலுக்குத் தொண்டூழியம் செய்வதற்கென சிறப்பு உரிமைகள் பெற்றவர்கள் உள்ளனர். மட்டக்களப்பில் வாழ்ந்து வந்த சோனகர் கூட இக்கோயிலில் கௌரவிக்கப்பட்டு வந்ததனையும் அறிய முடிகின்றது. இவ்வகையில் இவ்வாலயம் மட்டக்களப்பின் ஒரு தேசிய கோயிலாக மதிக்கப்பட்டு வருகின்றது.

சாதி முறையில் இவ்வாலயம் பரிபாலிக்கப்பட்டு வந்தாலும் வருடாந்த விழாக்களும் பூசைகளும் இதே முறையில் நடாத்தப்பட்டு வந்தாலும் சாதியில் ஏற்றத்தாழ்வு காண்பது இக்கோயிலின் பண்பன்று. இங்கு எல்லாச் சாதி உடையவர்களும் கோயிலுக்குச் சென்று வழிபடும் தகுதி உடையவர்கள்.

12 ஆம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் தோற்றம் பெற்று வளர்ந்த வீர சைவ வழிபாடு முறையே இங்கு தொடர்ந்தும் பேணப்பட்டும் வருகின்றது. வீர சைவம் என்பது சாதி முறைக்கு எதிராக சமத்துவத்தை பேண வேண்டும் எனும் இலட்சியத்தோடு பசவேசரால் கர்நாடகத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இச்சமயம் கலிங்கமாகோனால் 13ம் நூற்றாண்டில் இங்கு புகுத்தப்பட்டது என்பது வரலாற்று ஆசிரியர் சிலரின் கருத்தாகும்.

கொக்கட்டிச்சோலை திருத்தான்தோன்றீச்சரர் ஆலயம் விவசாய நிலத்திடை விவசாயிகள் மத்தியில் அமைந்திருக்கின்றது. இவ்வாலயத்திற்கு கண்டி மன்னர்களாலும்

மட்டக்களப்பில் முதன்மை பெற்று விளங்கிய முக்குகர் வன்னிமைகளாலும் பலநூறு ஏக்கர் காணிகள் மானியமாகக் கொடுக்கப்பட்டிருந்தன. இக்காணிகளில் பல இக்கோயிலால் கைநழுவ விடப்பட்டாலும் தற்பொழுது சுமார் 150 ஏக்கர் வரையில் இக்கோயிலுக்கு உடமையாக உள்ளது. இக் கோயிலின் ஊழியம் செய்வதற்கு கூட காணிகள் மானியமாக கொடுக்கப்பட்டு வந்தது. சூழல் நிலைக்கு ஏற்ற பண்டைய காலம் முதல் நெல்லே இக்கோயிலின் பணமாக செய்யப்பட்டு வந்ததை அறிய முடிகின்றது. இக்கோயிலின் நித்திய பூசை, விழாக்கள் வேறு கூலிகள் எல்லாவற்றிக்கும் சுமார் 200 அவணம் நெல் வருடந்தோறும் செலவிடப்படுகின்றது எனலாம். இக்கோயிலுக்கு இச்சூழலில் வாழும் விவசாயிகள் அனைவரும் வரி செலுத்த வேண்டும். இவ்வரியை செப்பேட்டு வரி அல்லது தெண்டல் வரி எனக் குறிப்பிடுவர். தமிழ் மன்னன் மாகோன் செப்பேட்டின் மூலம் இவ்வரியை செலுத்த வேண்டும் என ஆணை பிறப்பித்தான் என கருத முடிகின்றது. இவ்வரியின் பிரகாரம் இங்குள்ள ஒவ்வொரு விவசாயியும் ஒவ்வொரு வயலின் பெயரால் விளைவின் போது ஒரு மரைக்கால் நெல்லும் மார்கழிப் பஞ்ச காலத்தில் ஒரு மரைக்கால் நெல்லும் செலுத்த வேண்டும். இவ்வரியை தெண்டல் வரிக்காரர் அல்லது செப்பேட்டு வரிக்காரர் என அழைக்கப்படும் நால்வர் விவசாயிகளிடமிருந்து அறவிடுவர். இதை விட சூடு மிதிக்கும் முதல் நாள் களத்தில் அளக்கப்பட்ட முதல் மரைக்கால் நெல்லை இங்கு வாழும் எல்லா மக்களாலும் தான்தோன்றி அப்பரின் கோயிலுக்கு கொடுப்பது வழக்கமாகும். இவ் இறைவனுக்குப் படைக்க அமுதுக்கானஅரிசி கொடுக்கப்படமாட்டாது. மாறாக நெல்லே கொடுக்கப்படுகின்றது. உட்கடமை செய்யும் மக்களே இந்த நெல்லைக் குத்தி அரிசியாக்கி அந்த அரிசியிலேயே அமுது செய்து வைக்கும் பண்பு இன்றும் பேணப்பட்டு வருகின்றமையை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. இக் கோயில் விவசாய சூழலுக்கு ஏற்ற புதிரெடுத்தல், புதிருண்ணுதல் முதலிய நிகழ்வுகள் பெரு விழாவாகக் கொண்டா டப்படுகின்றன. இக்கோயிலில் புதிரெடுக்கின்ற அன்றே இப்பிரதேசத்திலுள்ள அனைவரும் புதிரெடுப்பர். புதிர் கொடுக்கும் அன்று இக்கோயிலின் குருமார் உட்பட தொண்டூழியம் செய்பவர்களும் ஏனையவர்களும் புதிரைப் பெற்றுக் கொள்வார்கள். தான்தோன்றி அப்பர் புதிர் உண்ணுகின்ற நாள் இங்கு கறியமுது படையல் செய்யப்பட்டு பலர் சேர்ந்து உண்ணுவார்கள். இங்கு வாழும் விவசாயிகளுக்கு தேவையான போது தான்தோன்றி அப்பர் மழையைப் பெய்ய வைப்பார் என்ற பெருநம்பிக்கை உண்டு. மழையை வேண்டி சிறப்பான பூசை முறைகள் செய்யப்படுகின்றது. இவ்வாறு மக்கள் வாழ்க்கைக்கு அமைய போற்றப்பட்டு வரும் ஆலயத்தில் ஆவணி மாதத்தில் வருகின்ற வளர்பிறை பிரதமையும் உத்தர நட்சத்திரமும் கூடிய திருநாளில் திருக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சகல குடித் திருவிழாக்களும் சிறப்புற நடைபெற்று பூரணைக்குப் பிற்பாடு வரும் முதல் ஞாயிற்றுக் கிழமை தேரோட்டப் பெருவிழாவும் அன்றிரவு திருவேட்டைத் திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

இக் கோயில் கிழக்கிலங்கையில் உள்ள ஒரே தேரோடும் கோயிலாகும். இதனாலேயே இப்பிரதேச மக்கள் இக் கோயிலின் விழாவை தேரோட்டமென்று அழைப்பர். தர்மசிங்க மன்னன் சோழ நாட்டிலிருந்து மூன்று தேர்களையும் வரவழைத்து தேரோட்டப் பெருவிழாவுக்கு பயன்படுத்தினான். இந்த மூன்று தேர்களில் ஒன்று தேரோட்ட நிகழ்வு ஒன்றில் ஏற்பட்ட தெய்வக் குற்றம் காரணமாக தேரோடும் பாதையை விட்டு விலகி ஆலயத்திற்கு தென்மேற்குத் திசையில் உள்ள மதிலை உடைத்து ஆற்றுக்குள் விழுந்து விட்டதாக எமது முன்னோர்கள் கூறுவர். மிகுதியாக உள்ள இரண்டு கலைச் சிற்பங்கள் நிறைந்த தேர்களுமே தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆலயத்திலுள்ள பல

சித்திரங்கள் அமைந்திருந்த சித்திரத் தேரிலே உமையவள் சகிதம் சிவபெருமான் எழுந்தருளியிருக்க மற்றைய தேரில் ஆனைமுகனாகிய பிள்ளையார் ஏற்றப்பட்டு பக்தர்களால் வீதிவலமாக இரு தேர்களும் இழுத்து வரப்படும். இக்காட்சி தேரோட்டம் என்று அழைக்கப்படுவது இப்பிரதேச மக்களின் வழக்கமாகும். கிழக்கிலங்கையில் எந்தக் கோயிலுக்கும் இல்லாத தனிச் சிறப்பு இக்கோயிலுக்கு இதுவேயாகும்.

திருத்தான்தோன்றீச்சரர் தன்னை நாடி வரும் அடியார்க்கு வேண்டுபவற்றை வாரி வழங்கும் ஒப்பற்ற வள்ளல், தீராத வினைகளைத் தீர்க்கும் வைத்தியநாதருமாவார். இதனால் இவ்வாலயத்தில் நாள்தோறும் ஏராளமான மக்கள் பல பாகங்களிலும் இருந்து திரண்டு வந்து கொண்டிருப்பது தன்னிகரில்லாத தான்தோன்றி அப்பனின் பெருமையினை மிகைப்படுத்திக் காட்டுகின்றது.

சோழர் ஆட்சியில் சமயப்பணி மேலோங்கி இருந்த காலத்திலும் சமூகப் பணியையும் திறம்பட செய்து முடித்தனர். தற்பொழுது ஆலயங்களை எடுத்துக் கொண்டால் சமயப் பணிகளை மாத்திரம் செய்து முடிக்கின்றனர். அந்த வகையில் கொக்கட்டிச்சோலை திருத்தான்தோன்றீச்சரம் சமூகப் பணிகளையும் மேன்மைப்படுத்தியுள்ளது. கடந்தகால யுத்தத்தினால் பாதிப்புற்ற பின்தங்கிய கிராமங்களுக்கு அரச ஆசிரிய பற்றாக்குறை நிலவுமிடத்து தொண்டர் ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குதலும் அத்துடன் வருடந்தோறும் க.பொ.த.சாதாரணதர வறிய மாணவர்களுக்கான விசேட வகுப்புக்களை வழங்குவதற்காக பட்டிப்பளை கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தினருக்கும் பண உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் இன்னும் பல சமூகப் பணிகளையும் செய்து வருவதில் முதன்மை பெற்று விளங்கும் இவ்வாலயம் மக்கள் வாழ்க்கையோடு இணைந்தது என்பது சிறப்பம்சமாகும். இலங்கையில் உள்ள இந்து ஆலயங்கள் யாவும் போர்த்துக்கேய படைகளால் உடைத்து தரைமட்டமாக்கப்பட்ட வேளையில் இக்கொக்கட்டிநாதர் மட்டுமே எஞ்சி நின்று பெருமை பெற்ற வரலாறுகளும் உண்டு. இந்த நிலையில் ஈஸ்வரருக்கு காவலாக இருந்த நந்தி தேவரே உயிர்ப்புடன் எழுந்து புல்லுண்டு போர்த்துக்கேய படைகளையும் அதன் தளபதிகளையும் புறமுதுகு காட்டி ஓட வைத்த செய்திகளும் எம் ஆலயத்திற்கு பெருமை சேர்ப்பனவாக உள்ளன. இவ்வாலயம் மரபு வழக்குகளைக் கொண்டதாகவும் கல்வெட்டு சார்ந்ததாகவும் விளங்குகின்றது. இதனை மாற்றவோ திருத்தவோ கூடாது எனவும் கூறப்படுகின்றது. பின்னாளில் வரும் அரசர் இதனை மாற்றிப் பிடித்து அடித்து சிறையிட்டு வருத்தினாலும் மரபு முறையை மாற்ற முடியாது என கல்வெட்டு செய்தி ஒன்று கூறுகின்றது.

மேற்கூறிய விடயங்களை நோக்குகின்ற பொழுது இவ்வாலய செயற்பாடு இவ்வாலயத்தால் கட்டுப்படுத்தப்படும் மக்களது பழக்க வழக்கமும் பண்பாடும் ஏனைய ஆலயங்களில் காணப்படுவது போலின்றி மாறுபட்டதொரு பண்பாட்டை தன்னகத்தே கொண்டு செயற்பட்டு வந்தமை புலனாகும். பல மாற்றங்கள் அடைந்த இந்த காலகட்டத்தில் கூட இப்பாரம்பரிய பண்புகள் இன்றும் பேணப்பட்டு வரும் தன்மையை இவ்வாலய உற்சவங்களின் போதும் தேரோட்ட திருவிழாக்களின் போதும் கண்டு கொள்ள முடிகின்றது.

# அழகிய தேசம் எங்கள் பிரதேசம்

மண்முனை தென்மேற்கு நாடு
மகிழ்வான எங்களின் அழகான வீடு - மண்முனை -

தான்தோன்றி ஈஸ்வரனும்
தாந்தாமலை வேலவனும்
ஒன்றாகத் துணை புரியும் பூமி - இது
உலகநாச்சி ஆண்ட ராசதானி - மண்முனை -

மலைகளுண்டு குகைகளுண்டு
மன்னர் வாழ்ந்த இடங்களுண்டு
வற்றாத நீரூற்றுமுண்டு இங்கே
வயல் விளைய குளங்களுண்டு இங்கே - மண்முனை-

வன்னியனார் கட்டி வைத்த
செந்நெல் வயல் மதில் சுவர்கள்
சொல்லுகின்ற கதைகளையும் கேளீர்
தொன்மை காலத் தேரினையும் பாரீர் - மண்முனை-

ஆனியிலும் ஆடியிலும் மாரி
அம்மனுக்குப் பூசையுண்டு
கண்ணகிக்கும் சடங்கு உண்டு தானே - நாகர்
கட்டுப் பொங்கல் கண்டிடுவோம் நாமே - மண்முனை-

பாலுமுண்டு தேனுமுண்டு
பாடுமீன் வாவியுண்டு
பொன்விளையும் பூமி இங்கு உண்டுதான்
போரடிக்கும் காளைகளும் இங்குதான் - மண்முனை-

கும்மியுண்டு கோலமுண்டு
கூத்துக்கலை பலவும் உண்டு
கொம்புமுறி ஆட்டமும் உண்டுதான்
குயில்பாட்டு ஓசைகளும் இங்குதான் -மண்முனை-

கர்த்தருக்கும் கோயில் உண்டு
கணபதிக்கும் பூசை உண்டு
எத்திசைக்கும் உணவளிக்கும் உழவர் உண்டு
ஏற்றமுடன் வாழ்ந்திடுவோம் நாங்கள் இங்கு -மண்முனை-

**பா. ஸ்ரீஸ்கந்தசெயா**
அம்பிளாந்துறை




இடமிருந்து வலமாக

அமர்ந்திருப்போர் : திரு. S. சசிகுமார், திரு. S. புவனேஸ்வரன், திருமதி. S. வில்வரத்னம் (பிரதேச செயலாளர்), திரு. P. ஸ்ரீஸ்கந்தசெயா, திரு. V. செல்வராசா

நிற்போர் : திரு. S. மதிதயன், திரு. K. சுரேந்திரன், திரு. C. சக்திநாயகம், திரு. S. சிவலிங்கம், செல்வி. N. வளர்மதி, திரு. K. ஞானப்பிரகாசம், திரு. R. நடராஜா, திரு. R. ஞானசீலன், திரு. K. சிவநடராசா.

சமூகமளிக்காதோர் : திரு. S. உதயகுமார், திரு. K. நிலக்சன், திரு. A. மோகனகுமார்.



# மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் காணப்படும் கலையும் கலை ஆர்வமும்.

மட்டக்களப்புத் தேனாட்டில் வாவி மகள் கவி பாட மீனினங்கள் ஓசை எழுப்ப வாவிக்கப்பால் தென்மேற்கே உள்ள நிலப்பகுதியே மண்முனைத் தென்மேற்குப் பிரதேசமாகும். பூர்வீக காலம் தொடக்கம் இன்று வரை தமிழர் செறிந்து வாழும் பகுதியில் மட்டகளப்பு தேசமும் ஒன்றாகும். இது மத்திய காலத்திலே மட்டக்களப்பு தேசம் என அழைக்கப்பட்டு வந்தது. அத்துடன் அத்தேசத்தில் 50 மைல் தூரம் கொண்ட வாவி காணப்படுவதனால் தான் மட்டக்களப்பு என பெயர் வந்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

மட்டக்களப்பு பிரதேசம் எழுவான் கரைப்பகுதி, படுவான் கரைப்பகுதி என இரு பெரும் பிரிவுக்குட்படுத்தப்பட்டது. படுவானில் ஆதவன் மறைவதனாலும் எழுவானில் ஆதவன் தோன்றுவதாலும் இப் பிரதேசம் எழுவான், படுவான் எனவும் அழைக்கப்பட்டது. இதில் எழுவான் கரைப்பகுதியில் வாணிப நடவடிக்கைகள் அதிகம் நாட்டமுடையதாக அமைந்திருந்தது. இது அதிகளவு நெய்தல் நிலமாகவே காணப்பட்டது. படுவான் கரைப்பகுதி கிராமியப் பகுதியாகவும் அழைக்கப்பட்டது. எழுவான் கரைப்பகுதி நெய்தல் நிலமாக காணப்பட்டதால் வாணிப காரியாலயங்கள் அனைத்தும் எழுவான் கரைப்பகுதியிலேயே அமைக்கப்பட்டது.

இப் பிரதேசமானது 125.1 சதுரகிலோமீற்றர் பரப்பளவு உடையதாகவும் 14 கிராமங்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது. இப் பிரதேசத்தில் பிரதேச செயலாளர் பிரிவு பட்டிப்பளையில் அமைந்துள்ளமையால் இதனை அடிப்படையாகக் கொண்டு இப் பிரதேசத்தை பட்டிப்பளைப் பிரதேசம் எனவும் அழைப்பர். காடும் காடுசார்ந்ததும், மலையும் மலைசார்ந்ததும், முல்லை குறிஞ்சியும் முத்தமிட்டு விளையாடும் இடமாகவும் இம் மண்முனைத் தென் மேற்குப் பிரதேசம் அமையப்பெற்றுள்ளது.

கல்லிலும் கலை உண்டு. காலிலும் கலை உண்டு. சேற்றிலும் கலை உண்டு. உண்ணும் சோற்றிலும் கலை உண்டு. என்ற கூற்றுக்கிணங்க மனிதன் ஒருவன் தனது வாழ்வில் செய்யும் அத்தனை நடவடிக்கையும் ஏதாவதொரு கலை உணர்வை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது. இதனை எடுத்து நோக்குவோமானால் ஒரு குழந்தை பிறந்ததும் அக் குழந்தை நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பில் என்று கூறுவார்கள். அந்த அன்னையானவள் தன் குழந்தை செய்யும் நடத்தைகள்

**இராசகுமார் கிருஷாந்தினி**
மட்/ மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்

நல்லதாக இருக்கணும். என் பிள்ளை நல்லவராகத் திகழ வேண்டும் என்றே நினைப்பாள். அதேபோல் அக் குழந்தையை வழி நடத்திச் செல்வாள். அதே போன்றது தான் இக் கலையும். ஒருவர் ஒரு கலையில் ஈடுபட முன்வரும் போது அது எப்படிப்பட்டதென்று முதலில் நன்கு அறிந்திருத்தல் முக்கியமான விடயம் ஆகும்.

அந்த வகையில் இக்கலைகளில் மிகவும் பழமைவாய்ந்ததும் சிறப்பு வாய்ந்ததாகவும் காணப்படுவது கூத்துக் கலையாகும். இக் கூத்துக் கலையானது சிந்துக்கூத்து, தென்மோடி, வடமோடி, வசந்தன் என பல வகைகள் உள்ளன. இக் கூத்துக்களில் தென்மோடி, வடமோடிக் கூத்துக்கள் மண்முனை தென்மேற்குப் பிரதேச மக்களால் ஆடப்படுவதை யாவரும் அறிந்த விடயமாகும். இக் கூத்துக்கலை அன்றும் இன்றும் தனிமதிப்பையும் சிறப்பையும் பெற்று வருகிறது. ஆரம்பத்தில் இக் கூத்தானது 5வருடங்கள் பழகி பின்னரே அக் கூத்தினை ஆடுவார்கள். இக் கூத்தில் ஒரு கதைக்கருவைக் கொண்டு அதற்கே முகவடிவம் உடையவர்களை இனங்கண்டு அவர்களை அப்பாத்திரத்திற்கு தெரிவு செய்வர். அதன் பின்னர் அண்ணாவிமார் அக்கூத்துக்கேற்ற மாதிரி தாளம் போடத் தெரிந்தவர்களாக இருப்பர். அத்துடன் கூத்துக்கலையின் முக்கியமானதாக அமைவது பாடலாகும். அப்பாடல் கொப்பியை அதற்கென ஒருவர் தெரிவு செய்து அதன் பின் ஒவ்வொருவரிடம் தமது வேலைகளைச் சொல்லி தனது வேலையை ஆரம்பிப்பார். அதன்பின் அதனை நடித்து அதனை தொடர்ந்தும் இடைவிடாது பயிற்சி எடுப்பர். இவ்வாறு பயிற்சி எடுத்து நன்கு நடித்துப்பழகிய பின்னர் அதனை ஒத்திகை பார்த்து அதனை தாமே தடிகளால் அரங்கம் அமைத்து அதிலே ஆடுவார்கள். இவர்களால் அமைக்கப்படும் இவ் அரங்கமானது அன்று தொடக்கம் இன்று வரை "களரி " என்றே அழைக்கப்படுகின்றது.

இக் கூத்துக்கலையானது அன்றிலிருந்து ஆடப்பட்டு வந்தாலும் தற்போது தனித்தனிக் கிராமமான பின்னர் மக்கள் தமது கலாசாரத்திற்கேற்ற மாதிரியாகவே தற்போதும் கூத்தை ஆடிக்கொண்டு வருகின்றனர் இக் கூத்துக்கலை தற்போது அனைவராலும் விரும்பப்படும் கலையாகவும் இருக்கின்றதென்பதை நாம் ஒவ்வொரு தமிழ்மொழித்தினப் போட்டிகள், விழாக்களின் போது ஆடப்படுவதை கொண்டு எம்மால் அதனை அறிந்து கொள்ள முடிகிறது. இக் கூத்துக்கலையானது தற்போது வடமோடி தென்மோடி கூத்துக்கலைக்கு பிரபல்யமான இடமாக மட்டக்களப்பு பிரதேசமே சிறப்புப் பெற்றதாக உள்ளது. அத்துடன் மலையகம், யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், போன்ற இடங்களிலும் காணப்படுவதாக தெரியவருகிறது. இக் கூத்துக்கலையானது மிகவும் துரிதமாக வளர்ச்சி கண்டதால் தற்போது சில நாட்களிலே மாணவர்களுக்கு பயிற்றப்பட்டு ஆடுவதை எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

இக்கலை மட்டுமல்ல எமது கிராம மக்களால் வாய்மொழியாகவே படிக்கப்பட்டு செவிவழியாக வந்த கலைச்செல்வமாக விளங்குவது நாட்டார் பாடல்கள் ஆகும். இப்பாடல்கள் மக்கள் தமது வேலையை நேரதாமதம் ஏற்பட்டால் அதில் களைப்படையாமல் இலகுவாகக் செய்ய இதைப் பாடி தமது வேலைகளை கஸ்டம் காட்டாமல் சந்தோசமாக செய்தனர். பாடல்கள் மட்டுமல்ல தாலாட்டு, நலங்கு, சூடுமிதிப்புப்பாடல், வேளாண்மை அறுவைப்பாடல், மணப்பெண் பாடல், மாப்பிள்ளைப்பாடல், கேலிப்பாடல், எனப் பல வகைப்பாடல்கள் இவற்றுள் உள்ளடங்கும். இப்பாடல்கள் அக்காலத்தில் வாய்மொழியாகவே பாடப்பட்டு வந்தமையை அறியலாம்.

தற்போதைய நவீன விஞ்ஞான மாற்றங்கள் ஏற்பட்டு வளர்ச்சியடைய இப்பாடல்களும் காலத்தால் மறைந்து போவதாக காணப்பட்டது.இதனை அறிந்த மக்கள் தமது எதிர்கால மக்களுக்காக வாய்மொழியாக வந்த பாடல்களை எல்லாம் தொகுத்து ஒரு இலக்கியங்களாகவும் பாடல் புத்தகங்களாகவும் தொகுத்து வெளியிடுகின்றனர். அத்துடன் பாடசாலைப்புத்தகங்கள் தமிழ்பாடத்திலே ஒரு பாடமாக்கி அதனை மாணவர்களைப் படிக்க வைத்து மாணவர்களிடையே கிராமியக்கலையம்சமாக இருக்கும் நாட்டார் பாடக் கலையில் மாணவர்கள் ஆர்வம் காட்ட வழிவகை செய்கின்றனர்.

அத்துடன் இப்பாடல்களை வாய்மொழிப்பாடல்கள், கிராமியப்பாடல்க்ள், நாட்டுப்புற பாடல் எனப்பல பெயர்களாலும் அழைத்தனர். அத்துடன் இப்பாடல்கள் ஒரு தனித்துவமான கதையையும், கருத்துச்செறிவையும் இசை உணர்வையும் வெளிப்படுத்துவதனால் இப்பாடலை மாணவர்கள், சிறு குழந்தைகள் கூட விரும்பிப் படிக்கக் கூடியதாக உள்ளது.

இம் மண்முனைப் பிரதேசத்தில் இக்கலைகள் மட்டுமல்லாது விளையாட்டுக்களும் முக்கியமானதாக அமைந்திருந்தது. இதில் சிறப்பானதாக அமைவது கொம்பு முறி விளையாட்டாகும். இவ் விளையாட்டை எல்லோராலும் விளையாட முடியாது. இவ் விளையாட்டை விளையாட வீரமுள்ள எதனையும் தாங்கும் பலசாலியாக இருப்பவரே தமது கொம்புகளைக் கொண்டு விளையாடுவார்கள். இதில் விளையாடும் போது அவ்வூர் மக்கள் தமது வீரனின் கொம்புகளை சிறப்பித்துப்பாடுவதையும் இங்கு அவதானிக்கலாம்.

தென் சேரியான் கொம்பு எங்கே ..எங்கே..
சித்திரத்தேருக்கு மேலே ...மேலே ...
வடசேரியான் கொம்பு வண்ணானின்
சேலைக்கு உள்ளே ...உள்ளே.... எனவும் தமது வீரர்களை உற்சாகப்படுத்த இப்படிப்பட்ட நாட்டுப்புறப் பாடல்களையும் பாடுவார்கள்.

உலகம் சுருங்கி வரும் இக்காலத்தில் தமது கிராமியக் கலைகள் சிதைந்து மறைந்து போகாமல் இருப்பதற்காகவே இக்கலைவடிவங்களை ஒரு நாவல் வடிவில் பழங்கால தமிழர் எழுத்துருவில் அமைத்துள்ளதர்க் கூறப்படுகிறது. முன்னர் கிராமிய மக்கள் தாம் செய்யும் ஒவ்வொரு வேலைக்கும் தமது எண்ணத்தில் தோன்றும் விடயங்களை வரிகளாக்கி அதனைப் பாடலாகப்பாடினர். தமது எண்ணங்கள் சிறப்பானதாக இல்லையா எனவும் அவர்கள் சிந்திக்க வில்லை. தமது வேலை இலகுவில் முடிய வேண்டும் தாம் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இப்படிப்பட்ட பாடல்களையும் விளையாட்டுக்களையும் செய்து தமது வாழ்க்கையை சிறந்த முறையில் அமைத்துக் கொண்டனர்.

ஆனால் தற்போது தமது சந்தோசம் தமது வாழ்க்கைக்காகவே. இன்றைய மனிதர் கலைகளைச் செய்வதாகத் தெரியவில்லை. தமது தொழிலில் இவற்றை ஒரு பணம் எனக் கருதியே இவற்றைச் செய்து வருகின்றனர். தற்போது சினிமாத்துறையை எடுத்துக் கொண்டால் கவிஞர்கள் முன்னைய பாடல்களைக் கொண்டு சினிமா படத்திற்கேற்ப அதனை மாற்றி படிக்கின்றனர். இதன் மூலமும் எமது பண்டைய கலைகள் அழியாதிருக்கும் என்பதையும் எம்மால் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

சந்தோசம், பொழுதுபோக்கு, தொழிலை இலகுபடுத்தல் போன்றவற்றுக்காக கலைகளைச் செய்து வந்த மனிதன் சினிமாத் துறையின் வளர்ச்சியைக் கண்டு இக்கல்லையயே தொழிலாக எண்ணி வாழும் மக்கள் இன்றும் கூட வாழ்ந்து வருகின்றனர். ஏனென்றால் முற்காலத்தில் தமக்கு விரும்பிய தொழிலாகவும் சீவனோபாயத் தொழிலாகவும் விவசாயத்தையே செய்து வந்தனர். அத்துடன் தென்னை, வாழை, பலா, தானியங்கள்

போன்றவற்றைப் பயிரிட்டு அவற்றையே தொழிலாக எண்ணி அதிலே வாழ்க்கை ஓட்டுவதற்காக களைப்பு, சோர்வு காட்டாமல் இருப்பதற்காக செய்த கலைகள்யாவும் இன்று வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் தொழிலாக மாறியமை அனைவருக்கும் எல்லையில்லா ஆனந்தம் கொடுக்கும் செயலாக அமைகின்றது. உதாரணமாக மண்முனை தேசத்தில் அதிகமாக தமது ஆலய விழாக்களில் கூத்து, கும்மி, கோலாட்டம், வசந்தம், நாட்டார்பாடல், என்ற கிராமியக் கலையை செய்வதை அவதானிக்கின்றோம். இதன் மூலம் தமது கலை ஆர்வத்தையும் தமது கிராமத்தின் பற்றுணர்வையும் தெட்டத் தெளிவாகக் கூறுவதாக அமைகிறது. எவ்வளவுதான் உலகம் சுருங்கி வந்தாலும் கலைப்படைப்புக்கள் என்றும் அழியாசெல்வமாக இருப்பதையிட்டு பெருமையடைகின்றோம். தற்போது பாடசாலை செல்லும் பிள்ளைகள் தொடக்கம் முதியோர்வரை கலைப்படைப்பில் சிறந்தவர்களாக இருக்கின்றனர். ஒருவர் நடப்பதில் இருந்து நித்திரை செய்வது வரை ஒரு கலையாகவே அமைகின்றது.

சினிமாத் துறையில் கலையில் பெண்கள் மட்டுமே சிறந்தவர்கள் என்று எடுத்துரைத்தாலும் இம் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தை பொறுத்தவரை ஆண்,பெண் பேதமில்லாது அனைவராலும் செய்ய முடியும். அனைவரும் சிறந்தவர்கள் என்று எடுத்துரைக்கின்றது. இதனையே நீங்கள் அவதானித்திருப்பீர்கள். ஒரு ஆண் பாத்திரத்திற்கு பெண் நடிப்பதையும் பெண் பாத்திரத்திற்கு ஆண் நடிப்பதையும் இக் கிராமியக் கலைகளில் ஒன்றான கூத்துக் கலையில் காணமுடியும்.

கலைகளில் அறுபத்தினான்கு கலைகள் உள்ளது. அவற்றை சிற்பம், சித்திரம், ஓவியம், சங்கீதம் எனும் நுண்கலைகளையும் முற்காலத்தில் தவறவிடாதவர்களாய் எமது முன்னோர் இருந்தனர். எமது முன்னோர்கள் தமது தொழிலைச் செய்ய பொருட்களை சிற்பக்கலைகள் மூலம் செய்தனர். ஒரு வாய் பேசாதவருடன் கதைத்து உரையாட சித்திரக்கலை செய்தனர். தமது வேலையை இலகுபடுத்த இசை வடிவில் சங்கீதக் கலையை பின்பற்றி வாழ்ந்துள்ளனர்.

ஒரு மனிதன் மதிப்புக்கோ மரியாதைக்கோ கலையைச் செய்து வரவில்லை அதற்கு மேலாகவே உயர்ந்த செல்வமாகவே கருதி அக்கலையைச் செய்து வருகின்றனர். ஒருவனின் உள்ளத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துவதும் ஒரு கலைதான். என நாடகக்கலை எடுத்துக்காட்டுகின்றது. ஒரு பிள்ளையை உயர்ந்தவராக மாற்றுவதாக அமைவது இக் கலையாகும்.

இக்கலைகளில் ஒன்றான இசைக்கலை மூலம் இறைவனைக் கூட எம்மால் அடைய முடியும் எனவும் கூறப்படுகின்றது அவ்விறைவன் கூட இசைப்பிரியன் என்று தேவாரப்பாடலடிகள் கூறுகின்றது.

கதைத்துப்பார், கண்ணசைத்துப்பார், காலை விரித்துப்பார், கலை வரும். என்று பலர் கூறினாலும் அதனைச் செய்ய முயற்சி என்பது வேண்டும். அவ் முயற்சி இல்லாவிட்டால் கலை கவலையாக மாறிவிடும். இதனைப் பொறுத்தவகையில் மண்முனைத் தென்மேற்குப் பிரதேசம் கலைகளில் சிறப்பு வாய்ந்த ஒரு பிரபல்யமான இடமாக மிளிர்கின்றது.

"எத்தனை யுகங்கள் எடுத்தாலும் எத்தனை பிறவி எடுத்தாலும் என்றென்றும் அழியாக் கலை அமிர்தம் வேண்டும்"

# செம்மொழியில் தமிழ்மொழி

எல்லா மொழிகளுமே செம் மொழி என்ற அந்தஸ்தைப் பெற்று விடமுடியாது. செம்மொழியை செம்மையான மொழி, செவ்வியல் மொழி, இயற்றமிழ் மொழி, நயமொழி, நன்மொழி, தனிமொழி, என்ற கருத்தாடல்களும் உண்டு. செம்மொழி என்பதன் கருத்து ஒப்புக் கொள்ளப்பட்ட சிறப்புடைய, முதல்தரமான, இலக்கிய நயம்வாய்ந்த மொழி எனக் கருதப்படும்.

ஒரு மொழி செம்மொழியாவதற்கு பதினொரு தகைமைகள் இருக்க வேண்டும். அவை. தொன்மை, தனித்திறமை, பொதுப்பண்பு, நடுவு நிலமை, தாய்த்தன்மை, பண்பாட்டறிவும், பிறமொழித்தாக்கமில்லாத தன்மை,இலக்கிய நயம், உயர்சிந்தனை,கலைத்தன்மையின் வெளிப்பாடு, மொழிக் கோட்பாடு. உலகில் இந்த தகுதிகளை எட்டு மொழிகள் மட்டுமே பெற்று செம்மொழி அந்தஸ்தை அடைந்துள்ளதாக யுனெஸ்கோ 2006ல் வெளியிட்ட அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

செம்மொழி அந்தஸ்தை இதுவரை பெற்ற மொழிகளாவன கிரேக்கம், இலத்தீன், எப்ரேயம், பேர்சின், வடமொழி, சீனம், அரபி, தமிழ். உலகின் முதல் முதலாக கிரேக்கம், இலத்தீன், செம்மொழியென கருதப்பட்டன. கி.பி 1800-1900 ம் ஆண்டளவில் வில்லியம் யோண்ஸ் மகாசுமுல்ல ஆகிய அறிஞர்களின் முயற்சியின் நிமித்தம் வடமொழியின் தொன்மைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டதன் விளைவாக வடமொழி செம் மொழி என நிறுவப்பட்டது.

1816ம் ஆண்டு எல்விஸ் என்ற அறிஞர் தென்னிந்திய மொழிகள் வடமொழி இல்லாத மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது என நிறுவினார். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் டாக்டர் இராபர்ட் காண்டுவலர் (DR.RAPARDGANDUVALAR) என்ற அறிஞர் திராவிடக் குடும்ப மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய நான்கு மொழிகளின் சிறப்புத்தன்மையை ஆராய்ந்து அவற்றில் தமிழ் மொழி மட்டும் தமிழ்மொழியின் தொன்மை வடமொழில் நின்றும் தனித்தும் இயங்குவதற்குரிய ஆற்றல் கொண்டிருப்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டினார்.

தமிழ் மொழி செம்மொழி என்ற கருத்து இந்த ஆராய்ச்சியின் அடிப்படையின் அடித்தளத்தை வைத்துத்தான் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை (MANONMANIYAM.SUNDARAMPILLAI) மற்றும் வி.கே சூரியநாராயண சாஸ்திரியார் (SOORIYANARAYANA.SASTHITIYAR) தாம் எழுதிய தமிழ் மொழியின் வரலாறு எனும் நூல்கள் வாயிலாக தமிழ் மொழி செம்மொழி என்ற கருத்தினை வலியுறுத்தியது.

இவர்களைத் தொடர்ந்து தனித்தமிழ் இலக்கியத்தினை தமிழ் கடல் மறைமடல் அடிகளார் (THAMILKADAL MARAIMADAL ADIICALAAR) ஆராய்ந்து உலகில் முதல் செம்மொழி தமிழ்மொழி என்ற கருத்தினை ''பாவனர் கூடல்'' எனும் தமிழ் நூலில் விளக்கினார்.

**அரியம் பாக்கியசெல்வம்**
இரதாலயம்,
அம்பிளாந்துறை.

தமிழ்! உயர் தனிச் செம்மொழி என்பதனை மொழியியல் அறிஞரான DR.RAPAD GANDUVALAR திராவிட மொழிகளின் "ஒப்பிலக்கணம்" எனும் நூல் மூலம் 1856ம் ஆண்டு உலகிற்குத் தெரியப்படுத்தினார்.

## தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து:

1856ல் அறிஞர் ராபட் காண்டுவலர் (DR.RAPAD GANDUVALAR) ஒப்பிலக் கணம் எனும் நூல் மூலமாக தமிழ் மொழி செம்மொழி என தெரியப்படுத்தி சரியாக 148 ஆண்டுகள் கடந்த பின்புதான் இந்திய மத்தியரசு தமிழை செம் மொழியாக அறிவித்தது. அதாவது 2004 யூன் 6ம் திகதி இந்திய குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் அப்துல் கலாம்(DR.ABDULGALAM) இரு அவைகள் இணைந்த கூட்டத்தொடரில் தமிழை செம்மொழி என அறிவித்தார்.

அதன்பின் 4மாதங்கள் கடந்த பின்பு 2004 அக்ரோபர் 12ம் திகதி இந்திய அரசு தமிழ்மொழியை செம்மொழியென உத்தியோகபூர்வமாக உலகிற்கு வெளியிட்டது.

2010யூன் 23தொடக்கம் 27வரை செம்மொழியான தமிழ் மொழியின் முதலாவது மகாநாடு இந்தியாவில் கோவையில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை:

ஒரு இனத்தின் கலை பண்பாடு மொழி என்பன இன்றியமையாதது. அந்த வகையில் தமிழர்களாகிய நாம் எமது மொழியான தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு பூர்வீக வரலாற்றுத் தொன்மை வாய்ந்த இனமாக வாழ்கின்றோம். தாய்மொழியின் வரலாறு ஒவ்வொரு தமிழனும் அறியப்பட வேண்டும் என்பதற்காக இக்கட்டுரை வரலாற்று ரீதியான தகவல்களைத் திரட்டி எழுதப்பட்டுள்ளது.

இவ் ஆய்வுக்கட்டுரை தொடர்பான ஆதாரபூர்வமான விமர்சனங்களை இக்கட்டுரை ஆசிரியர் மனப்பூர்வமாக எதிர்பார்க்கிறார். அத்துடன் இக்கட்டுரை பற்றிய அபிப்பிராயங்களையும் எழுத்துமூலமாக எதிர்பார்க்கின்றோம்.

இக்கட்டுரைக்கு உதவிய உசாத்துணைத் தேடல்கள்


யுனஸ்கோ அறிக்கை-2006
அமெரிக்க புலனாய்வறிக்கை-2005
வீரகேசரி கதம்பம்-01.06.2008
ஊடகங்களில் வெளிவந்த தகவல்கள்
இணையத்தளங்கள் மூலமாக பெறப்பட்டவை
செம்மொழி மாநாட்டு கட்டுரைகள்-2010


ஒரு சமூகம் முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால் தன்னை பின்னோக்கிப் பார்க்கவேண்டும் அதற்கு வரலாறு முக்கியம்.




**இடமிருந்து வலமாக**

**அமர்ந்திருப்போர்** : திரு.S.ருசகுமார் , திரு.V.வரதராஜன், திருமதி.S.வில்வரத்னம் (பிரதேச செயலாளர்), திரு.S.ரவீந்திரன், திரு.P. பற்குணராசா.

**நிற்போர் - 1ம் வரிசை** : திரு.V.கந்தசாமி, திரு.N.விஜிதரா, திரு.P.பேரின்பராஜா, திரு. K.விஜயகுமாரன், திருமதி.T.பேரின்பராஜா , திருமதி.P.சீதாரலிங்கம், திருமதி.P.வெற்றிவேல், திருமதி.S.அருந்தவநாதன், செல்வி.S.குணவதி, P.சோதிமலர், திரு.M.அகிலேஸ்வரன்,

**2ம் வரிசை** : திரு.N.ரமேஸ், திரு.S.நேசதுரை, திரு.K.பேரின்பராஜா, திரு. V.ஜெயதீசன், திரு.T.பரமலிங்கம், K.சகுந்தலா, திருமதி.Y.குகன், திரு.S.தங்கவேல், திரு. தா. ஜெயரூபன், திரு. A.திருச்செல்வம், திரு.A.கோடீஸ்வரன்.

**3ம் வரிசை** : திரு.S.குகன், திரு.P.மோகன், திரு.S.மேகலநாதன், திரு. K.முருகமூர்த்தி, திரு.K.மித்திரேஸ்வரன், திரு.M.மோகன்,

# உலகநாச்சி வருகைக்கு முந்திய பழம்பதி அம்பிலாந்துறை

("அம்பிலாந்துறைக்கப்பால் மண்ணேரிமுனை" எனும் தொடரை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு )

மட்டக்களப்பின் வரலாற்றினை எழுதியவர்கள் மற்றும் அதனை ஆய்வுக்கு உட்படுத்தியவர்கள் எனப் பலரால் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாததும், ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படாததும், இதுவரையில் ஆய்வுலகக் கண்களைத் திறக்காததும் வரலாற்றின் மையத்தையும் முக்கிய திருப்பு முனையையும் தொட்டு நிற்கும் பதம் "அம்பிளாந்துறைக்கு அப்பால் உள்ள மண்ணேரிமுனை" என்று அமரசேனன் மகன் குணசிங்கன் கையாண்ட சொற்றொடராகும்.

உலகநாச்சி அனுராதபுரத்தையாண்ட மேகவண்ணனைக் கண்டு, தான் கொண்டு வந்த புத்தருடைய தசனத்தையும் கொடுத்து " அரசனே இந்த இலங்கையில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத கிராமமொன்றீயும் " என வேண்டுகின்றாள். அவனும் மட்டக்களப்பினை அரசு புரிந்த சினேகிதனான குணசிங்கனுக்கு ஒரு மடல் எழுதுகின்றான். அதில் " உமது மட்டக்களப்பு, உன்னாசகிரி (பானமை) இவைகளில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத பதி ஒன்றை இந்த உலகநாச்சிக்கு கைலஞ்சமாய் ஈந்து கொடும் " என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மடல் கண்டு மகிழ்ந்த குணசிங்க மன்னன் " அம்பிலாந்துறைக்கப்பால் மண்ணேரிமுனை வளர்ந்து, காடு செறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிந்தமாயீந்து " கொடுத்தான்.

இந்த இடத்தில் இருந்துதான் ஆய்வு புதிய திறவுகோலை வேண்டி நிற்கின்றது. ஆய்வாளர்கள் மட்டுமன்றி மற்றவர்களும் ஞாபகத்தில் குவியப்படுத்திக் கொண்ட அமிசம் அம்பிலாந்துறை, உலகநாச்சி எனும் கலிங்க ( ஒரிசா ) நாட்டு அரசியின் வருகைக்குப் பின்னர்தான் எழுந்திருக்கின்றது என்பதாகும். அதனால், மண்முனை தென்மேற்குப் பிரதேச வரலாற்றினை எழுதுவதில் சிக்கல்நிலை தோன்றுவது மட்டுமன்றி சரியாக வரன்முறையினைச் சொல்வதிலும் தடங்கல்நிலை ஏற்பட வழியுண்டு. இன்று பலரும் இப்பிரதேசத்தின் முதல் கிராமம் எது? என்று கேட்பதும் வரலாற்றுக்கு அப்பால் நின்று பதில் கொடுப்பதுமாக உள்ளனர். இந்த ஆய்வுக்குப் பின்னராவது அவற்றுக்கெல்லாம் தெளிவு கிடைக்கும் என நம்புகின்றேன். மேலும், அம்பிலாந்துறையினைப் பழம்பதி என்று கூறுவோர்களுக்கும் அதற்கான விளக்கம் இதன்மூலம் கிடைக்கின்றது.

**மூ. தயாநிதி** அதிபர்

S.L.P.S 2-II (B.A (Sp), M.A, PGED, M.Ed, M.PHIL)

அப்பால் என்பதன் பொருள்

அப்பால் எனும் சொல் காலத்தை அடிப்படையாகக் கொண்டும், இடத்தை அடிப்படையாகக் கொண்டும் பொருள் தருகின்றது. இவை இரண்டும் காலம், இடம் கடந்து நிற்கின்றது. பிரபல உரையாசிரியர் C.K.S.சுப்பிரமணிய முதலியார் காலத்தாலும் இடத்தாலும் அப்பால் எனும் சொல் முற்பட்டு நிற்கின்றது. என்றார். இவர் அப்பாலும் அடி சாந்தார். புராணத்துக்கு சிறந்த உரை எழுதியவர்.இட எல்லை, கால எல்லை என்கின்ற இரண்டு கருத்துப் பொருள்களை, நாங்கள் எல்லை தொடர்பாக வரையறுக்க முடியும். அதில் அப்பால் என்று வருகின்ற தமிழ்ச் சொல்லுக்கு இடம் என்கின்ற கருத்தைக் கொடுக்கின்ற பொழுது நாங்கள் சுட்டுகின்ற பிரதேசத்தைக் கடந்து நிற்கின்ற, அல்லது அதைத் தாண்டியிருக்கின்ற இடத்தை, நாட்டை, பகுதியை அப்பால் என்பது குறிக்கும். பெரியபுராணத்துக்கு, அப்பாலும் அடிசாந்தார். புராணத்துக்கு உரை செய்யும் பொழுது, பெரிய உரையாசிரியர்கள் இந்த அப்பால் என்கின்ற சொல்லை, சேக்கிழார் வாழ்ந்த தமிழ்நாட்டில் இருந்த நாயன்மார்களை பிரதேசத்துக்கு அப்பால் இருந்த அடியார்கள் என்று பொருள் கண்டிருக்கின்றார்கள்.

அதே போல இதற்குக் காலம் என்கின்ற பொருளை அமைத்துப் பார்க்கின்ற போது, ஒரு குறிப்பிட்ட காலத்தை நாங்கள் சுட்டினால் அதைக் கடந்து அதற்கு முன்னே உள்ள காலத்தைச் சுட்டுவதாக இச்சொற்பதம் குறிக்கின்றது. அதே அப்பாலும் அடிசார்ந்தார் புராணத்திற்கு உரை காணுகின்ற பொழுது சேக்கிழார் சுட்டிய நாயன்மார்கள் வாழ்ந்த காலத்தைக் கடந்து வேறு வேறு காலங்களில் இருந்த அடியவர்களையும் உள்ளடக்க வேண்டும் என்பதற்காகவே அப்பால் என்ற சொல்லைப் பயன்படுத்தி இருப்பதாக உரையாசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். எனவே அப்பால் என்கின்ற சொல்லானது ஒரு குறித்த இடத்தைக் கடந்து நிற்கின்ற பிரதேசத்தையும் ஒரு குறிப்பிட்ட காலத்தைத் தாண்டி அதற்கு முன்னே இருக்கின்ற காலத்தையும் காட்டி இரண்டு சொற்களைச் சுட்டுகின்ற ஒரு சொல்லாகக் காணப்படுகின்றது. எனவே, ஒன்றை வைத்துக் கொண்டே இன்னொன்றுக்கு அப்பால் எனும் பதத்தினைப் பாவிக்கமுடியும் என்பது திண்ணம்.

இந்த வகையில் நோக்கும் போது உலகநாச்சி மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தினை உருவாக்கி வாழ்வமைத்தார். ஆனால், இவர் வருகைக்கு முன்னரே அம்பிலாந்துறைக் கிராமம் இருந்திருக்கின்றது என்பதனை ஐயந்தெளிவுற நோக்க முடிகின்றது. அம்பிலாந்துறைக் கிராமம் மட்டக்களப்பு வரலாற்றோடு ஆரம்பமாகியிருக்கின்றது. இதன் வரலாற்றுச் சிறப்பினை அறிந்த குணசிங்க மன்னன் "அம்பிலாந்துறைக்கு அப்பால் காடு சூழ்ந்து குடிவாழ் வற்றிருந்த மண்ணேரிமுனைப் பகுதியினை உலகநாச்சிக்கு கொடுத்தான்".

எனவே அம்பிளாந்துறைக்கும், மண்ணேரிமுனைக்கும் ( மண்முனை ) இடையே கிராமங்கள் இருக்கவில்லை என்ற நிலையினையும் இப்பதம் விளக்குகின்றது போல் அமைகின்றது. அவ்வாறு இருந்திருந்தால் அங்கிருந்த கிராமத்தின் பெயர் சுட்டப்பட்டிருக்கும். எனவே, சந்தேகத்துக்கு இடமின்றி நிருபிக்க முடிகின்றது. அம்பிலாந்துறைக் கிராமம் ஆதிக்குடிகள் வாழ்ந்து வந்த பழம்பதி என்பதும் அது உலகநாச்சி வருகைக்கு முன்பிருந்தே இருக்கின்றது என்பதும் தெளிவு.

அம்பிலாந்துறை எனும் பெயர்வரக் காரணம்

அம்பிலாந்துறை எனும் பெயர் பல காரணங்களின் அடிப்படையில் எழுந்தது.

01.அம்பிளா எனும் மரம் இங்குள்ள துறையில் காணப்பட்டமை.

02.செட்டிகள் தமது வர்த்தகத்தினை மேற்கொள்வதற்காக அம்பிளாந்துறையில் உள்ள அம்பலத்தில் தங்கி இருந்தமை.

03.இராசாக்கள் கூடும் இடம் அம்பலமாக இருந்தமை.(அம்பலம் என்பது தத்துவப் பொருளைச் சுட்டுகின்றது)

04.இங்குள்ள துறையினால் அக்கரைக்குச் செல்வதற்கு அம்பி எனும் மரக் கலத்தைப் பயன்படுத்தியமை.

05. தென்னிந்தியாவில் படைத் தொழில் செய்யும் அம்பலக்காரர் இங்கு குடியேறியமை.

06. இந்தியாவில் அம்பிலாலந்துறையிலிருந்து வந்த வன்னியர்கள் இங்கு குடியேறிமை.

போன்ற காரணங்கள் கூறப்படுகின்றன. இவற்றுக்கு அப்பால் நோக்கும் போது அம்பு இல்லா துறை என விரிகின்றது. அதாவது, அம்பு இல்லாமல் வீரர்கள் போர் செய்திருக்கின்றமையினை இது உணர்த்துகின்றது. வில், அம்பு வருகைக்கு முந்திய காலத்தைச் சுட்டுவதனால் இந்தக் கிராமம் பூர்வமானது என்பதனை மேலும் ஒருபடி சிந்திக்கச் செய்கின்றது. ஆதியில் வேடர்கள்தான் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருக்கின்றனர். வேடர்களுக்கும் அம்பிலாந்துறையில் உள்ளவர்களுக்கும் சண்டை இடம்பெற்றிருக்கலாம். அந்தப் பராக்கிராமத்தின் வெளிப்பாடு அம்பிலாந்துறை எனும் பெயரினை சுட்டுவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். எனவே, பராக்கிரமத்தின் வெளிப்பாடாகவும் இப்பெயர் அமைவது சிறப்புக்குரியதாகும்.

அம்பிலாந்துறை எனும் சொல்லில் உள்ள " ல " என்பது இன்று " ள " என எழுதி, உச்சரிக்கப்படுகின்றது. அம்பிலாந்துறை என்றுதான் இந்தியாவில் உள்ள இடப் பெயர்களில் வருகின்றன. இது இவ்வாறிருக்க திருச்சியில் உள்ள சிவத்தலம் ஒன்று அம்பிலாலந்துறையில் உள்ளது.

இத்தலத்தில் உறையும் சிவனை மணிவாசகர் " அம்பிலாலந்துறையானே " எனப் பாடுகின்றார். மேலும் அறுமக்குட்டிப்போடி அம்பிலாலந்துறையில் (திருச்சிநகர்) சென்று கற்ற குழுவை அழைத்து வந்து அம்பிலாலந்துறையிலே (அம்பிலாந்துறை) வைத்து கல்வி புகட்டியிருக்கின்றான் என போடிகல்வெட்டுரைக்கும். எனவே, அம்பிலாலந்துறை எனும் பெயர் இன்று. அம்பிளாந்துறை என எழுதப்படுகின்றது. அம்பிலாலந்துறை என இப்பெயர் எழுதப்பட்ட காலத்தில் பல சிறப்புக்கள் இருக்கின்றன. வீரர்கள் மட்டுமன்றிச் செல்வர்களும், கல்வியாளர்களும் அக்காலத்திலேயே பிரபல்யமாக இருந்திருக்கின்றனர். இப்பெயர் சிவதலத்துக்கும் உரியதாக இருப்பதனால் அம்பிலாலந்துறை என்று எழுதப்பட வேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் கொண்டுவருகின்றது. எனவே, அம்பிலாலந்துறை பண்டைய தமிழகத் தொடர்பை எடுத்துக் காட்டுவதோடு அங்கிருந்து வந்து இங்கு குடியேறிய மக்களால்தான் அம்பிலாலந்துறை எனப் பெயர் இடப்பட்டிருக்க வேண்டும் என்பதனையும் இத்தகைய ஆதாரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

"அம்பிளா" என்னும் அடிச்சொல் பொருள் கொண்டதாக அமையவில்லை. " அம்பிலா " என்பதில் வரும் " ல "கரம் பொருளுடையது. இந்த லகரத்தைக் கொண்டு பெயர் அமைவது இன்னும் சிறப்பாக அமையும். அவற்றிலும் சிறப்பாக அமையும் " அம்பிலாலந்துறை" என்று உச்சரிக்கப்படுவதிலாகும். எனவே, அம்பிலாந்துறை எனும் பெயர் இந்தியாவிற்கும் அம்பிலாந்துறைக்கும் இடையே உள்ள தொடர்பை வெளிப்படுத்தி நிற்பதோடு பூர்வீகத்தையும் சுட்டிக்காட்டுகின்றது.

**வன்னிமை**

இலங்கை வரலாற்றிலும் நிருவாக முறையிலும், வன்னிமை ஆங்கிலேயர் காலம்வரை சிறப்பிடம் பெற்றிருந்தது. பரம்பரை வன்னியர்கள் எனும் பாரம்பரிய நிலையினை ஆங்கிலேயர் சம்பளம் பெறும் வன்னியர்களாக மாற்றியமைத்தனர். தமிழர்களில் பிரதான ஒரு பிரிவு வன்னிமை. இவர்கள் தமிழர்கள் தமிழ் நாட்டில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வடார்க்காடு போன்ற மாவட்டங்களில் செறிந்து வாழ்கின்றனர். இவர்களின் உற்பத்தி பன்முகப்படுத்தப்பட்டது. மத்திய காலத்திலே தமிழகத்து இந்து சமுதாயத்தின் ஓரம்சமாக வன்னியர் திகழ்ந்தனர். வன்னியர் என்பது சேனாதிபதிகளுக்குரிய பட்டமாகும் என்றும், சில நிலப் பகுதிகள் மீது ஆட்சி புரிகின்ற குறுநில மன்னர்களை வன்னியர் என்றும் குறிப்பிடுவது தமிழர் மரபாகும். சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர்களின் காலங்களில் வன்னியர் என்போர் இராணுவ சேவைகளில் ஈடுபட்டிருந்தனர். இத்தகைய வன்னியர்கள் இலங்கை வரலாற்றிலே ஐந்து வன்னிச் சிற்றரசுகளாக விளங்கியிருக்கின்றனர்.

01. திருகோணமலை வன்னிமைகள்
02. மட்டக்களப்பு வன்னிமைகள்
03. அடங்காப்பற்றி வன்னிமைகள்
04. புத்தள வன்னிமைகள்
05. மகா வன்னி

இந்தியாவில் இருந்து வந்த வன்னியர்கள் மட்டக்களப்பினை பூர்வகாலமிருந்து ஆட்சி செய்து வந்துள்ளனர். பெர்ணாஒதேகேறோஸ் என்பவர் எழுதிய கதையில், ஒரே குடும்பத்தின் பிள்ளைகள் மூவர் சம்மாந்துறை, பழுகாமம், ஏறாவூர் எனும் மூன்று வன்னிமைகளையும் ஆட்சி செய்ததாக குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய வன்னியர்கள் பலர் ஆரம்ப காலமிருந்து அம்பிலாந்துறையிலும் வாழ்ந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. அம்பிலாந்துறை தாந்தாமலை வீதி அன்று இராஜ வீதி என்று அழைக்கப்பட்டிருக்கின்றது. வன்னியர்கள் படைத்தளங்களை அடர்ந்த வனப் பகுதிகளிலே அமைத்துள்ளனர். புண்டைய தமிழ் மன்னர்களுக்கும் மட்டக்களப்பு மன்னர்களுக்கும் இடையே உள்ள பூர்வீகத் தொடர்பும் இந்த வீதியினாலேயே இருந்திருக்க வாய்ப்புள்ளது. அதனால் தாந்தாமலைக் கோயிலும் சிறப்புப் பெற்றிருக்க வாய்ப்புள்ளது.

ஆ த ரி ய ரி ல்

வடகிழக்கு இலங்கையிலே வன்னியர்கள் அதிகளவிலான முக்கியத்துவம் பெற்றிருந்தனர். தலைமுறை தலைமுறையிலான வன்னிமைகளின் வெளிப்பாடு கி.பி. 1766ம் ஆண்டு காலத்தில் அறுமக்குட்டிப்போடி அம்பிலாந்துறையில் இருந்து போடி நியமனம் பெற்று, மட்டக்களப்பின் வடபகுதியினை ஆட்சி செலுத்திய காலத்தில் உச்ச நிலையில் இருந்திருக்கின்றது. இவர் அம்பிலாந்துறையில் இருந்த வளவு கிட்டங்கி வளவு என்று இன்றும் அழைக்கப்படுகின்றது. பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் குஞ்சிலயாப்போடி வன்னியனும், அவர் மகன் கதிராமப்போடி வன்னியனும் ஆட்சியில் இருந்தனர். இவர்கைத் தொடர்ந்து கதிரமலை வன்னியனும் ஆட்சி செலுத்தியதாக அறியக்கிடைக்கின்றது. பின்னர் கதிர்காமப்போடி உடையார், தம்பமுத்து உடையார் என்று நிருவாக அலகு இருந்து வந்தது. எனவே அரசியல் ஸ்தீரணத் தன்மை பண்டைய காலமுதன் கொண்டுவரன் முறையாகப் பேணப்பட்டு வந்திருக்கின்றது. எனவே, ஆரம்பகாலமிருந்து வன்னியர்களை அம்பிலாந்துறையில் இருந்து ஆட்சி செலுத்தியிருக்கலாம். போர்த்துக்கேயர் காலத்தில் பின்னடைவான நிலை காணப்பட்டபோது ஒல்லாந்தர் காலத்தில் அறுமக்குட்டிப்போடியுடன் மீண்டும் எழுட்சி பெற்றிருக்கின்றது.

பொதுவாகவே, கலிங்க நிலமைப்போடியான அறுமக்குட்டிப்போடி ஆங்கிலேயருடன் எதிர்த்துப்போர் செய்வதற்கு, அவரிடம் இருந்த தலைமைத்துவமும் வீரமும் முற்போக்குத் தன்மைக்கும் வன்னிய சேனாதிபதிகளுடைய வீரம் காரணமாக இருந்திருக்கின்றன. வன்னியர்களைப் படையாட்சி குலம் எனக் குறிப்பிடுவர். எனவே, வீரம் விளைந்த நிலமாக அம்பிலாந்துறை அன்றும் இருந்திருக்கின்றது. அதற்கு பூர்வமாக இங்கு வீரர்கள் வாழ்ந்ததுதான் காரணம்.

### முதல் கல்வி நிலையம்

அறுமக்குட்டிப்போடி கி.பி 1766ல் போடி நியமனம் பெற்று, மட்டக்களப்பின் வட பகுதியாகிய எருவில் பற்று, போர்முனைப்பற்று, மண்முனைப்பற்று, கோரளைப்பற்று, எனும் பிரிவுகளைத் தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தார். கலிங்க நிலமைப்போடியான இவர், இந்த ஆண்டிலே தமிழகத்தின் திருச்சி

நகரிலுள்ள அம்பிலாலந்துறைக்குச் சென்று அங்கு கல்வி புகட்டுவதில் திறமையான செம்பன் முதலிய ஐந்து ஆசிரியர்களுடன், சம்புநாதனை தலைமையாசிரியராக அழைத்து வந்து அம்பிலாந்துறையில் கல்வி புகட்டச் செய்தான். இங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கு அன்ன சத்திரமைத்து உணவும் வழங்கினான் என்பதனைப் போடிகல்வெட்டு குறிப்பிடுகின்றது. அம்பிலாந்துறைக் கல்விப்பாரம்பரியம் பழமையானது இவருடைய முயற்சிக்கு முன்னரும் கல்விச்சாலைகள் இங்கு இருந்திருக்கலாம். இந்தக்கல்வியை மேலும் வினைத்திறன் உடையதாக மாற்றுவதற்கு அறுமக்குட்டிப்போடி இத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பிருந்திருக்கின்றது. எனினும் அம்பிலாந்துறை படசாலை வரலாறு கி.பி 1766ம் ஆண்டில் ஆரம்பமானது. என்பதற்கு போடி கல்வெட்டு சிறந்த ஆதாரமாகும். எனவே, அம்பிலாந்துறை பாடசாலையின் ஆரம்பம் 1766ம் ஆண்டு ஆரம்பமானது என்று எழுதப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்தி நிற்கின்றது.

மட்டக்களப்பு கல்வி வரலாற்றிலும் அம்பிலாந்துறைக் கல்வி வரலாறு முதன்மையானதாகவே உள்ளது. அறுமக்குட்டிபோடி காலத்திற்கு முன்னர் மர நிழல் பள்ளி, திண்ணைப்பள்ளி, எனும் முறையில் குருகுலக்கல்வியினை அடிப்படையாகக் கொண்டு இருந்திருக்கலாம். இந்த கல்வி மரபு வேத உபநிடதங்களில் சிறப்புப்பெற்றிருந்தது.

ஆலய உருவாக்கம்

குடிமக்கள் வாழ்வு பழமையானதாக இருந்தால் வழிபாடும் காலத்தால் முந்தியதுதான். தமிழர்சார்பில் குடியிருப்புக்களும் கோயில்களும் இணைந்தே வாழ்வியல் ஆரம்பிக்கப்பட்டு வந்திருக்கின்றன, மக்கள் ஆரம்பத்தில் உயிருள்ளவற்றையும், உயிரற்றவற்றையும், இயற்கையையும் வணங்கி இருக்கின்றனர். இத்தகைய வணக்கமுறை அம்பிலாந்துறையில் வாழ்ந்த மக்களிடையேயும் இருந்திருக்கலாம்.

இங்குள்ள விநாயகர் வழிபாட்டின் ஆரம்பம் ஆரம்பகால மக்களிடையே இருந்திருக்கலாம் கி.பி 1766ம் ஆண்டு காலத்தில் இவ்வாலயம் கட்டப்பட்டதாக ஆலயத்தகவல்கள் மூலம் அறிய முடிகிறது. இந்தக்காலம் அறுமக்குட்டிப்போடியுடைய ஆட்சிக் காலம். இது ஒரு குட்டக்கல் கோயிலாகும். எனினும் இந்தக் கோயில் இடிக்கப்பட்டு தற்போதுள்ள கோயில் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்ட போது கட்டடத்தில் அத்திவாரங்களில் போத்துக்கேயருடைய குற்றிக்காசுகள் காணப்பட்டிருக்கின்றது. இவற்றினைக் கொண்டு நோக்கும் போது பிள்ளையார் ஆலய கட்டிடம் போத்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்றமையினை அறிந்து கொள்ள முடிகின்றது. போர்த்துக்கேயர் இலங்கையினை கி.பி 1505 தொடக்கம் கி.பி 1658 வரை ஆண்டுள்ளனர்.இங்குள்ள மாரியம்மன் ஆலயத்தினை ஆரம்பித்தவர் அறுமக்குட்டிப்போடி . மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது

மாரியம்மன் கோயில் இது என்பர். காலக் கணிப்பின் அடிப்படையில் கி.பி 1775ம் ஆண்டு காலப் பகுதியில் ஆரம்பிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால், கி.பி 1804ம் ஆண்டுகாலத்தில் ஆரம்பிக்கப்படவில்லை என்பது தெளிவு. ஏனென்றால் கி.பி 1803ம் ஆண்டு காலத்திற்கு முன்னர் அறுமக்குட்டிப்போடி ஒல்லாந்த அதிகாரிகளினாலும், பின்னர் ஆங்கிலேய அதிகாரிகளினாலும் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி வந்தது. ஆங்கிலேயருக்கும் அறுமக்குட்டிப்போடியின் படைகளுக்கும் இடையே இடம்பெற்ற சண்டையில் இப்படை ஆங்கிலேயப்படைகளைத் தோற்கடித்து புளியந்தீவுப் பகுதியில் மட்டும் மட்டுப்படுத்தினாலும், தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. இதனால் அறுமக்குட்டிப்போடி பின்வாங்கி கி.பி 1803ம் ஆண்டு கண்டியரசனிடம் சென்றதாக குறிப்பிடப்படுகின்றது.

பாரம்பரியம்

பாரம்பரியமாக அம்பிலாந்துறையில் சமுக நடைமுறைகள் உள்ளன. கோயில்களில், வீடுகளில் நடக்கின்ற நடைமுறைகள் யாவும் இன்றும் அன்றுபோல் பின்பற்றப்பட்டு வருகின்றன. திருமணம், திருமரணம், மற்றும் ஏனைய நிகழ்வுகள் யாவும் மரபை அடிப்படையாகக் கொண்டே நிகழ்கின்றன. கூரைமுடிவைத்தல்,தேசங்கூறுதல்,பாடைகட்டுதல், பிரேரத்தைக் கூறிக் கொடுத்தல், மாரியம்மன் சடங்கு முறைகள், தோரணம் கட்டுதல், உத்தியாக்களுக்குச் செய்தல், சாமிக்குச் செய்தல், போன்ற பல்வேறு செயற்பாடுகள் பாரம்பரியத்தின் வெளிப்பாட்டிலேயே அமையப்பெறுகின்றன. அறுமக்குட்டிப்போடி காலத்தில் டோவிமார், நாவிதர், நாசிவர் என்பவர்கள் குடியேற்றப்பட்டு அவர்களுக்கான நடைமுறைகள் யாவும் வகுத்துக் கொடுக்கப்பட்டன. பாரம்பரியத்தின் வெளிப்பாட்டில் ஓரம்சமாகத் திகழும், நாவிதர்களுக்கு 11 வளவும் 18 ஏக்கர் நெற்காணியும், டோவிமாருக்கு 07 வளவும், நாசிவருக்கு 01 வளவும். கொடுத்திருக்கின்றான். இவர்களை குடிமக்கள் என்றே அழைப்பது வழக்கம். இவர்கள் பாரம்பரியமாக ஊர்த்தலைவர்களின் சொற்படியே சேவை செய்து வருகின்றனர். நாவிதரும் நாசிவரும் 1998ம் ஆண்டு காலம் வரையும் அவர்களுடைய சேவையை சமுகத்திற்குச் செய்தனர். டோவிமார் இன்றும் தங்கள் சேவையினை தொார்ந்து மேற் கொண்டு வருகின்றனர். கொக்கட்டிச்சோலை சிவன் தேருக்கு சீலை கட்டும் பொறுப்பினை நாவிதருக்கும், அத்தேருக்கு தேங்காய்யெண்ணை வைக்கும் பொறுப்பினை டேவிமாருக்கும் அக்காலத்தில் அறுமக்குட்டிக்போடியினால் வகுத்துக் கொடுக்கப்பட்டதாக அறியக்கிடைக்கின்றது. அந்த நடைமுறை இன்றும் இருக்கின்றது. இப்பிரதேசத்தில் இக்கிராமத்தில் இருந்த முத்திறத்தாருக்குமே இத்தகைய பொறுப்புக்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. எனவே, இத்தகைய பாரம்பரிய நடைமுறைகள் பூர்வத்தின் வெளிப்பாட்டினை உணர்த்தி நிற்கின்றது.

இந்தக் கட்டுரையானது ''அம்பிலாந்துறைக்கப்பால் மண்ணோரிமுனை " எனும் சொற்றொடரை ஆராய முற்பட்டதனால் அவற்றுக்கான விளக்கத்தினை தெளிவுபடுத்தவே சில விடயங்களைக் கையாண்டுள்ளேன். அவற்றின்கண் வெளிப்படுத்துவது அம்பிலாந்துறைக் கிராமம் பூர்வமானது என்பதோடு அரசியல், கல்வி, ஆலயம், பாரம்பரியம் என்ற விடயங்களில் முதன்மையானதாகவும், இருந்திருக்கின்றது என்பதுதான் ஆனால், அம்பிலாந்துறையில்பூர்வத்தோடு சம்மந்தப்பட்ட அம்சங்கள் பல இன்னும் உண்டு. அவையெல்லாம் அம்பிலாந்துறை வரலாறு எனும் புத்தகம் பெளிவரும் போது விரிவாக அறிந்து கொள்ள முடியம்.

சான்றுகள்.


1) சிவசண்முகம், பு (2000) மட்டக்களப்பு குகன்குல முக்குகர் வரலாறும் மரபுகளும், விபுலம் வெளியீடு.

2) கமலநாதன், சா.இ (2005)மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், குமரன் புத்தக இல்லம்.





# மாற்றங்கள் வந்ததேனோ!



உலகத்தில் உள்ளது சாதிகள் இரண்டு - இதை
உரைத்தவர் உண்மையை உயிர்ப்பிக்க மறந்து
தெருத்தெருவாக வீதியில் சண்டை - இதை
செப்பினேன் இன்றைய தேவையைக் கண்டு

ஆதியில் வாழ்ந்த மனிதன் - இங்கு
அவரவர் தேவையை நிறைவேற்றிக் கொண்டு
போதிய வாழ்க்கையை வாழ்ந்து - மேலும்
சாதிக்க நினைத்ததை சாதித்துக் கொண்டான்




ஏரிலே எருதினைப் பூட்டி - சிலர்
பாரிலே பயிரிட எடுத்திட்ட முயற்சி
இன்று மாறிப் போய் விட்டது பாரும்
இதை மனிதனே மாற்றினான் மறுக்காது கேளும்

உழுவதும் சூடு மிதிப்பதும் மாடு - இந்த
வழமையை திடீரென மாற்றினோர் யாரு
நெல்லு மூடைகள் ஏற்றிட அன்று - இருந்த
இரண்டு சக்கரம் பூட்டிய வண்டிகள் எங்கே?



கடகங்கள் கைப்பெட்டி எங்கே?
கயிற்றிலே உப்பட்டி கட்டுவார் எங்கே?
தகரங்களால் இப்போ வாளி - இதை
தம்பக்கம் நியாயமாய் கொண்டது நம் சாதி



இனிச் சூடுகள் காண்பது அரிது - நம்
சுற்றத்தார் கூட்டங்கள் கூடுவதரிது
மானிடரான எமக்கு - பழைய
மரபினை மாற்றிட வந்ததேன் விருப்பு

வேலக்காரன் கம்பு என்றும் - நான்கு
விசிறிகள் பூட்டிய பம்பரம் என்றும்
எதைக் கொண்டு காட்டுவீர் நாளை
எமது எதிர்கால சந்ததிக்கு இனி இல்லை வேலை

**க.சிவகுருநாதன்**
முதலைக்குடா

வெட்டு மெசின் என்று ஒன்றும்
வெறுப்பான பெயர் கொண்ட சுனாமியாம் - போலிச்
சட்டங்கள் பலவற்றைப்பேசி - எம்மை
சாதிக்க வருகிறான் வேறு தமிழ் ஜாதி

வெட்டும் சாக்குகள் எங்கே? களவட்டி என்பது எங்கே?
வெட்டு மெசினினால் வெட்டி வெயில் பட முன்னமே வேக்கிலே
கட்டி மட்டுக்கு மட்டான விலையில் - அவன்
மாடாய் உழைத்ததை வாங்குவோர் உண்டு

சாணி எடுப்பவர் யாரு - இப்போ
தரை மெழுகுபவர் யாரு
கேணி வரவையில் நின்று - இன்று
கிட்டிப்புள் அடிப்பவர் யாரு?

கூலி அளந்து கொடுப்பவர் எங்கே - நின்று
குறுக்காலே கதைப்பவர் எங்கே?
பேணி வளர்த்த நம் மரபை - இப்போ
கூனிக் குறுகிடச் செய்தவர் எங்கே

வாரடி என்று ஓர் கூட்டம்
மறுபக்கம் கிட்டிப்புள் ஆட்டம்
மூத்தோர் தேடி வளர்த்ததை மாற்றி - இன்று
தெருவெல்லாம் சிறுவர்கள் கிரிக்கட்டில் நாட்டம்

தன்மானம் நிறைந்த மனிதன் - இந்த
மரபெல்லாம் மாற்றிட மயங்கியதேனோ?
புதையுண்டு போன நம் மரபை
புரட்டி எடுத்துப் புதுயுகம் நாட்டு

கலை என்ற சொல்லோடு புதுக் கலை வந்து சேர
மரபுக் கலை இன்று மண்ணோடு புதையுண்டு போக
புதுயுகம் என்ற சொல்லுக்குள் வீழ்ந்து
புதுமையால் பழமையை மாற்றினான் மனிதன்




இடமிருந்து வலமாக

**அமர்ந்திருப்போர்** : திரு.V. செல்வராசா, திரு.S.சசிகுமார், திருமதி.S.வில்வரத்னம் (பிரதேச செயலாளர்), திரு.P.ஶ்ரீஸ்கந்தசெயா, திரு.S.புவனேஸ்வரன் ,

**நிற்போர்** : திரு.E.சாந்தலிங்கம் , திரு.M.பொன்னம்பலம், திரு.S.கருணாநிதி, திரு.K. சுவேந்திரன், திருமதி.Z.குகானந்தன் , திரு.P.தேவானந்தம், செல்வி.P.தேவகி, திரு.S.சிவபாதசுந்தரம், திருமதி.J.ஜெயச்சந்திரன், திரு.K.சிவகுருநாதன், திருமதி.P.தவராஜா, திரு.S.உதயகுமார், திருமதி.N.ரமேஸ், திரு.P.சுரேஸ்காந்தா, திரு.M.அருந்தவநாதன், திரு.K.மதியழகன், திரு.M.கருணாநிதி, திரு.S.ஜீவிதன்.

# எழில் மிக்க மண்முனை தென் மேற்கு

வாவி மகளின் ஓசை அடங்கி
மீன்பாடும் நாட்டின் குணதிசையில்
சிறப்புடன் விளங்குதையா எங்கள்
மணியான மண்முனை தென் மேற்கு.

கல்லான மாடு புல் உண்ட இடமையா
பக்தரின் குறைகளை குறைக்கின்ற தலமையா
எங்கள் சோலை நாதன் உறை கொள்ளும்
மண்முனை தென்மேற்கு எங்கள் உயிர் ஐயா

அக்கினியில் தாண்டவம் ஆடும் எங்கள்
அரும் பொருளின் துணையவளின்
இடமையா அரசையூர் எழில் மிக்க
பழம் பதியையா

எழுதாமறையை மூச்சாகக் கொண்டு
இயங்கும் எங்கள் உறவுகள்
அகிலத்தின் அச்சாணிகள்
அடித்தளமாய் உள்ளது எங்கள் மண்முனைதென்மேற்கு

வெற்கொண்டவேங்கையின் அக்கினியால்
மிளிர்கின்றது எங்கள் பழம் பதி
ஒளி கொண்டு புறப்படுவோம்
எங்கள் மண்முனையை நெறியாற்ற !

குமரன் கொஞ்சி விளையாடும்
குறுந்த மணல் நிழலில்
கொஞ்சம் இளம் தென்றல் வீசிவரும்
இறையவனின் ஆசிக்கு.

ஆற்றலை ஆதரிக்கும் அரியவகை
அற்புதங்களும் இடம் பெற்ற
எங்கள் இறைநேச புரம்
மண்முனை தென் மேற்கு....

**திருச்செல்வம் சிந்துஜன்**
மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா ம.வி

# மட்டக்களப்பு படுவான்கரை சமூகத்தினரின் மரபு வழியான திருமணச் சடங்குகளும் வழமைகளும்







மட்டக்களப்பின் படுவான்கரைப் பிரதேசம் பல சமுதாய அமைப்புக்களையும், தனித்துவமான கலாசார பண்பாட்டம்சங்களையும் கொண்ட ஓர் அழகிய பகுதியாகும். இங்கு நடைபெறும் வாழ்வியல் சடங்குகளுள் முதன்மையான திருமணத்தின் தன்மைகளையும், கூறுகளையும் பற்றிய பொதுவான ஓர் அறிமுகப் புரிதலை வாசகர்களுக்கு ஏற்படுத்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

உண்மையில் இங்குள்ள திருமண நடைமுறைகள் ஏனைய இடங்களைப் போலவே பொதுவான தன்மைகளைக் கொண்டிருக்கின்றன எனக் கூறிவிட முடியாது. சிற்சில தனித்துவமான வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. திருமண சம்பந்தம் என்பது பெற்றோர்கள் தமக்குள் பேசுவதன் மூலமும் ஆணும், பெண்ணும் காதல் செய்வதன் மூலமும் பொதுவாக இங்கு இடம்பெறினும் சாணைக்குறி இடுவதன் மூலம் செய்யப்படும், திருமணம் இங்கு தனித்துவமானது. அதாவது குழந்தைகளின் உபயோகத்திற்கு பயன்படும் துணியான சாணைத் துணியை குறிப்பிட்ட குழந்தைகளின் வயிற்றில் இட்டு இக்குழந்தை எனக்கு மருமகன் அல்லது மருமகள் என குழந்தைப் பருவத்தில் சம்பந்தம் செய்வதாகும். இம்முறை இன்று வழக்கிழந்து செல்வதனைக் காணமுடிகின்றது.

திருமண சம்பந்தத்தின் பின்பு பொருத்தம் பார்க்கும் வழக்கம் ஏனைய பிரதேசத்தைப் போன்றே இங்கும் நடைபெறுகிறது. இது சோதிடப் பொருத்தம் என அழைக்கப்படுகிறது. ஆனால் பொருத்தமின்மையினால் மணமக்கள் பாதிப்படையும் தன்மை பிற தேசங்களைப் போல இங்கு அதிகம் இல்லை என்றே கூறலாம். எனினும் , இவ்வழமை தவறாமல் மக்களால் மேற்கொள்ளப்படுகிறது. திருமணத்தின் முன்பே இரு குடும்பத்தாரும் ஒன்று கூடிப் பேசுவர். இதன் போது பெண் வீட்டாரே ஆண் வீட்டிற்குச் செல்வர்.மங்கலகரமான பாக்கு, பழம், வெற்றிலை என்பன இதன்போது எடுத்துச் செல்லப்படுவதுண்டு. இப் பேச்சுவார்த்தையில் பிரதான விடயமாக இருப்பது சீதனமாகும். சீதனம் இச்சந்தர்ப்பத்தில் பேசித் தீர்மானிக்கப்படும். பெண் வீட்டாரே ஆணுக்கு வீடு, காணி, நகை, பணம் போன்ற சீதனப் பொருட்களை வழங்குவதாக வாக்களிப்பர்.

திருமணப் பேச்சின் போது பெண் வீட்டார் கொண்டு செல்லும் "கொழுக்கட்டைப் பெட்டி" என்பது இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு விடயம். அப்பெட்டியினுள் ஒரு பெரிய கொழுக்கட்டை செய்து வைக்கப்படும். அது "மாப்பிள்ளைக் கொழுக்கட்டை" எனப்படும். இக் கொழுக்கட்டையினுள் தங்க மோதிரம் ஒன்றும், கௌரவப் பொருளாக வைக்கும் வழமை உண்டு. ஆண் வீட்டார் இப்பெட்டிகளை மீண்டும் கொண்டு செல்லும் போது தாமும் பல வகையான உணவுப் பொருட்களை இட்டு கௌரவமாக வழங்குவர்.

திருமணத்திற்கு முன்னர் தாலிக்கு பொன்னுருக்கும் நிகழ்வு நடைபெறும். இது மாப்பிள்ளை வீட்டில் இடம்பெறும். இது விஷ்வ கரும குலத்தை (தட்டார்) சேர்ந்த ஒருவரால்

**திருமதி. லெஸ்சியா சுபராஜ்**
பிரதேச செயலகம், ம.தெ.மே

உருக்கப்படும். திருமணத்திற்கு தேவையான வேறு அணிகலன்களும், பொருட்களும் சுபமுகூர்த்த வேளையில் வாங்கப்படும்.

திருமண அழைப்பு இங்கு விஷேடமானது. சமூகக் கூட்டுணர்வு இச்சந்தர்ப்பத்திலே அதிகம் இடம்பெறும். நீண்ட காலமாக ஒருவருக்கொருவர் முரண்பட்டிருப்போர் கூட இந் நிகழ்வின் மூலம் மீண்டும் இணைகின்றனர். வீடு, வீடாகச் சென்று திருமண அழைப்பை தெரிவிப்பது மாற்றமடையாத வழமையாக உள்ளது.

திருமண நாளன்று பால் தப்புதல் ஆரம்ப நிகழ்வாக இருக்கும். மணமகளின் தலையில் மணமகனின் சகோதரியும், மணமகனின் தலையில் மணமகளின் சகோதரனும் பால் தப்புவது வழமை. இவர்களைத் தொடர்ந்து உறவினர்கள் பால் தப்புவர். இந்நிகழ்வு அவரவர் வீட்டில் இடம்பெறும்.

இதன் பின்பு மணநீராட்டு வைபவம் இடம்பெறும். இல்லத்தரசிகள் நீர் கொண்டு வருவர். இதன் போது " மேற்கட்டி " பிடித்து மேளவாத்தியங்கள், குரவை என்பன ஒலிக்கப்படும். தாம்பூலத் தட்டுடன் சீப்பு, கண்ணாடி, வாசனைப் பொருட்கள் என்பன மணமகனுக்கு நீராட்டக் கொண்டு செல்வர்.

மண நீராட்டு முடிந்த பின்பு மணமகளின் சகோதரர் மாப்பிள்ளைத் தோழனாக மணமகனை அழைத்து வர மணமகன் வீட்டிற்கு செல்வார். மணமகன் திருமணத்திற்காகச் செல்லும் போது தாம்பூலம், கூறை, விளக்கு, தாலிப்பெட்டி, பணப்பெட்டி, பண்டம் நிறை பெட்டி என்பன கொண்டு செல்வர். இதன் போது மேற்கட்டி பிடித்துச் செல்வர். தாலிப்பெட்டியை மணமகனின் சகோதரி ( சுமங்கலி ) கொண்டு செல்வார். மணமகனுக்கு மணமகளின் சகோதரன் குடை பிடித்துச் செல்வார்.


மணமகளின் வீட்டை அடைந்ததும், தேங்காய் உடைத்து மாலை அணிவித்து வரவேற்பர். இதனை பெண் குடும்பத் தலைவர் அல்லது ஆண்மகன் செய்வார். மணமகன் வீட்டாரால் கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் கைமாறப்படும். மணமகனின் பெற்றோர் மரியாதையுடன் வரவேற்கப்பட்டு வெள்ளைத்துணியில் அமரச் செய்வது இங்குள்ள வழக்கம்.மணமகனின் பாதங்கள் மணமகளின் சகோதரன் அல்லது சகோதரியால் கழுவப்படும். பின் மணவறையில் உள்ள வெள்ளைச் சீலையினால் விரிக்கப்பட்ட பலகையின் மேல் மணமகன் நிற்பார். மணமகள் தாய், தந்தை, தோழியரால் அழைத்து வரப்பட்டு மணமகனின் வலது புறத்தில் நிறுத்தப்படுவார். இதன்போது முதல் ஆராத்தி எடுக்கப்படும். ஆராத்தி எடுத்ததும், மணமகள் சென்று மணமகன் வீட்டாரால் கொடுக்கப்பட்ட கூறையை உடுத்தி வருவார். பின் இருவர் கரங்களையும் மணமகளது தந்தை இணைத்து வைப்பார். அதன் போது மணமகளின் தாய் பூவும், நீரும் சேர்ந்த நீரை வார்த்து மணமகளை தாரை வார்த்துக் கொடுப்பார்.

பின்பு மணமகளின் கழுத்தில் தாலி அணிவிக்கப்படும். இவ்வேளை நெல், அறுகு, வெண்மலர் ஆகியவை கலந்து ஆசிர்வாதம் கூறித் தூவப்படும். பின் மீண்டும் மணமக்களுக்கு ஆராத்தி எடுக்கப்படும். இதன் பின் வழிபாட்டறைக்கு மணமக்கள் அழைத்துச் செல்லப்பட்டு, கும்பம், கண்ணாடி, என்பவற்றைப் பார்க்க வைத்து வழிபாடாற்றி வெள்ளை விரிக்கப்பட்ட பாயின் மீது வடக்கு அல்லது கிழக்கு நோக்கி அமர்த்துவர்.

பின்பு மதுபருக்கம், கலத்தில் போடுதல், விருந்துபசாரம் என்பன இடம்பெறும். மணமகனின் பெற்றோர் மணமகளின் வீட்டில் அன்றிரவு தங்குவது வழமை. மூன்று நாட்களின் பின்பு மணமகனின் வீட்டிற்கு மணமக்களை அழைத்துச் செல்வர். இது கால் மாறிப் போதல் எனப்படும். அங்கும் ஆராத்தி, விருந்துபசாரம் என்பன இடம்பெறும்.

இவை படுவான்கரைப் பிரதேசத்தில் இடம்பெறும் திருமண நடைமுறைகளும், வழமைகளுமாகும். இவற்றைக் காணும் போது இந்த நடைமுறைகளை உருவாக்கி வைத்த நம் முன்னோர் திருமணத்தினூடாக சமூகக் கூட்டுணர்வை ஏற்படுத்த எத்துணை சிந்தித்துள்ளார்கள் என்பது செவ்வனே புலப்படுகின்றது.

# எமது பிரதேச முதியோர்களும் அவர்களின் வளங்களும்

மூன்று பக்கங்களும் நிலத்தினால் சூழப்பட்டு ஒரு பக்கம் கடலுடன் இணைந்து எம் மண்ணுக்கே பெருமை சேர்க்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனையை மையப்படுத்தி அதற்கு தென்மேற்கே குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய மூவகை நிலங்களுடன் இணைந்து உலகின் பல பாகங்களிலும் வெற்றி முரசொலித்துக் கொண்டிருக்கும் பிரதேசமாக திகழ்வது பட்டிப்பளை பிரதேசமாகும். உலகப்புகழ் பெற்ற திருத்தலங்களான கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், தந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம், பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம் ஆகிய தேசத்துக் கோயில்கள் இம்மண்ணுக்கு பெருமை சேர்ப்பதுடன் இங்குள்ள வயல்வெளிகள், குளங்கள், வாவிகள், ஆறுகள், காடுகள், மலைகள், குன்றுகள் கலை கலாசார பாரம்பரிய மரபுகள் என்பன அழகுபடுத்துகின்றன. அத்துடன் இப்பிரதேசமானது வடக்கே வவுணதீவு, தெற்கே போரதீவுப்பற்று, கிழக்கே மண்முனை வாவி, மேற்கே அம்பாறை மாவட்டம் ஆகிய பிரதேசங்களை எல்லைகளாகக் கொண்டுள்ளதுடன், உயிரினங்களின் ஜீவனோபாயத்திற்கான அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்டு புவியியல் ரீதியாக பெருமை சேர்க்கும் ஒரு பிரதேசமாக எமது பட்டிப்பளை பிரதேசம் திகழ்வது இப்பிரதேச மக்கள் பெருமிதம் அடையும் ஒரு விடயமாகும்.

மாவட்டத்தில் தன்னிகரற்று விளங்கும் எமது பிரதேசம் அரிய பல வளங்களை தன்னகத்தே கொண்டு காணப்படுகிறது. அதில் எமது முதியோர்களிடம் காணப்படும் பல வளங்களைக் குறிப்பிடலாம். எமது நாட்டுக்காக, மாவட்டத்திற்காக கிராமத்திற்காக குடும்பத்திற்காக உழைத்து களைத்து சழைத்து தற்போது ஓய்வில் இருப்பவர்கள் எம் முதியோர்கள். இவர்களில் சிலர் சிறந்த பாதுகாப்புக்களுக்கு மத்தியிலும் பலர் அநாதரவற்ற நிலையிலும் காணப்படுவது இன்றைய சமூகத்தின் நிலைப்பாடாகும். எமது பிரதேசத்திற்கே உரித்தானதும் தனித்துவமானதுமான கலை கலாசார பாரம்பரிய விழுமியங்களையும், பொருளாதார நடைமுறைகளையும் தொன்றுதொட்டு பேணிப்பாதுகாத்து வந்தவர்கள் எமது மூதாதையர்களும், முதியோர்களுமே. எங்களுடைய மற்றும் இப்பிரதேசத்தினுடைய பொக்கிஷங்களாக திகழும் முதியோர்களிடம் மருவிச் செல்லும் கலைகள் உள்ளிட்ட பல வளங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

**சமூக பராமரிப்பு நிலையம்**
பிரதேச செயலகம், ம.தெ.மே

இன்றைய எமது இளம் சமுதாயம் முதியோர்களை உரிய முறையில் அணுகி அவர்களிடம் காணப்படும், மருவிச் செல்லும் வளங்களைப் பெற்று எதிர்கால சந்ததியினருக்கு அதனை கையளிப்பதற்கு தயாராகிக் கொள்ள வேண்டும் என்பது எமது கோரிக்கைகளாகும். " முதியோர்கள் தேசிய சொத்துக்கள் " அவர்கள் அனுபவம், அறிவு, திறன் மனப்பாங்கு, தந்திரோபாயம் போன்றவற்றால் சிறந்தவர்கள். அவர்களைக் கைவிடுவதோ அல்லது ஒதுக்கி விடுவதோ அது எமது சந்ததியினரின் ஒளிமயமான எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிவிடும். அவர்களிடமுள்ள வளங்களை எமது இளைஞர் சமுதாயம் பேணிப் பாதுகாப்பதனாலேயே கலை கலாசார பாரம்பரிய மரபுகள் என்றும் மலர்ச்சியுடன் காணப்படும். இல்லையேல் வாடி சருகாகிப் போய்விடும்.

கலை ரீதியாக முதியோர்களிடம் உள்ள வளங்களை உற்றுநோக்குகையில் எமது பிரதேசத்திற்கே உரித்தான வடமோடி, தென்மோடி, நாட்டுக் கூத்துக்கலைகள், அருவி வெட்டுதல், சூடு மிதித்தல் போன்ற கூட்டுவேலைகளை செய்யும் போது பாடப்படும் தனித்துவமான கிராமிய நாட்டார் பாடல்கள், சிறுவர்களை உற்சாகமூட்டி வளர்க்கும் கரகம், பெண்கள் உற்சாகத்துடன் ஆடிப்பாடி கொட்டும் கும்மி, வில்லுப்பாட்டுகள், குரவை, கொம்புமுறி பாடல்கள், கோலாட்டங்கள், வசந்தன், திருமண வீடுகள் மற்றும் மரண வீடுகளில் சம்பிரதாயச் சடங்குகளை பிரதிபலிக்கும் கலைகள் போன்ற இன்னோரன்ன கலைகளுடன் மருவிச் செல்லும் ஒருசில கலைகளும் எமது முதியோர்களிடம் காணப்படுன்றன.

பொருளாதார ரீதியான வளங்களை எடுத்து நோக்குகையில் பிரதானமாக அமைவது விவசாயம்,கால்நடை, வர்த்தகம், சிறுகைத்தொழில், கிராமிய குடிசைக் கைத்தொழில் என்பவற்றை குறிப்பிடலாம். மேற்படி தொழில் ரீதியான சிறந்த அனுபவங்களையும் முதிர்ந்த தேர்ச்சிகளையும் கொண்டிருப்பவர்கள் முதியோர்கள், இன்றும் முதியவர்களாலேயே பாரம்பரிய கிராமிய குடிசைக் கைத்தொழில்களான அகப்பை குத்துதல், அத்தாங்கு வலை பின்னுதல், பெட்டி பாய் இழைத்தல், கரப்பு கட்டுதல், தும்புத்தொழில்களை மேற்கொள்ளல் போன்ற தற்போது மருவிச் செல்லும் தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றது. அதுமட்டுமன்றி காடுகளில் வயல் வெளிகளில் தரித்திருந்து சேனைப் பயிர்ச்செய்கை, வேளாண்மை, கால்நடைகள் வளர்ப்பது போன்ற பொருளாதார நடவடிக்கைகளில் கூடுதலாக ஈடுபடுபவர்களும் முதியோர்களே ஆகும். எனவே அவர்களிடம் காணப்படும் மேற்படி தொழில்கள் தொடர்பான அனுபவங்கள் அறிவு மற்றும் வளங்களை இன்றைய இளம் சமுதாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்.





நாட்டு வைத்தியம் தொடர்பாக பாண்டித்தியம் பெற்ற இவர்கள் விசக்கடி வைத்தியம், சுளுக்கு, எலும்பு முறிவுகள், வயிற்றோட்டம், வாந்திபேதி, பிள்ளைப்பேறு வைத்தியம் (மருத்துவிச்சி) போன்ற வைத்திய முறைகளை மேற்கொள்வதில் சிறப்புத்தேர்ச்சி மிக்கவர்கள். ஆனால் இன்று பெரும்பாலான இடங்களில் இந்த வைத்திய முறைகள் சிறிது சிறிதாக இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன. குறிப்பாக பிள்ளைப்பேறு வைத்தியம் ( மருத்துவிச்சி ) முற்றாக இல்லாமல் போய் விட்டது என்றே கூறலாம். இவ்வாறு பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்த நாட்டு வைத்திய முறைகளை முற்றாக அழிந்து செல்லவிடாது இன்றைய இளம் சமூகம் இவற்றையெல்லாம் கற்று இனிவரும் சமூகத்தினருக்கு அதனை கையளிப்பது இன்றைய தேவையாகும்.

எங்களது கிராமிய குடியிருப்புக்களை எடுத்து நோக்கின் முன்னோர்கள் கிடைத்த அரிய வளங்களைப் பயன்படுத்தி தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்தவர்கள். இது அவர்களுக்கே உரித்தான தனித்துவமான திறமைகள் என்று கூறலாம். உ-ம் பட்டறை கட்டுதல், படல் கட்டுதல், கூரைக்கு இலுக்கு மேய்தல், களிமண் சுவர் வைத்தல், சேனைப்பயிர்களை பாதுகாப்பதற்கு அக்கில் கட்டுதல், பூவல் தோண்டி நீர் பெறுதல் போன்ற சிலவற்றை குறிப்பிடலாம். இதே போன்று இன்னும் பல வளங்களைப் பயன்படுத்தி பாரிய வேலைகளை முன்னெடுத்தவர்கள். ஆனால் அவைகளெல்லாம் தற்போது குறைந்து விட்டன. அதனால் அவர்களிடம் இவ்வாறான வளங்களின் பயன்களை கற்றறிவது எமது தலையாய கடமையாகும்.

உணவுப் பழக்க வழக்கங்களை எடுத்துக் கொண்டால் " நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் " எனும் பழமொழிக்கேற்ப நடந்து கொண்டவர்களே எம் முதியோர்கள் மட்டக்களப்பு மாவட்ட கணக்கெடுப்பின்படி அதிக எண்ணிக்கையான முதியோர்கள் வாழும் பிரதேசமாக எமது பிரதேசம் கணிக்கப்பட்டுள்ளது. இயற்கையோடு ஒத்துப்போன உணவுகளையே விரும்பி உண்டு வந்தமையால் நீண்ட ஆயுள் பெற்று ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றார்கள். முதுமையிலும் இளமைத் தோற்றம் அளிப்பவர்கள் எம் முதியோர்கள். நஞ்சு கலப்படங்களற்ற உணவு வகைகளை உட்கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். ஆனால் தற்போது இவ் உணவுப் பழக்கங்கள் முற்றாக வேறுபட்டு பாரிய நோய்களைத் தோற்றுவிக்கின்றன. இந்த உணவு முறைகளை கைவிட்டு நம் முன்னோர்களின் முறைகளைப் பின்பற்றி சுகதேகிகளாக நீண்ட ஆயுள் பெற்று வாழப்பழகுவது முக்கிய தேவையாகும்.

எமது முதியோர்கள் சமூக வலுவூட்டலை ஏற்படுத்துபவர்கள். சமூகத்திலே பல பாத்திரங்களை ஏற்று நடப்பதன் மூலம் எமது சமூகத்தை ஒரு உயர்ந்த நிலைக்கு உட்படுத்துகின்றார்கள். குறிப்பாக எங்களது சமூக அமைப்புக்களில் ஒரு தலைவராக, ஆலோசகராக, இணைப்பாளராக, கண்காணிப்பாளராக, ஒழுங்கமைப்பாளராக, கட்டுப்படுத்துபவராக, தொடர்பாளராக என பல பாத்திரங்களை ஏற்று செயற்படுகின்றனர். அவர்களிடம் காணப்பட்ட அறிவு, திறன், ஆற்றல், அனுபவம் என்பவை இன்றைய சமூகத்திடம் குறைவாகவே காணப்படுகின்றது. இவர்களின் மூலம் கிராமங்களின் வரலாறு, கோயில்களின் வரலாறு, பண்டைய குளங்களின் வரலாறு, பொதுவான கல்வெட்டுக்கள், ஏடுகள் தொடர்பான அறிவினை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே எமது முதியோர்களிடம் காணப்படுகின்ற அரிய வளங்களை இனங்கண்டு அதனைத் தாமதம் இன்றி நாம் பெற்றுக் கொள்வதுடன் எமது சந்ததியினருக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்பது எவராலும் மறுக்க முடியாத ஒன்றாகும். ஆகவே மேற்படி விடயங்களை வாசித்து அறிந்து கொள்வதன் மூலம் எமது பிரதேசத்தின் அமைவிடம், அதன் வளங்கள், அருமை பெருமைகள் என்பவற்றை தெரிந்து கொள்வதுடன் முதியோர்கள் என்பவர்கள் யார்? அவர்களிடம் காணப்படும் வளங்கள் எவை? அவர்களை எவ்வாறு பின்பற்றுதல் வேண்டும்? அவர்களை அடியொட்டி எதிர்கால சந்ததியினருக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதனை மிகவும் எளிமையாக விளங்கிக் கொள்ள முடியும.

# பட்டிப்பளை பிரதேசத்தில் கூத்து பற்றிய ஒரு நோக்கு

**" மீன்மகள் பாடுகிறாள் வாவி மகள் ஆடுகிறாள்**
**மட்டு நகர் அழகான மேடையம்மா – இங்கு**
**எட்டுத்திசையும் கலையின் வாடையம்மா**

என்ற காசியானந்தனின் கவிவரிகளை நினைவுபடுத்தி மட்டக்களப்பு மாவட்டம் பாரம்பரியக் கலையின் இருப்பிடம். இங்கு வாழ்பவர்கள் இக்கலைகளை சிதைய விடாமல் அன்று தொடக்கம் இன்று வரை பாதுகாத்தே வருகின்றனர். நவீன நாகரிக போக்கினால் இக்கலைகள் மாற்றமடைந்து மருவிச் செல்கின்ற போதிலும் படுவான்கரைப் பிரதேசங்களில் இந்த பாரம்பரியக்கலை வடிவங்கள் பழமை மாறாமல் இன்றும் பயில் நிலையில் உள்ளன. தமிழர்களுக்கு என்று ஒரு தனித்துவமான கலை உள்ளது என்பதை வெளி உலகிற்கு எடுத்துக் காட்டியவர்கள் இங்கு வாழும் மக்களே.



மட்டக்களப்பு நகருக்கே தென்மேற்கு பகுதியில் ஆறுகளால் புடைசூழ்ந்து கொக்கட்டி நகரின் தேர் ஓடும் சிவபூமியும் உழவர்களால் மழை வேண்டி பொங்கல் செய்து மலைக் குன்றில் தாந்தாமலை முருகன் வீற்றிருக்கும் தலமும், இயற்கை அழகு நிரம்ப பெற்ற இடமே பட்டிப்பளை பிரதேசம். இங்கு வாழும் மக்கள் அதிகமானோர் விவசாயத் தொழிலே செய்கின்றனர்.

எடுத்துக் கொண்ட தலைப்புக்கு அமைய கூத்து என்பது " குதி " என்ற சொல்லில் இருந்து தோற்றம் பெற்றதாகக் கொள்ளப்படுகின்றது. உலகியல் வாழ்வை உணர்ச்சியோடு உருவாக்கி நாட்டு மக்களின் பண்பாட்டின் சின்னமாகவும் பொதுமக்களின் சொத்தாகவும் விளங்குவது கூத்தாகும். நாட்டு மக்களின் உள்ளக் கருத்து, குணச்சிறப்பு கலைப்பண்பாடு, வாழ்க்கை முறைமை போன்றவற்றை எடுத்து விளக்குவது இக்கூத்துக்


**இ. குகநாதன்**
முனைக்காடு

கலையே. நம் நாட்டில் பழம் பெரும் கலைகளில் ஒன்றாகவும் தமிழ் மக்களின் பாரம்பரியக் கலையுள் ஒன்றாகவும் இக்கூத்து காணப்படுகின்றது. கூத்து என்பது தமிழர் பண்பாட்டில் ஆட்களை வேடமிட்டு ஒரு கதையை ஆட்டங்கள் மூலமாக பாரம்பரிய முறையில் நிகழ்த்திக் காட்டுவதாகும்.

பிரதேச வாரியாக கூத்தின் நிலை பற்றி நோக்கின் மட்டக்களப்பு மாவட்டத்தில் பழமை பெருவாரியாக பேணப்பட்டு வந்தால் வசந்தன் கூத்து, வடமோடி கூத்து, தென்மோடி கூத்து, பறை மேளக்கூத்து, மகுடிக்கூத்து என்பன காணப்பட்டன. இதில் பட்டிப்பளை பிரதேசத்தில் வசந்தன், வடமோடி, தென்மோடி என்பன இங்கு வாழும் மக்களிடையே அன்று தொடக்கம் இன்று வரையும் சில மாற்றங்களை மேற்கொண்டு பயில் நிலையில் உள்ளன. இப்பிரதேச மக்கள் விவசாயத் தொழிலையே மேற்கொண்டதனால் அதிக ஓய்வு நேரங்கள் காணப்பட்டன. இவ் ஓய்வு நேரங்களில் கூட்டாகச் சேர்ந்து இந்த கூத்துக்களை அளிக்கை செய்தனர்.

முதலாவதாக வசந்தன் கூத்தினை நோக்கும் போது வசந்தன் கூத்து இரண்டு விடயங்களுடன் தொடர்புபடுகின்றது. ஒன்று கொம்புமுறி விளையாட்டு மற்றையது கண்ணகையம்மன் விழா. இது இரண்டிற்கும் வசந்தன் பழக்கப்பட்டு அளிக்கை செய்யப்பட்டது. வசந்தன் கூத்தில் ஆடலும் பாடலும் முக்கியம். கதையமைப்பு இல்லை. பாடல்கள் அந்தத் இடத்திற்கு ஏற்றவாறு கோல் அடித்து ஆடுவது இக்கூத்தின் முக்கிய அம்சமாகும். வசந்தன் கூத்து என அழைக்கப்பட்ட காரணத்தை பொதுமைப்பட்ட ரீதியில் எடுத்து நோக்கின் சித்திரை, வைகாசி போன்ற மாதங்களிலே ஆற்றுகை செய்யப்பட்டது. ஆகவே இக்காலப் பகுதியில் வசந்தன் உருவாக வேண்டும் என்றும் மேலும் இக்கூத்தோடு வசந்தராஜன் தொடர்பு படுவதால் இதற்கு வசந்தன் கூத்து என்று பெயர் வந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

வசந்தன் கூத்து ஏன் ஆற்றுகை செய்யப்படுகிறது இதன் உண்மையான நோக்கம் என்ன? அதிகமாக சிறுவர்கள் ஆடுவதற்கு காரணம் என்ன ? என்று என்னால் தேடப்பட்ட போது, கண்ணகி மதுரையை எரித்து விட்டு ஆவேசத்துடன் வந்தாள் இந்த வழியில் சிறுவர்கள் நின்று கூ..... கூ.... என்று ஆரவாரித்து கத்தி விளையாடினார்கள். சிறுவர்களைக் கண்ட கண்ணகியின் சீற்றம் தணிந்தது. எனவே சிறுவர்களைக் கொண்டு இக்கூத்தினை ஆடும்போது ஊரானது வெப்பம் குறையும், நோய் வராது, வசந்தம் ஏற்படும் என்பதற்காக இக்கூத்து ஆடப்பட்டதாக கூறப்படுகின்றது.

பட்டிப்பளை பிரதேசத்தில் அன்றைய காலத்தில் ஆலய வீதியில் வட்டக்களரி அமைத்து விடிய விடிய ஆடினார்கள். சிறுவர்கள் மட்டுமல்லாமல் பெரியவர்களும் ஆடினார்கள். 1960ம் ஆண்டு காலப்பகுதியில் மகிழடித்தீவு, முனைக்காடு, முதலைக்குடா போன்ற பிரதேசங்களில் இக்கூத்து ஆடப்பட்டது. இதனை அண்ணாவியார் சிந்தாத்துரை, சின்னத்தம்பி – கிருஷ்ணபிள்ளை போன்றோர். ஆடியும் பழக்கியும் உள்ளனர். கொம்புமுறி விளையாட்டு கண்ணகியம்மன் ஆலயத்தின் முன்பு இடம்பெறும். அது நாற்பது நாள் இடம்பெறுவதாகவும் அதில் தேங்காய் அடிக்கும் சிறுவர்களை வீட்டுக்கு அனுப்பாமல் ஆலயத்திலே வைத்து உணவு கொடுப்பர். இன்னிலையில் அவ்விரவுகளிலும் இக்கூத்து ஆடப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி தென்சேரி, வடசேரி இரு சேரிகளினதும் யார் கொம்பு முறிகிறதோ வெற்றி பெற்ற சேரியினர் கொம்பைத் தூக்கி வசந்தன் கூத்தும் ஆடி ஊர் ஊராக சந்தோசப்பட்டு ஆடித் திரிவதாகவும் எம்மால் அறியமுடிகின்றது.

வட்டக்களரியை விட்டு மெல்ல மெல்ல மருவி வசந்தன் காலப்போக்கில் ஆலயங்களில் திருவிழாவின் போது அமைக்கும் படச்சட்ட மேடைக்கு வந்தது. இங்கு விடிய விடிய ஆடப்படாமல் ஒரு வசந்தன் அல்லது இரு வசந்தன் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் ஆடினர். படச்சட்ட மேடையில் 8 தொடக்கம் 12 பேர் ஆடுவர். வட்டக்களரியில் பத்து தொடக்கம் பதினாறு பேர் ஆடுவர். வசந்தன் மொத்தம் பதினெட்டு உள்ளதாகவும் முதலாவதாக பிள்ளையார் வசந்தன் ஆடப்பட்டு அதன் பின்பு மற்றைய வசந்தன் இடம்பெறுவதாக கொள்ளப்படுகின்றது.

வசந்தன் கூத்தின் இன்றைய நிலையைப் பார்க்கும் போது இன்று வசந்தன் கூத்து கலாசாரப் போட்டி நிகழ்ச்சிக்காகவும் ஆலய நிகழ்ச்சிக்காகவும் பாடசாலைகள், மன்றங்கள் போன்றன ஒரு சில இடங்களில் பழக்கிக் கொண்டு இருக்கின்றன. இன்றைய நிலையில் திரு. நல்லதம்பி அவர்கள்தான் முதலைக்குடா, முனைக்காடு போன்ற இடங்களில் பாடசாலை மாணவர்களுக்காக செய்து கொண்டிருக்கின்றார். அது போன்று அரசடித்தீவு, அம்பிளாந்துறை, மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை போன்ற இடங்களிலும் பாடசாலைகளில் பழக்கப்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற பட்டிப்பளை கலை இலக்கிய மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மண்கமழும் மங்கல விழாவில் வசந்தன் கூத்து ஆடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இன்றைய நிலையில் பட்டிப்பளை பிரதேசத்தில் ஒன்பது வசந்தன் கூத்துக்களே பயில் நிலையில் காணப்படுகின்றன.

அவை பிள்ளையார் வசந்தன், களரி வசந்தன், குறத்தி வசந்தன், கடவாக்குயில் வசந்தன், சிங்கி வசந்தன், பள்ளுவசந்தன், முசுத்து வசந்தன், அனுமான் வசந்தன், வேளாண்மை வெட்டு வசந்தன் போன்றன உள்ளதாகவும் கூறப்படுகின்றது. எனவே அனைத்தையும் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பாக உள்ளது.

பட்டிப்பளை பிரதேசத்தில் வாழும் மக்களிடையே மிகவும் முக்கியமானதாகவும் இங்கு வாழும் ஒவ்வொரு மனிதரிடரேயும் தொடர்புபட்டதாகவும் காணப்படுவது வடமோடி, தென்மோடி கூத்தாகும். ஏனைய கூத்துக்களை விட இது பிரபல்யமானது. இக்கூத்துக்கள் 1950களுக்குப் பிறகு அறிஞர்களால் பிரபல்யப்படுத்தப்பட்டன. ஆய்வாளர், அறிஞர், அரசியல்வாதிகள் என பலதரப்பட்டோரின் பார்வை இவற்றின் மீது சென்றது. இதற்கு அவர்கள் சூட்டிய புதிய பெயர் நாட்டுக்கூத்து என்பதாகும். இதில் வரும் நாடு என்பதன் கருத்து கிராமத்தினைக் குறிக்கின்றது. ஆகவே கிராமிய நாடகங்கள் என்றே வருணித்தனர்.

தமிழில் கூத்தை ஆரியக்கூத்து தமிழ்க்கூத்து என்று பிரிக்கின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது. இவையே முறையே வடமோடி, தென்மோடி என்ற வகுப்பைச் சேர்ந்த கூத்துக்களாக மட்டக்களப்பிலே ஆடப்படுகின்றன. ஆரியக்கூத்து வடநாட்டில் இருந்து வந்த கூத்து எனவும் தமிழ்க்கூத்து தென்னாட்டில் இருந்து வந்த கூத்து எனவும் கூறுகின்ற பழக்கம் உண்டு. இவையே முறையே வடமோடி, தென்மோடியாகக் கொள்ளப்படுகின்றது.

இந்த வடமோடி தென்மோடி கூத்துக்களின் அகச்சான்று கொண்டு பார்க்கையில் அவை 17ம் நூற்றாண்டுக்கு பிற்பட்டவை என்றே கொள்ளத் தோன்றுகிறது. மட்டக்களப்பின் பழமை வாய்ந்த நாடகம் என கருதப்படும் அனுருத்திர நாடகத்தினை பதிப்பித்த திரு. வீ. சி. கந்தையா தமது பதிப்புரையில் இந்நூல் 16ம் நூற்றாண்டுக்கு பிற்பட்டவை என்றே கருதுகின்றார். முதன்முதலாக இங்கு வெள்ளாளர், முக்குவர் போன்றோரே தென்மோடி கூத்துக்களை ஆடி பிரபல்யப்படுத்தியதாக கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு வந்த வடமோடி தென்மோடி கூத்து மரபானது பட்டிப்பளை பிரதேச மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்று கிடைக்கின்ற ஓய்வு நேரங்களில் அதிகமான

கூத்துக்களை செய்தனர். ஆரம்பத்தில் குறிப்பாக 1955ம் ஆண்டு காலப்பகுதியில் வெளி இடங்களில் இருந்து வந்த அண்ணாவிமார்களே இங்கு கூத்தினை பழக்கினர். குறிப்பாக புதூர் கிராமத்தைச் சேர்ந்த அம்பட்டன் சீனியர் அண்ணாவியார் அவர்கள் வந்து மயில்வாகனம் சண்டை கூத்து பழக்கியதாகவும் அத்தோடு அவர் அலங்காரரூபன் நாடகம் செய்ததாகவும் அறியமுடிகின்றது. அதுபோன்று கன்னன்குடாவில் இருந்து அதிகமானோர் இங்கு வந்து சகல ஊர்களிலும் கூத்துப் பழகியதாக கூறப்படுகின்றது. இவர்களை பொருத்தம் பேசி அழைத்து வருவதாக கூறுவர். அதாவது இக்கூத்தை அரங்கேற்றும்வரை ஒரு தொகை காசு தருவது என்ற உடன்படிக்கையாகும். அவ்வகையில் அண்ணாவியார் நோன்சர் அண்ணாவியார் துரையப்பா அண்ணாவியார் பாலகப்போடி சின்னையா மானாகன் சம்புப்போடி என பலர் இங்கு வருகைதந்து சகல ஊர்களிலும் கூத்து பழக்கியதாக எம்மால் அறியமுடிகின்றது.

அதற்கு பின்னரே இங்கு வாழ்ந்தவர்கள் கூத்து பழக்கும் நுணுக்க முறைகளை கண்டு கொண்டு தாங்களும் பழக்க ஆரம்பிக்கின்றார்கள். கூத்துக்கள் பழக்கத் தொடங்கினால் கிராமமே மிகவும் சந்தோசமான முறையில் கலகலப்பாக காணப்படும். படிப்பறிவு இல்லாத அன்றைய நிலையில் ஒருவர் பெரும்பாலும் பத்து பனிரெண்டு கூத்துக்களை ஆடியவர்களாக காணப்படுவர். விடிய விடிய ஆடப்படும் கூத்துக்களுக்கு அதிகமான பாடல்கள் காணப்படும் எனவே செவியேறல் மூலமே இவர்கள் இப்பாடல்களை மனனம் பண்ணிக் கொள்வர். மட்டக்களப்பிலே கூத்து உருவான காலத்தில் சிலருக்கு வலக்கால் இடக்கால் தெரியாத நிலை காணப்பட்டாம் எனவே அன்று கூத்துப்பழக்கிய அண்ணாவிமார்கள் வலக்காலுக்கு ஓலையினை கட்டியும் இடக்காலுக்கு சீலைத்துண்டை கட்டியும் ஓலைக்காலை தூக்கி முன்னுக்கு வை சீலைக் காலை பின்னுக்கு வை என்று பழக்கிய ஒரு வரமுறையும் காணப்படுவதாக எம்மால் அறியக் கூடியதாய் உள்ளன.

1960ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் இந்த பிரதேசத்தில் மயில்வாகனம் காற்சட்டை, அலங்காரரூபன், வள்ளியம்மன் நாடகம், பதினாறும் பதினெட்டும், பவளக்கொடி, வாளவீமன், குயவன் நாடகம், ரசிக்கிரவன் தவனிலை என பல்வேறு கூத்துக்கள் ஆடப்பட்டதாக கூறுகின்றனர். அது மட்டுமன்றி கூத்து ஆடுகின்றவர்களை அவர்கள் என்ன பாத்திரத்துக்கு ஆடுகின்றார்களோ அப்பாத்திரபேரை கொண்டே வரமுறையாக அழைக்கும் தன்மையும் காணப்படுகின்றது. கணபதிப்பிள்ளை என்பவர் பவளவல்லி நாடகத்தில் தச்சன் பாத்திரத்திற்க்கு ஆடினார். பின் அவரை தச்சர் என்று கூறுவதும் சூரசங்காரத்தில் ஆடிய முருகேசு என்பவரை சூரன்முருகேசு என்று கூறியதும் காப்பிலிக்கு பாத்திரம் ஏற்று ஆடிய சின்னத்தம்பி என்பரை காப்பிலியர் என்று பெயர் சொல்லும் முனிப்பரிப்போடி, வீரபாகு வெள்ளையர், தலையாரி கேதாரம் என பல்வேறு பாத்திரங்களின் பெயர்களைக் கொண்டு அழைக்குமுறை இப்பிரதேச மக்களிடையே காணப்படுகின்றது.

வட்டக்களரியில் விடியவிடிய ஆடப்படுகின்ற இக்கூத்தானது நீண்ட நாள் பழகி பின் சட்டம் கொடுத்து சலங்கை கட்டி அடுக்குப் பார்த்து பின் அரங்கேற்றம் செய்யப்படும். முனைக்காட்டிலே 1956ம் ஆண்டு ஆடிய சூரசம்மாரம் எனும் கூத்தானது. மூன்று வருடங்கள் பழக்கியதாகவும் அதன் பின்னரே இது அரங்கேற்றப்பட்டதாகவும் கொள்ளப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் அடுக்க பார்த்து முடிந்ததும் இந்த நாளில் கூத்தினை அரங்கேற்றம் செய்வதாக தீர்மானித்த பின் கூத்தில் ஆடுபவர்கள் வீடு வீடாய் சென்று வட்டா வைத்து தான் இன்ன பாத்திரமாக ஆடுவதாகவும் எனவே தங்களை வரும்படியும் அழைப்பார் எனவே அவர்கள் கூத்து அரங்கேற்றும் அன்று ஆடும் போது ஆடுபவர்களுக்கு

சால்வை அணிவித்து கொடிச்சீலைமாலை போட்டு செல்வதாகவும் பின் துண்டுப்பிரசுரம் அதனை காட்டு அடித்து கொடுப்பதாக கூறுவர். அழைப்பிதழ் கொடுத்தால் அவர்களுக்கு காசுமாலை அல்லது கடித உறைக்குள் காசு வைத்து கொடுப்பதாகவும் இன்று அது மருவிப் போய் விட்டதாகவும் எம்மால் அறியமுடிகின்றது.

பட்டிப்பளை பிரதேசத்தில் கூத்து அரங்கேற்றம் அன்றிரவு இடம்பெற்று முடிந்ததும் அந்த உடை ஒப்பனையுடன் காலை நேரம் அந்த கிராமத்தில் இருக்கின்ற போடிமார்கள் பணம் படைத்தோர் கூத்து ஆடியவர் வீடு, அண்ணாவியார் வீடு போன்ற இடங்களுக்கு சென்று ஒரு சிறுகட்டத்தை ஆடுவதாகவும் அவர்கள் பணம் கொடுத்து கௌரவிப்பதாகவும் ஒரு பழக்க வழக்கம் காணப்பட்டது. வட்டக்களரியில் ஆடப்பட்ட பெரும்பாலன கூத்துக்கள் புராண இதிகாச கதைகளை மையப்படுத்தியதாக காணப்படும். படிப்பு அறிவு இல்லாத ஒருவர் இந்த கூத்தின் மூலம் அனைத்துக் கதைகளையும் கற்று ஒன்றன்பின் ஒன்றாக சொல்லும் தன்மைக்கு இக்கூத்துக்கள் இங்கு வாழும் மக்களை வழிஅமைத்து இருக்கின்றது.

இக்கூத்துக்களை ஆடுபவர்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு சிறந்த முறையில் ஆடுவர். கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் ஆலயத்திலே பகாசூரனுக்கு ஆடிய சிவலிங்கம் என்பவர் உயிரிழந்ததாகவும் அறியமுடிகின்றது. இவ்வாறு அன்றைய நிலையில் வடமோடி, தென்மோடி கூத்து மிகவும் பெறுமதி வாய்ந்ததாக அமைந்தது.

வடமோடி தென்மோடி கூத்தின் இன்றைய நிலையில் பார்க்கும்போது வட்டக்களரியை படிப்படியாக விட்டு படச்சட்ட மேடைக்கு வந்து விட்டது. ஒரு சில இடங்களில் வட்டக்களரிகூத்து மிளிர்கின்ற போதிலும் ஆரம்ப நிலையில் இருந்து மருவி விட்டது. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மன்றங்கள் போன்றவைகளே இன்று கூத்துக்களை அளிக்கை செய்கின்றன. விடியவிடிய ஆடப்பட்டவை ஓர் இரு மணித்தியாலத்திற்குள் குறைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் பெண் பாத்திரங்களுக்கு ஆண்களே வேடமிட்டு ஆடுவர். ஆனால் இன்று பெண்களுக்கு பெண்கள் ஆடுகின்ற நிலை காணப்படுகின்றது. நடியர்கள் கைகளில் வைத்திருக்கும் பொருட்கள் தொடக்கம் உடை, ஒப்பனை, அணிகின்ற சலங்கை ஆடல்முறமை என பல்வேறு ரீதியாக மாற்றம் பெற்றுள்ளது.

என்னால் எழுதப்பட்ட இந்த பட்டிப்பளை பிரதேசத்தில் கூத்து பற்றி ஒரு நோக்கு எனும் கட்டுரையின் தொகுப்பினை நோக்குமிடத்து அன்றைய நிலையில் எமது பாரம்பரியக் கலைகள் மிகவும் அழகான பிரகாசித்து ஆனால் இன்று படிப்படியாக மருவிய போகுகின்ற. எம்மண்ணின் சொத்து அழிகின்றது ஆகவே எமது சொத்தை அழியவிடாமல் அன்றைய பெரியோர்களால் பாதுகாக்கப்பட்டு வளர்த்த கலையை அழியவிடாமல் உயிர்ப்பிப்போமாக.

" கலைஞனாக இரு அல்ல கலை ரசிகனாய் இரு "

# விளைமண்

காலத்தால் முந்திய மூத்த தமிழ் அன்னை மொழி
மண் அகரம் விண்ணிற்க வீறு நடை கொண்டு
ஞாலத்தில் நாமறியாப் புகழ் நிலை நிற்க
வீரத்திற்கு பெயர் போன தேசமிது.

வாவி மகள் வளைந்து வாரி ஒலி கொடுக்க
பேராற்றல் தளை கொண்ட சாலைகள் நிமிர்ந்து நிற்க
நெல் வயலோடு தேனும் பாலும் செழிப்புடன் சுவை தரும்
கனிகளுடன் மலையடிவாரம் கொண்ட மண் இது.

மாசற்றார் மன மகிழ்வுடன்
கொஞ்சும் அன்னை குடி மக்கள் வாழ் நிலம்
இன் முகம் இல்லையொணாது இன் மொழி கூற
பண்பாட்டுடையணிந்து தாயவள்கள் உதிமண்

உதயமுன் ஒளி பெற்று விழித்தெழும்பி
காலைக்கடன் கனிவான கடவுள் வணக்கத்துடன்
நிலை நிற்க. உணவளித்து கூடி மகிழ திடல் தந்து
பாடிப்பறந்த வண்டினத்தின் வாழ்விடம்.

விளையாட்டுக்காய் தீர்க்க தரிசனம் விடை காட்டி
உள்ளத்தில் ஒளி பரப்பி ஒய்யாரமாய் நிற்க
வஞ்சகம் சீர்குலைய வளர்கல்வி வளர்ந்து நிற்க
வாழ்க தமிழ் என்று குறை தீர்க்கும் கல்விமான்கள்.

வீரத் தமிழ்தாய் உதித்து தடையகற்றி
பேரிடிக்கு முகம் கொண்டு மான உறவுக்காய்
வீரத்தை வேட்டையாடி வாகை சூடிய பரமர்கள்
விளைகின்ற பரலோகம் இது.



தாய்சேய் உறவறிந்து தன்னிகரில்லா பெண் என்று
பாரினில் உருப்பெடுத்து பட்டாடை தானெடுத்துடுத்தி
வியர்வை சிந்தினும் வேட்டி சால்வையுடன் வீறு நடை கொண்டு
நெற்றியில் நீறிட்டது தமிழ் கலாசாரம்.

வாசலோரம் நின்று வாங்க என்று வரவேற்று
மனையுட் புகுத்தி இருப்பாட்டி உண்ண உணவளித்து
கனியுடன் தானெடுத்து கவி மொழி பேசிய பின்னர்
போய்த்து வாங்க என்னும் படுவான் வாய் இது.

அவையெடுத்து ஆயிரம் பகை இருப்பினும்
சபை நடுவே மத்தளம், சல்லாரியென சதங்கை முழக்கமிட
கூத்து, கரகம், கொம்புடன், வசந்தம், கலையென பலதை
பண்ணோடு படித்து மகிழ் தொழிலாளர்கள் பிறந்த மண்.

இத்தனையும் நிலைக்க
தான்தோன்றி அப்பருடன்
தாந்தாமலை முருகனும் தலங்களில்
தோன்றிய தன்னிகரில்லா மண்.

சி.ஜீவிதன்
முனைக்காடு





இடமிருந்து வலமாக

அமர்ந்திருப்போர் : திரு.S.சசிகுமார் , திரு.S.புவனேஸ்வரன் , திருமதி.S.வில்வரத்னம் (பிரதேச செயலாளர்), திரு.P.ஸ்ரீஸ்கந்தசெயா, திரு.V. செல்வராசா

நிற்போர் : திரு.S.L.லொறன்ஸோ, திரு.P.சோமசுந்தரம், A.L.M.பௌசான்,.M.H.M பாஹீர், திரு.T.ஜீவநாதன் , திரு.P.செந்தூரன், செல்வி.K.ஹம்சியா, திரு.G.திருஞானசெல்வம், திருமதி.L.சுபராஜ், திரு.N.சிவகுமார், T. பாத்திமா சமீறா, திரு.N.ஆனந்தராஜா, திரு.P.தவராஜா, திரு.R.ரமேஸ், திரு.P.கனகசுந்தரம், திரு.I .பகலவன்.

(சமூகமளிக்காதோர்: திரு.R.யோகராஜா, திரு.R.நவநேசராஜா, திரு.K.கலாதரன், திரு.S.பேரின்பநாயகம், திரு.T.பாலச்சந்திரன்)

# மண்முனை தென்மேற்கு பிரதேசத்தின் ஆலய சிறப்புக்களும் கிராமிய வழிபாட்டு முறைகளும்



மீன்பாடும் தேனாடாக போற்றப்படுகின்ற மட்டக்களப்பிற்கு தென்மேற்கானது பல காடுகளும், ஆறுகளும், ஓடைகளும், சோலைகளும், நிறையப்பெற்று காணப்படும் இயற்கை வளங்களையும், பல செயற்கை வளங்களையும் அதாவது மின்சார வசதிகள் அழகான கட்டிடங்கள் போன்ற பலசெய்கை வளங்களையும் கொண்டு காணப்படுவது மண்முனை தென்மேற்கு பிரதேசமாகும் . இதில் எவ்வித ஐயமும் இல்லை. இவ்வாறான இயற்கை வளங்களையும் செயற்கை வளங்களையும் கொண்டு காணப்படுகின்ற மண்முனை தென்மேற்கு பிரதே சமானது பல ஆலய வழிபாட்டு முறைகளைக் கொண்டு மிகவும் சிறப்பான முறையில் காணப்படுகின்றது எனலாம். இவ் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தை பார்த்தால் மிகவும் ஒரு சந்தோஷம் ஏற்படும். அவ்வாறான சிறப்பிற்குரியதே மண்முனை தென்மேற்கு பிரதேசமாகும்.

அந்த வகையில் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தின் ஆலய சிறப்புக்களையும் கிராமிய வழிபாட்டு முறைகளையும் நாம் உற்று நோக்குவோம். இப் பிரதேசத்தில் பல ஆலயங்கள் காணப்படுவதே ஒரு சிறப்பு எனலாம். அதாவது சிவன் ஆலயம், கண்ணகி ஆலயம், பிள்ளையார் ஆலயம், நாகதம்பிரான் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், முருகன் ஆலயம், என பல்வேறு ஆலயங்கள் எமது மண்முனை தென்மேற்கு பிரதேசத்திலே காணப்படுகின்றன. இப்படிப்பட்ட ஆலயங்கள் பல சிறப்பு வாய்ந்த ஆலயங்களாகவும் காணப்படுகின்றன.


அந்த வகையில் இவ் ஆலயங்களின் சிறப்புக்கள் பற்றி நோக்கினால் சிவன் ஆலயம் என்பது எமது பிரதேசமான கொக்கட்டிச்சோலையிலே மிகவும் சிறப்புப் பெற்று விளங்குகின்றது அதாவது இவ் ஆலயமானது பல சிறப்புடையது. அதாவது போர்த்துக்கேய காலத்திலே இக் கோயில் தோற்றம் பெற்றது. இது பக்தர்களின் குறைகளை நிறைவேற்றி வைக்கும் ஒரு சிறப்பிற்குரியது. பக்தர்கள் இவ் ஆலயத்திற்கு சென்று அவர்களது குறைகளை இறைவனிடம் வேண்டித் துதித்தால் அக்குறைகளை தீர்க்கும் ஒரு சக்தி வாய்ந்த பிரபல்யமான ஆலயமாக இது காணப்படுவது இவ் ஆலயத்தின் சிறப்பை கூறுகிறது.

**ச. சிவகுமார்**
மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்

அதுமட்டுமல்லாது இவ் ஆலயத்தின் மற்றொரு சிறப்பாக தேர் ஓடுகின்ற காட்சியும் காணப்படுகிறது. அதாவது இவ் ஆலயததில் காணப்படும் இறைவன் அந்த தேர்களிலே அமர்ந்து பவனி வருவதும் பக்தர்கள் இறைவனை துதித்து பாடுவதும் இவ் ஆலயத்தின் சிறப்பு என்றே கூற முடியும். இவ் வேளையில் பக்தர்கள் தங்களது குறைகளை அல்லது கஷ்டங்களை இறைவனிடம் துதித்து பல நேர்த்திக் கடன்களை வைப்பார்கள். அவர்களது வேண்டுதல் அதாவது அவர்களது குறைகள் தீருமானால் அவ் இறைவனுக்கு பல நேர்த்திகளை செய்வதும் வழக்கம். இது இவ் ஆலயத்தின்சிறப்பையே சுட்டிக்காட்டி நிற்கின்றது எனலாம்.

அதே போல எமது பிரதேசத்தில் கண்ணகி ஆலயமும் சிறப்புற்று விளங்குவதைக் காணலாம். இக் கண்ணகி ஆலயமானது பத்தினிப் பெண்களின் நம்பிக்கைக்கும் சிறப்பிற்கும் உரிய ஆலயம் என கூறலாம். அதாவது கண்ணகியானவள் கோவலன் கள்வன் என கூறி கொலை செய்யப்பட்டதால் கோவலன் கள்வன் அல்ல என மன்னனுடன் வாதாடி மதுரை நகரையே எரித்தவள் தனது கணவன் நல்லவன் என்பதனை உணராத காரணத்தினாலே இது இடம்பெற்றது. இதனால் தற்போதும் கண்ணகியானவள் போற்றப்பட்டு வருவதோடு கண்ணகியின் உற்சவ காலங்களில் கண்ணகி தொடர்பான பாடல்களும், கதைகளும், பேச்சுக்களும், சிலம்பு தொடர்பான விடயங்களும் குளிர்த்தியாடும் வைபவமும் சிறப்புற்று விளங்குவது எமது மண்முனை தென்மேற்கு பிரதேசத்தின் ஆலய சிறப்புக்களை நன்கு எடுத்துக் கூறுகிறது எனலாம்.

அதே போன்று அம்மன் ஆலயமும் சிறப்புற்று விளங்குகிறது. அதாவது இவ் ஆலயமானது மிகவும் பிரசித்திபெற்றதும், சிறப்பிற்குரியதும் நம்பத்தகுந்ததுமான ஒரு ஆலயமாகும் அந்தவகையில் இவ் ஆலயத்தின் சிறப்புக்களை எடுத்து நோக்கினால் பக்த அடியார்கள் இவ் ஆலயங்களுக்கு வந்து தமது கறைகளை இறைவனிடம் மண்டாடித்துதித்து வேண்டினால் அவர்களது குறைகளை நிறைவேற்றும் சக்தி இவ்வாலயத்திற்கு இருக்கிறது. இது இவ்ஆலயத்தின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றது எனலாம். அத்தோடு இவ் ஆலயங்களில் உற்சவகாலங்களில் தெய்வங்கள் பல இறைவனின் அருள் பெற்று உருக்கொண்டு ஆடி பக்தர்களின்



குறைகளை கேட்டு இறைவன் மூலமாக தீர்த்து வைக்கும் ஒரு சிறப்பும் இவ் ஆலயத்திற்கு உண்டு எனலாம். அதேபோல இவ் உற்சவத்தின் இறுதி நாளன்று தீ வைத்து அதன் மேல் பக்தர்கள் தங்களது நேர்த்திகளை நிறைவேற்ற நீராடிவிட்டு தீப்பாய்தல் ஒரு வழக்காறு என்று கூறலாம். இதனால் பக்தர்களின் பாவங்கள் செய்த பிழைகள் போன்றன நீங்கி விடும் என்பது நம்பிக்கையாகும்.இப்படிப்பட்ட செயற்பாடுகளும் ஆலயங்களின் சிறப்புக்களை கூறுகின்றது.அதேபோல் எமது மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் வாழும் மக்கள் அனைவரும் வணங்குவதும் மிகவும் சக்தி வாய்ந்ததுமான எமது கண்கண்ட தெய்வமாக போற்றபடும் நாகதம்பிரான் ஆலயமும் எமது பிரதேசத்தில் சிறப்புற்று விளங்குகின்றது அந்த வகையில் இதன் சிறப்புக்களை நோக்கினால் அடியார்கள் தங்களது குறைகளை இவ் ஆலயத்திற்கு சென்று கூறி மண்டாடினால் அவர்களது

குறைகள் சில நாட்களிலே நீங்கிவிடும் இது இவ் ஆலயத்தின் சிறப்பென்றே கூறமுடியும். அதேபோல் இவ் ஆலயத்தின் நாகதாம்பிரானுக்குரிய பூசைப் பொருட்கள் என்பனஅதன் புத்திலே வைக்கப்படும் நாம் வைக்கும் பொருட்களை இறைவன் ஏற்றுக்கொள்வதோடு அவ் இறைவன் சில உண்மையான அடியார்களுக்கும் காட்சியளிப்பான். இது இவ் ஆலயத்தின் சிறப்பென்றே கூறலாம். அதேபோன்று எமது பிரதேசத்தில் வீரபத்திரர் ஆலயமும் சிறப்புப் பெற்ற விளங்குகின்றது.

அதாவது இவ் ஆலயங்களின் உற்சவகாலங்களில் பல அடியார்கள் சென்று தங்களது குறைகளை கூறி வீரபத்திரரிடம்வேண்டினால் அடியார்களின் குறைகள் உடனே நீங்கி விடும் இவ்வாறான சிறப்பு பெற்றது இவ் வீரபத்திரர் ஆலயமாகும். மேலும் இவ்வாலயங்களில் வீரபத்திரருக்குரிய பாடல்கள் போன்றன பாடப்படும். அதேபோல் பல தெய்வங்கள் இறைவனின் அருள்பெற்று ஆடி அடியார்களின் குறைகளை கேட்டு அதனை இறைவன் ஊடாக தீர்த்து வைக்கும் மரபு காணப்படுகிறது இதனால் இவ் ஆலயத்திற்கு பலஅடியார்கள் சென்று தமது குறைகளை நிறைவேற்றிக்கொள்வது வழக்கம். இவ்வாறாக இவ் ஆலயத்தின் சிறப்பு கூறப்படுவதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது எனலாம்.

அதேபோன்று இப்படிப்பல ஆலயங்கள் சிறப்புப்பெற்று எல்லோராலும் போற்றப்படுவதைப் போல எமது மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் சிறப்புற்று விளங்கும் மற்றுமொரு ஆலயமாக முருகன் ஆலயம் காணப்படுகிறது. அதாவது முருகனின் சிறப்பாக முருகன் சிறுவயதில் செய்த குறும்புகளும் தேவர்களுக்க அசுரர்களிடமிருந்து விடுதலை பெற்றுக்கொடுத்த சம்பவமும் கூறப்படுகிறது. அதாவது அசுரர்கள் தேவர்களை வதைத்த போது முருகன் அவ் அசுரர்களை அழித்து தேவர்களுக்க விமோசனத்தை வழங்கிய கதையும் இவ் ஆலயத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

மேலும் முருகன் ஆலயமானது சிறப்புற்று விளங்கும் கதையாக முருகன் இரு மணங்களை புரிந்ததும் மலையை நோக்கிசென்று அமர்ந்ததும் முருகனிக் சிறப்பையும் முருக ஆலயங்களின் சிறப்பையும் எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறாக இவ் ஆலயத்தின் சிறப்பு போற்றப்படுகிறது.

இவ்வாறாக மண்முனை தென்மேற்கு பிரதேசத்தின் ஆலயங்களின் ஊடாக அறிய முடிவது எமது பிரதேசத்தின் சிறப்பையும் எடுத்துக்காட்டுகிறது எனலாம்.

இதேபோன்று எமது மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் கிராமிய வழிபாட்டு முறைகளும் சிறப்புற்கு விளங்குகின்றன அந்தவகையில் நோக்கினால் பல கிராமியத் தெய்வங்களும் பல கிராமியவழிபாட்டு முறைகளும்காணப்படுகின்றன. இக் கிராமிய வழிபாட்டு முறையானது பல்வேறு பிரதேசங்களில் காணப்படுகின்றன ஆனால் இவ்வழிபாடு பிரதேசத்திற்கு பிரதேசம் மாறி மாறி மேற்கொள்ளப்படுவதை நாம் அறியக்கூடியதாய் இருக்கிறது.

அந்த வகையில் நோக்கினால் பல கிராமிய தெய்வங்கள் காணப்படுகின்றன அதாவது கண்ணகி, மாரியம்மன், விரபத்திரர், அண்ணாமார், காளி, பேச்சி, ஐயனார், வைரவர், போன்ற பல கிராமியத் தெய்வங்கள் காணப்படுகின்றன அதேபோல் ஒவ்வோரு கிராமியத் தெய்வங்களும் ஒவ்வொரு வழிபாட்டுமுறை காணப்படகிறது. அந்த வகையில் நோக்கினால் ஒவ்வோருகிராமத்திலும் எமது ஊரைக்காப்பதற்காக ஐயனார் என்ற இறைவன் ஊரின் நடுவிலே வைத்து அவருக்காக விழா எடுத்து அவரின் பெருமைகளை கூறி பூசை செய்வது எமது கிராமிய வழிபாட்டு முறைகளைக் எடுத்துக்காட்டுகிறது. அதுமட்டுமல்ல ஐயனார் என்பவர் அவ் ஊரில் காணப்படுகின்ற அனைத்து மக்களுக்கும் ஒரு தீங்கும் ஏற்படாதவாறு காப்பதனால் தான் அவர் ஊர் நடுவில் வைத்து வழிபடுகின்றோம். இவ்வாறு எமது கிராமிய வழிபாட்டு முறை அமைகின்றது எனலாம்.

அதேபோல் காளி போன்ற தெய்வங்களும் எமது கிராமியத் தெய்வங்களில் சிறப்புப்பெற்று விளங்குகிறது. அதாவது காளி என்பது அடியவர்களின் குறைகளை நீக்குவதால் அதற்காக ஒரு விழா எடுத்து மக்கள் அனைவரும் சென்று அவ் விழாவை சிறப்பாக கொண்டாடி வருவது வழக்கம். இதுவும் கிராமிய வழிபாட்டு முறைகளை குறித்து நிக்கின்றது. இவ்வாறாக கிராமிய வழிபாட்டு முறை சிறப்புற்று விளங்குகிறது.

அதேபோன்று அம்மன் வழிபாட்டு முறையும் காணப்படுகிறது அதாவது அம்மன் அதன் உற்சவகால நேரத்தில் அக் கிராமத்தில் உள்ள அனைத்து வீதிகளுக்கும் சென்று அங்கு இருக்கும் அடியார்களின் குறைகளை நீக்குவது வழக்கம். அதாவது அவ்வூரில் உள்ள அனைத்து மக்களும் இறைவன் ஊர்வலமாக வரும் போது வீட்டின் முன் உள்ள வீதியின் ஓரத்தில் நிறைகுடம் வைத்து அம்மன் படங்களை வைத்தும் விளக்கேற்றியும் வைப்பர் அப்போது இறைவன் ஊர்வலமாக சென்று அவ் மக்களின் குறைகளை நிறைவேற்றுவதும் வழக்கம் என போற்றப்பட்டு வருகிறது. இது எமது கிராமிய வழிபாட்டு முறையினை மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது எனலாம்.

அதேபோன்று கிராமிய தெய்வ வழிபாட்டு முறைகளில் மிகவும் சிறப்புற்று விளங்கும் தெய்வம் வைரவர் ஆகும். அதாவது வைரவர் மக்கள் அனைவரையும் காப்பதாக கூறப்படுகிறது. இதனால் உற்சவ காலங்களில் வைரவருக்கென பல பூசைப்பொருட்களும் வைத்து வழிபடுவது வழக்கம். தாவது வைரவருக்கென ரொட்டி, பழம், கரும்பு, போன்ற அனைத்து பொருட்களும் வைத்து இறைவனை வழிபடுகின்றனர் இதனால் வைரவர் மகிழ்ச்சியடைந்து மக்களது குறைகளை அல்லது வேண்டுதல்களை நிறைவேற்றுவார் என்பது வழக்கமாயிற்று இது எமது மண்முனை தென்மேற்கு பிரதேச கிராமிய வழிபாட்டு முறைகளை மிகவும் சிறப்பாக எடுத்துக்காட்டி நிற்கின்றது.

அதேபோன்று கண்ணகியும் கிராமியத் தெய்வங்களாக போற்றப்படுகின்றார். அதாவது பெண்களின் வழிபாட்டு தெய்வமாக இந்த கண்ணகி விளங்குகிறாள். அதாவது தனது கணவன் கள்வன் அல்ல என வாதாடியும் கள்வன் என தண்டனை வழங்கப்பட்டதால் கண்ணகி மதுரையை எரிக்கின்றாள் இவ்வாறு கண்ணகி பத்தினித் தெய்வம் என போற்றப்படுவதால் கண்ணகியை மிகவும் சிறப்பான முறையில் கிராமிய வழிபாட்டு முறைகளில் வழிபட்டு வருகின்றனர் இது எமது கிராமிய வழிபாட்டு முறைகளை எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு எமது மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் வழிபடப்படும் கிராமியத் தெய்வங்களில் அண்ணாமார் என போற்றப்படும் தெய்வமும் சிறப்பிற்குரியது அதாவது சில கிராம மக்கள் அண்ணாமாரை வழிபடுவதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. என அவ் இறைவனுக்கு விழா எடுத்து வழிபட்டு வருகின்றனர் இவ்வாறு பல தெய்வங்கள் கிராமிய வழிபாட்டு முறைகளை கொண்ட தெய்வமாக போற்றப்படுகிறது.

ஆகவே மண்முனை தென்மேற்கு பிரதேசத்தின் ஆலய சிறப்புக்களும் கிராமிய வழிபாட்டு முறைகளும் மேற்கூறப்பட்ட கருத்தின் மூலம் எவ்வாறு காணப்பட்டது என்பது எம்மால் அறிய முடிகிறது. ஆகவே எமது ஆலயங்களின் சிறப்புக்களைப் பேணி பாதுகாப்பது எமது கடமையாகும் இது எமது எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் ஏதுவாக அமைவதற்கு வாய்ப்புண்டு எனவே ஆலயங்களின் சிறப்பை பேணுவோம்.

**கலாசாரவிழா கவிதைப்போட்டி : 1ம் இடம் (கனிஸ்ட பிரிவு)**

# படுவான் குயில்

பதுவான் குயில் பாடிட மெய்சிலுக்குது
உள்ளத்தின் உணர்வு உறுமி இழுக்குது
எத்தனை கோடி இன்பம் எம்
வாழ்வில் நிலையான கலைகளாய்

வெட்டுப்பட்ட வெந்த தேசம்
தான்தோன்றி அப்பனும்
தாந்தாமலை முருகனும் உறையும்
புனித படுவான் மண்

என்னென்று சொல்வது எப்படிச் சொல்வது
எங்கள் கலையின் வாழ்வு பற்றி
சொல்லச் சொல்ல தேனூறுது
தேய் பிறையும் தேயாது மீளும்

பலவித எண்ணங்கள் படைத்து
பாரதப்போர் இராமாயணம் இவை அனைத்தையும்
கிள்ளி எடுத்து உரைகள் பின்னி
ஆட்டம் பாட்டுடன் ஆடி வருகின்றனர் .

ஆயிரமாயிரம் கதைகளுண்டு
ஒவ்வொரு ஊருக்கும் ஒரு கலையுமுண்டு
உடலிலே ஊறி ஊற்றாக
உயர்ந்தும் வழிந்தும் மூடுது



நான் ஒரு கதை சொல்கிறேன்
கூத்து, கரகம், கும்மி, வசந்தன்,
காவடியாட்டம், வில்லுப்பாட்டு, கோலாட்டம்,
இத்தனையும் எம் பாரம்பரியம்.

கொம்புவிளையாட்டும், நாட்டுவைத்தியமும்
கவிதையும், நாடகமும், சாஸ்திரமும்,
காவியம்பாடலும், பேச்சாற்றலும்
எங்கள் வாழ்வின் கலையாகும்

நேற்றின்றல்ல முந்தநாளும் இப்படித்தான்
நடைவண்டியுடன் நாலைந்து பேரும்
சேர்ந்து போயிருந்து சோர்வடையாது
கூத்து பார்த்தது ஒரு காலம்

வட்டக்களரி அமைத்து சுற்றியிருந்து
அலங்காரம் செய்து அண்ணன் தம்பி என்று
வடிமோடி, தென்மோடியுடன்
கும்மி, கரகம், வசந்தமும் ஆடுவான்

ஆலய உற்சவம் என்றால்
அங்கு ஒரு கலை நிகழ்வும் உண்டு
கூத்தும், வில்லுப்பாட்டும், நாடகமும்
வசந்தமும், ஒவ்வொரு கதை சொல்லும்

பட்டிப்பளை கலை இலக்கியமும்
கலைக் கழகங்களும் கலை ஆவணப்படுத்தலும்
கௌரவிப்பும், ஊக்குவிப்பும் நின்று
விடாது நிலைத்து வரும்.

**ரவிச்சந்திரன் மைதிலி**
மட் / முதலைக்குடா ம.வி

# அழகியல் அம்சங்கள்

அழகு என்றால் என்ன? இந்த ஆராய்ச்சியில் இறங்குவோமாயின் அது தத்துவ விசாரணையாகி விடும். " அழகு " என்பது புறத்தே பொருள்களிடத்துள்ள பண்பு அன்று பொருளை நோக்குவோனது அகத்தில் உள்ள பண்பே அது என்று தத்துவ அறிஞர் ஒருவர் கூறுகின்றார். இந்த ஆராய்ச்சி நமக்கு வேண்டியதில்லை. எது நம் உள்ளத்தை ஈர்க்கின்றதோ, எது நம் உள்ளத்தில் இன்பக் கிளர்ச்சியை உண்டாக்குகின்றதோ, எது நம் உள்ளத்துக்கு நிறைவு தருகின்றதோ, அதுவே அழகு என்று நாம் பொதுவகையில் கூறிவிடலாம். இந்த அழகை நாம் இயற்கைப் பொருள்களிலும் காணலாம். செயற்கைப் பொருட்களிலும் காணலாம். இயற்கை அழகைக் " கை புனைந்தியற்றாக் கவின் " என்று வியக்கின்றோம். செயற்கை அழகைப் படைத்த மனிதனை நயக்கின்றோம். நமது அழகுணர்ச்சியைத் தூண்டும் சாதனங்கள் இயல் [இலக்கியம்], இசை, நாடகம் [ஆடல்], என்பன முதன்மையானவை. இவற்றை நாம் அழகியற் கலைகளெனப் போற்றுகின்றோம். இக் கலைகளை அடிப்படையாகக் கொண்டே முத்தமிழ்ப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டார் பாடல்கள் இந்த முத்துறைக் கலைகளின் அம்சங்களையும் கொண்டவை. அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் மூன்றையும் வளமுறச் செய்தவை. செய்தும் வருபவை. இவற்றைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

இயல் :- இயல் என்னும் போது இலக்கியத்தையே நாம் முக்கியமாகக் கருதுகின்றோம். ஏட்டில் எழுதப்பட்டவையே இலக்கியம் என்ற குறுகிய கருத்து ஒரு காலத்தில் நிலவியது. ஆயினும் ஏட்டில் எழுதப்படாதது. மக்களிடையே வாய்மொழியாக வழங்கிவரும் பாடல்களும் இன்று இலக்கியம் என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இலக்கியம் வாழ்க்கையோடு தொடர்புடையது. வாழ்க்கையிலிருந்து மலர்வது, வாழ்க்கைக்கு விளக்கம் தருவது, வாழ்க்கையை வளமாக்குவது என்ற அடிப்படைக் கருத்தை நாம் ஒப்புக் கொள்கின்றோம். நாட்டார் பாடல்கள் இலக்கியம் என்று சொல்வதற்குச் சாலவும் தகுதியுடையனவேயாகும். நாட்டார் பாடல்கள் மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பின்னிப் பிணைந்துள்ளன. மக்களின் எல்லா வகையான மனவுணர்ச்சிகளையும்அவை வெளிப்படுத்துகின்றன.



மு. நிர்மலாதேவி
கலாசாரப்பேரவை உறுப்பினர், அரசடித்தீவு

இசை : நாட்டார் பாடல்களுக்குத் தனிச் சிறப்பைத் தருவது அவற்றின் இசையின்பமே எனலாம். இசை என்னும் சிறகு இருப்பதாலே இப்பாடல்கள் அவைதோறும் வட்டார எல்லைகளைக் கடந்து விரைவிலே நாடெங்கும் பரவி விடுகின்றன. இலட்சக்கணக்கான நாட்டு மக்கள் இந்த இசையையே நயந்து இன்புறுகின்றனர். இப்பாடல்கள் கேட்பதற்கு இனிமையாக இருப்பதோடு சொற்சுவையும், பொருளழகும் பொருந்தியிருப்பதால், நாட்டின் கலாசாரப் பாரம்பரியச் செல்வமாகத் திகழ்கின்றன. நாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் பொழுது போக்குக்காகவும் பாடப்படுவன. மக்கள் கூட்டாகச் சேர்ந்து தொழில் புரியும் போது பாடும் பாடல்களின் இசை, அவர்களின் உடற்சோர்வையும், உளச்சோர்வையும் போக்கி தொழிலைத் திறமையாகச் செய்வதற்கு உதவிபுரிகின்றது.

நாடகம் [ ஆடல் ] :- முத்தமிழில் ஒன்றாகிய நாடகத் தமிழ் முக்கியமாக ஆடற்கலையையே பொருளாகக் கொண்டது. இக் கலைக்கும் நாட்டு மக்களின் ஆடல் பாடல்களே தோற்றுவாயாக அமைந்திருக்க வேண்டும். நாட்டுப்பாடல்களில் பல கூட்டாகப் பாடுவதற்கென்றே அமைந்தவை. கும்மி, கோலாட்டம் போன்ற விளையாட்டுப் பாடல்களும் வசந்தன் போன்ற கொண்டாட்டப் பாடல்களும் ஆடலை முக்கிய அம்சங்களாகக் கொண்டவை. நாட்டு மக்களிடம் எத்தனையோ வகையான ஆடல்கள் உள்ளன. அவற்றோடு தொடர்புடைய பாடல்களும் உள்ளன. இத்தகைய நாட்டுக் கூத்துக்களும் நமது கலாசாரத்தின் ஒரு பகுதியாகவே மதிக்கப்படுகின்றன. இன்று பாடசாலை நடன நிகழ்ச்சிகளிலும் பரதநாட்டியக் கச்சேரிகளிலும் திரைப்படங்களிலும் சிலபல நாட்டுக்கூத்து இடம்பெற்று வருவதைக் காண்கின்றோம். இயல், இசைத் துறைகளிற் போலவே நாடகத் துறையிலும் நாட்டார் இலக்கியம் புத்துயிரும் புதுவளமும் ஊட்டி நமது கலைச் செல்வத்தைச் செழிப்புறச் செய்கின்றது.



# கலாசார விழா போட்டி முடிவுகள் – 2012

## பாடசாலை மட்டம்

### 1. கவிதை :

கனிஸ்ட பிரிவு

முதலாம் இடம் : ரவிச்சந்திரன் மைதிலி - மட்/முதலைக்குடா ம.வி

இரண்டாம் இடம் : அழகுதுரை டிலக்சனா - மட்/முனைக்காடு விவேகானந்தா வித்.

மூன்றாம் இடம் : மோதிலிங்கம் டுவேந்தினி - மட்/கொல்லனுலை விவேகானந்தா வித்.

சிரேஸ்ட பிரிவு

முதலாம் இடம் : திருச்செல்வம் சிந்துஜன் - மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா ம.வி.

இரண்டாம் இடம் : அன்பரசன் அருண்பிரசாத் - மட்/ முதலைக்குடா ம.வி.

மூன்றாம் இடம் : தங்கதுரை தனுஷா - மட்/ முனைக்காடு விவேகானந்தா வித்.

### 2. கட்டுரை :

கனிஸ்ட பிரிவு

முதலாம் இடம் : இராசகுமார் கிருசாந்தினி - மட்/ மகிழடித்தீவு சரஸ்வதி வித்.

இரண்டாம் இடம் : அலையப்போடி தர்ஷிகா - மட்/ மகிழடித்தீவு சரஸ்வதி வித்.

மூன்றாம் இடம் : கனகநாயகம் அச்சோபனா -மட்/ முனைக்காடு விவேகானந்தா வித்.

சிரேஸ்ட பிரிவு

முதலாம் இடம் : சந்திரசேகரம் சிவகுமார் - மட்/ முனைக்காடு விவேகானந்தா வித்.

இரண்டாம் இடம் : மகேஸலிங்கம் டிலோஷினி - மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா ம.வி.

மூன்றாம் இடம் : கணபதிப்பிள்ளை கெக்கநிசா - மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா ம.வி.

### 3. நாடகம் :

முதலாம் இடம்:- மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்

இரண்டாம் இடம்:- பா. நிறோசனா குழுவினர்

(மட்/கொக்கட்டிச்சோலை இராம கிருஷ்ணமிஷன் வித்தியாலயம்)

மூன்றாம் இடம்:- ச.சரிதா குழுவினர்

(மட்/கொக்கட்டிச்சோலை இராம கிருஷ்ணமிஷன் வித்தியாலயம்)

### 4. வசந்தன் கூத்து :

முதலாம் இடம் :- மட் / மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்

## திறந்த பிரிவு

1. கவிதை :

முதலாம் இடம் : சிதம்பரநாதன் ஜீவிதன் -முனைக்காடு.
இரண்டாம் இடம் : குணரெத்தினம் மயூரி உமா - அம்பிளாந்துறை.
மூன்றாம் இடம் : கந்தையா பகீரதன் - அரசடித்தீவு.
நான்காம் இடம் : ஆறுமுகம் தனுஷிகரன் - கொக்கட்டிச்சோலை.

2. நாடகம் :

முதலாம் இடம் : நாகசக்தி கலை மன்றம் - முனைக்காடு வடக்கு

3. வசந்தன் கூத்து :

முதலாம் இடம் : நாகசக்தி கலை மன்றம் - முனைக்காடு வடக்கு

4. வடமோடிக் கூத்து :

முதலாம் இடம்:- நாகசக்தி கலை மன்றம் - முனைக்காடு வடக்கு
இரண்டாம் இடம் :- வல்லிபுரம் கலைக்குழு - மகிழடித்தீவு

# தேசிய கலை இலக்கிய விழா – 2011
# போட்டி முடிவுகள்

## 1. கட்டுரைப் போட்டி :

**கனிஸ்ட பிரிவு**

முதலாம் இடம் :- செல்வி. ர. மைதிலி
மட்/ முதலைக்குடா மகா வித்தியாலயம்.
இரண்டாம் இடம் :- செல்வன். ப. ரேணுகாந்
மட்/ முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்.

**சிரேஸ்ட பிரிவு**

முதலாம் இடம் :- செல்வன். அ. சுதர்சினி
மட்/ முதலைக்குடா மகா வித்தியாலயம்

## 2. கவிதைப் போட்டி :

**கனிஸ்ட பிரிவு**

முதலாம் இடம் :- செல்வி. பு. கஜானி
மட்/ முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்
இரண்டாம் இடம் :- செல்வி. கு. தவநிதா
மட்/ முதலைக்குடா மகா வித்தியாலயம்
மூன்றாம் இடம் :- செல்வி. க. அச்சோபனா
மட்/ முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்

சிரேஸ்ட பிரிவு

முதலாம் இடம் :- செல்வி. ந. குணலதா
மட்/ முதலைக்குடா மகா வித்தியாலயம்

இரண்டாம் இடம் :- செல்வி. கோ. விறிகங்கா
மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்

மூன்றாம் இடம் :- செல்வி. ஜே. சோபிகா
மட்/ மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்

## 3. கவிதைப் பாடல் போட்டி ( சிரேஸ்ட பிரிவு )

முதலாம் இடம் :- செல்வன். சி. தசரதன்
மட்/ முதலைக்குடா மகா வித்தியாலயம்

## 4. சிறுவர் கதையாக்கப்போட்டி ( கனிஸ்ட பிரிவு)

முதலாம் இடம் :- செல்வி. ச. பத்மகலா
மட்/ முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்

இரண்டாம் இடம் :- செல்வி. ஜெயலலிதா
மட்/ முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்

மூன்றாம் இடம் :- செல்வன். ச. கிருஷாந்தன்
மட்/ முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்

## 5. கையெழுத்துப் போட்டி ( கனிஷ்ட பிரிவு )


முதலாம் இடம் :- செல்வி. மே. சரணியா
மட்/ முதலைக்குடா மகா வித்தியாலயம்




# மண்முனை தென்மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் கௌரவிக்கப்படும் கலைஞர்கள்-2012



வேலாச்சி வல்லிபுரம்



நல்லதம்பி சிவநாயகம்



கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம்



பெத்திப்போடி சின்னத்தம்பி



நல்லதம்பி சிவதர்சன்

தொகுப்பு

ந. வளர்மதி

(கலாசார உத்தியோகத்தர்)

முழுப் பெயர் :- வேலாச்சி வல்லிபுரம் (கலாபூசணம்)

விலாசம்:- மகிழடித்தீவு தெற்கு

பிறந்த திகதி :- 1939.03.09

கௌரவிக்கப்படும் கலைத்துறை :- நாட்டுக் கூத்து.



மகிழடித்தீவு தெற்கை பிறப்பிடமாக கொண்டு வசித்து வரும் மூத்த கலைஞர் திரு. வேலாச்சி வல்லிபுரம் கூத்துக் கலைக்கு அளப்பரிய சேவையாற்றிய சிறந்த கலைஞராவார்(அண்ணாவி) தனது சிறு வயதிலிருந்து(13) கூத்துக்கலையில் ஈடுபடத் தொடங்கிய இவர் பாடசாலையில் படிக்கும் காலத்தில் கூத்து கலையின் பால் கொண்ட ஆர்வத்தில் இராமாயணம் கூத்தில் பாத்திரமேற்று நடித்துள்ளார்.

தமது கல்வியினை தரம் 8 உடன் நிறைவு செய்த பின் படத்தியட்டர் (வாழைச்சேனை), அச்சகம் என்பனவற்றில் பணியாற்றி விவசாயத்திலும் தன்னை ஈடுபடுத்தினார். மீண்டும் கலையில் தடம் பதித்து 17,18 ஆம் சுபத்திரை திருமணம், இராமர் நாடகம், தாயை காத்த தனையன், ஆஞ்சநேயர் யுத்தம் போன்ற பல கூத்துக்களில் பாத்திரமேற்று நடித்துள்ளார்.

வலயிறவை சேர்ந்த சின்னத்தம்பி என்பவரைத் தன் குருவாக கொண்டு மத்தளம் பழகி தமது கலையை ஏனையவர்களுக்கும் எடுத்தியம்பும் வகையில் அல்லி நாடகம், நொண்டி நாடகம், கண்ணகி வரலாறு, சரஸ்வதிசபதம், சத்தியவான் சாவித்திரி, வள்ளி முருகன் திருமணம், மறளியை வென்ற நங்கை, காலனை வென்ற காரிகை, அனுபுத்திரன் நாடகம், போன்ற 20க்கு மேற்பட்ட கூத்துக்களை பழக்கியுள்ளார்.

இக்கலையினை பாடசாலை மாணவர்கள் ஆலயங்கள், கல்லடி விபுலானந்தா கற்கை நிலையம், ஆரையம்பதி பிரதேச செயலகம், திருமறைக்கலாமன்றம், தாழங்குடா கல்வியல் கல்லூரி போன்ற பல இடங்களிலும் மேடையேற்றியுள்ளனர். 2002 ஆண்டு கூத்து கலைக்கான கலாபூசணம் விருதினை கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கி கௌரவித்தது.

இவரது கிராமிய கூத்துக்கலை திறமையைப்பாராட்டி கௌரவிக்கும் முகமாக மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச கலாசார பேரவை 2012 ஆண்டின் கூத்துக்கலைக்கான கலைஞன் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறது.

முழுப் பெயர் :- நல்லதம்பி சிவநாயகம்

விலாசம் :- அரசடித்தீவு

பிறந்த திகதி :- 01.01.1948

வடக்குகௌரவிக்கம் பட்டம் :- நாட்டுக் கூத்து



அரசடித்தீவு வடக்கில் பிறந்து வசித்து வரும் நல்ல தம்பி சிவநாயகம் சிறந்த கூத்துக் கலைஞர்(நாடகஆசிரியர்). தரம் 3வரை கல்வி கற்ற இவர் கூத்துக்கலையில் கொண்ட ஆர்வத்தில் தனது பாடசாலைப் பருவத்தில் (12வயது) கூத்தில் பாத்திரமேற்று நடித்து தனது கலையை வெளிப்படுத்தியுள்ளார். ஆஞ்சநேயர் யுத்தம், சூரசம்காரம், மாடுபிடி சண்டை, அருச்சுனன் தாண்டவம், தகனம் போன்ற கூத்துக்களில் பாத்திரமேற்று தன் நடிப்புத்திறனை வெளிப்படுத்தியுள்ளார். தன் நடிப்பாற்றலினால் அண்ணாவியார் ஒருவருடன் இணைந்து கூத்துக்கலையை ஏனைய கலைஞர்களுக்கு பழக்கும் முகமாக பகாசூரன் சண்டை, இராமர் நாடகம், மணிமாலன் சண்டை, குருசேத்திரன் போர், அருச்சுனன் தாண்டவம், தகனம், விராதபருவ மாடுபிடி சண்டை, வீரகுமாரன் நாடகம், போன்ற கூத்துக்களை பழக்கியுள்ளார். இவரின் கூத்துக்கள் பல ஆலயங்களில், அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்காலத்திலும் ஆலய உற்சவ காலங்களில் கூத்து பழக்கி அரங்கேற்றி வருகின்றமையும் இவரின் கலை ஆர்வத்திற்கு சான்றாகும்.

இக் கிராமிய கூத்துக்கலை கலைஞரின் கலையினை பாராட்டி கௌரவிக்கும் முகமாக மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2012 ஆண்டிற்கான கூத்துக்கலை கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறது.

முழுப் பெயர் :- பெத்திப்போடி சின்னத்தம்பி

விலாசம்:- பண்டாரியாவெளி

பிறந்த திகதி :-1937.04.02

கௌரவிக்கப்படும் கலைத்துறை :- நாட்டு வைத்தியம்



பண்டாரியாவெளியை பிறப்பிடமாக கொண்ட ஒரு மூத்த கலைஞர் திரு. பெத்திப்போடி சின்னத்தம்பி நாட்டு வைத்தியத்தில் ஆயுள் வேத சித்த வைத்தியராக தன் திறமைகளை வெளிப்படுத்தி வருகிறார்.

பரம்பரையாக ஆயுள்வேத வைத்தியத் துறையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தன் தந்தையின் வைத்திய முறையை படிக்கும் காலத்தில் இருந்து பார்த்து. கற்று வந்ததுடன் தந்தையாருக்கு உதவியாகவும் செயற்பட்டார். தன் கல்வியை தரம் எ3 வரை கற்ற பின்னர் இடைநிறுத்திக் கொண்டு இக்கலையிலிருந்த ஆர்வம் காரணமாக தன் தந்தையிடம் இவ் வைத்திய முறையை திறம்பட கற்றுக் கொண்டார். தன் 20 வது வயதில் பெற்ற அனுபவங்களுடன் சித்த வைத்திய துறையில் சுயமாக செயற்படத் தொடங்கிய இவர் இன்று வரை இத்துறையில் ஆயுள் வேத சித்த வைத்தியராக பணியாற்றி வருகிறார்.

இவரின் சித்த வைத்தியம். விஷக்கல் வைத்தியத்தினை நாடி பல்வேறு இடங்களிலிருந்தும் மக்கள் வந்து பயனடைகின்றனர். இக் கலைஞரின் பணி பலராலும் பாராட்டப்படுவது இவர் திறமைக்கு சான்றாகும்.

இவ் ஆயுள்வேத சித்த வைத்திய கலைஞரின் சேவையினை பாராட்டி கௌரவிக்கும் முகமாக மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2012 ஆம் ஆண்டிற்குரிய நாட்டு வைத்திய துறைக்கான கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறது.

முழுப் பெயர் :- கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம்.

(மகிழை மகேசன்)



விலாசம:- மகிழடித்தீவு

பிறந்த திகதி :- 1942.09.23

இறைபதத்தில் :- 2007.11.20

கௌரவிக்கப்படும் கலைத்துறை:- எழுத்தாளர்.

மகிழடித்தீவை பிறப்பிடமாக கொண்ட கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம் (மகிழை மகேசன்) சிறந்த எழுத்தாளராக தமது வாழ்வில் கலைப்பிரவேசம் செய்த கலைஞர். எழுத்து, பேச்சு, கவிதை, என்பவற்றின் பால் கொண்ட கலை ஆர்வத்தில் தனது பாடசாலைக்காலம் தொடக்கம் தன் எழுத்தாற்றலை வெளிப்படுத்தி பல போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றதுடன் சுவாமி பிரேமானந்தாஜீ மகராஜீ அவர்களால் பாராட்டப்பட்டு தங்கப்பதக்கம் பெற்றமை இவர் திறமைக்கு சான்றாகும். 2004ஆம் ஆண்டு இவர் பெற்ற கலாபூசண விருது இவர் ஆற்றலினை வெளிப்படையாக பறைசாற்றியது.

இவ் எழுத்தாளனின் படைப்புக்களான சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம், மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும் ஆகியவை நூல் வடிவம் பெற்றன. எமது பிரதேச கலை, கலாசார பாரம்பரியத்தை வெளிக்காட்டும் வகையில் கொம்புமுறி விளையாட்டினையும் அரங்கேற்றி கொம்பு எனும் நூலையும் வெளியிட துணைநின்ற பெருமை இவரைச்சாரும். மறைந்தாலும் மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறப்புடைய இக் கலைஞனின் பல கட்டுரைகள் பத்திரிக்கையிலும் பிரசுரமாயின.

இவ்வுலக வாழ்விலிருந்து விடைபெற்றாலும் இன்றும் இப் பிரதேச மக்கள் நினைவில் மங்காமல் வாழ்ந்து கொண்டிருக்கும் அமரர் மகிழை மகேசன் (மகேஸ்வரலிங்கம்) அவர்களை மண்முனை தென்மேற்கு பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2012 ஆண்டு எழுத்தாளருக்கான கலைஞர் கௌரவம் மனைவி திருமதி மகேஸ்வரலிங்கம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

முழுப் பெயர் :- நல்லதம்பி சிவதர்சன்

விலாசம்:- அம்பிளாந்துறை வடக்கு

பிறந்த திகதி :- 1986.10.17

கௌரவிக்கப்படும் கலைத்துறை :- ஓவியம்.



அம்பிளாந்துறை வடக்கை பிறப்பிடமாக கொண்ட இளம் கலைஞன் செல்வன் நல்லதம்பி சிவதர்சன் தனது பாடசாலைப் பருவத்தில் இருந்து ஓவியம் வரைவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் கல்வி கற்கும் காலத்திலேயே பல ஓவியப் போட்டிகளிலும் பங்கேற்று சாதனை படைத்தவர் தனது உயர்தர படிப்பினை நிறைவு செய்த பின்னர் ஓவியப்பணியில் தன் ஆர்வத்தினை மெருகூட்டிக் கொண்டார். கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய ஒரு வருட ஓவியப் பயிற்சியினையும் பெற்றுக் கொண்டார். இவர் ஆலயங்களில் திரைச்சீலை வரைதல், ஆலய மேடைகளில் ஓவியம் வரைதல், பாடசாலை சுவர்களில் ஓவியம் வரைதல், என்பனவற்றில் தன் திறமையை பதிவு செய்துள்ளார். தனது பிரதேச பாடசாலைகள் மட்டுமன்றி மட்டக்களப்பு, அமிர்தகழி, பாடசாலை கல்லடி இக்னேசியாபாடசாலைகளிலும் சுவரோவியம் வரைந்துள்ளது சிறப்பிற்குரியது.

இவர் மட்டக்களப்பில் இடம் பெற்ற பல கண்காட்சிகளிலும் தனது படைப்புக்களை மேடையேற்றியதுடன் பல மாவட்ட மட்ட போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளார். 2012ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய அரச ஓவிய சிற்ப கண்காட்சி மாவட்ட மட்ட போட்டியில் பங்கேற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளமை இவர் திறமைக்கு சான்றாகும். ஓவியக் கலைக்கு தம்மை அர்ப்பணித்துள்ள இவ் இளம் கலைஞரின் கலை ஆர்வம் பெருமை கொள்ளத்தக்கது.

இக் கலைஞரின் ஓவியக் கலையினை பாராட்டி கௌரவிக்கும் முகமாக மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2012ம் ஆண்டு ஓவியத்துறைக்காக கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறது.

# பேரவைச் சின்னத்தின் விளக்கம்

நந்தி : சுயம்புலிங்க திருத்தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமையப் பெற்ற பிரதேசம்.

விளக்கு : தெளிவையும் ஒளியையும் வெளிக்காட்டுகின்றது.

சூரியன் : தன்னை மறைத்துக் கொள்ளும் படுவான் கரைப் பிரதேசத்தைக் காட்டுகின்றது.

நெற்கதிர் : இப் பிரதேச மக்களின் பிரதான தொழிலான விவசாயத்தை வெளிப்படுத்துகின்றது.

புத்தகம் : மக்களின் கல்வி மேம்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

மலைகள் : குறிஞ்சி நிலத்தை வெளிப்படுத்துகின்றது.

கோபுரம் : இந்துக்களினதும் அவர்தம் ஆலயத்தொடர்பினையும் உணர்த்துகின்றது.

ஏர், பசு : கால்நடை வளர்ப்பினையும் உழவுத் தொழிலையும் எடுத்தியம்புகின்றது.

நீர் : நீர்வளத்தை வெளிப்படுத்துகின்றது.

நாதஸ்வரம், வீணை, மேளம்/மத்தளம், உடுக்கை : பிரதேச கலைப்பாரம்பரியத்தை உணர்த்துகின்றது.

# நன்றி நவிலல்

பலதரப்பட்ட கலைஞர்களையும், கலை ஆர்வலர்களையும், கலை கலாசார பண்புகளையும் உள்ளடக்கிய இப் பிரதேசத்தில் கலாசார விழாவினை நடாத்துவதற்கு முன்னோடியாக நின்று பல வழிகளிலும் ஆலோசனைகளை வழங்கி ஊக்கமளித்த பேரவையின் தலைவராகிய பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா-வில்வரத்தினம் அவர்களுக்கும்.

சுயம்பு மலர் வெளியீட்டுக்கான நிதியுதவியினை வழங்கிய வேள்விசன் நிறுவனத்திற்கும், மலருக்கான ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள், வழங்கிய பெருந்தகைகளுக்கும், சுயம்பு மலருக்கான ஆக்கங்களை வழங்கிய கலைஞர்கள், ஆய்வாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


மேலும் கலாசார விழா போட்டிகளில் பங்குகொண்ட, மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள், கலை மன்றங்கள், போட்டி நிகழ்வில் பக்கச்சார்பற்று நடுநிலையாக நின்று நடுவர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்த அறிஞர்கள்,விழா சிறப்பாக இடம் பெற நிதி சேகரிப்பில் ஈடுபட்ட கிராம சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நிதியுதவி வழங்கிய சேவாலங்கா நிறுவனத்தினர், மற்றும் அரச,அரசசார்பற்ற நிறுவனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஆலயங்கள், ஏனைய அமைப்புக்கள் பொதுமக்கள், நலன் விரும்பிகளுக்கும்.

விழா சிறப்புற நடைபெற பலவழிகளிலும் பாடுபட்டு உழைத்த, பிரதேச செயலக அலுவலக, வெளிக்கள, சமுர்த்தி, கிராம சேவை உத்தியோகத்தர்கள், அலுவலக பணியாளர்கள், கலாசாரப் பேரவை உறுப்பினர்கள், ஏனைய கலைஞர்கள் யாவருக்கும்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் விழாவை சிறப்பிக்க வருகை தந்த பிரதம, சிறப்பு, கௌரவ, அழைப்பு அதிதிகள்,இலக்கிய ஆய்வாளர்கள், கலை ஆர்வலர்கள், மற்றும் பத்திரிகை, தொலைக் காட்சியாளர்கள்.

இவ்வாறு பல வழிகளிலும் உறுதுணையாக நின்று உதவிய அன்பு உள்ளங்கள் யாவருக்கும் நன்றியுரைக்க மறந்திருப்பினும் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

.... நன்றி ....



சுயம்பு மலருக்கான நிதி அனுசரணை

World Vision

ி அச்சகம், களுதாவளை. 0778842223